விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 24 ஞாயிற்றுக்கிழமை (07.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 170

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-1187)

# 20க்குத் தடைவந்தால் நாடாளுமன்றம் கலைப்பு

## ஜனாதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20ஆம் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் தடை ஏற்பட்டால் நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சிவில் சமூக பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் சிலை அகற்றப்பட்டது

(சென்னை)

தமிழ்நாட்டின் நாகபட்டினம் மாவட்டத்தில் உள்ள தெற்குப் பொய்கை நல்லூர் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சிலை நேற்று முன்தினமிரவு அகற்றப்பட்டது.

பொலிஸார் அகற்றியதாக பா.ம.க. கண்டனம் தெரிவித்துள்ளது. கிராமத்தினரே அகற்றினர் என பொலிஸார் தெரி 16 ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் தலைவர் பிரபாவின் கைத்துப்பாக்கி மாயம் !



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பயன்படுத்திய கைத்துப்பாக்கி மாயமாகியுள்ளதாக தகவலகள் வெளியாகியுள்ளன.

பிரபாகரன் பயன்படுத்திய கைத்துப்பாக்கி எங்குள்ளது என்பது பற்றிய தகவல்கள் எதுவும்கிடையாது எனவும தெரிவிக்கப்படுகிறது.

2009-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி நந்திக்கடலில் பிரபாகரன் கொல்லப்பட்ட போது, அவரது பிரத்தியேக ஆயுதங்களுக்கு என்ன வாயிற்று என்பது பற்றிய விபரங்கள் இல்லை. 15 ஆம் பக்கம் பார்க்க....

## மிரட்டும் எம்.பிக்கள்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனையில் கையெழுத்திட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 35 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கை 15 ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழுவின் அறிக்கை ஓகஸ்டில்

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை தயாரித்து வருவதாக அதன் செயலாளர் ஹோவா சலகே 15 ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க்கட்சியின் பிரேரணைக்கு முகம் கொடுக்க அரசு தயார்!

### அமைச்சர் ஜோன் அமரதுங்க நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுப்பதற்கு தயார் நிலையிலுள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் ஜோன் அமரதுங்க 15 ஆம் பக்கம் பார்க்க....




## அழகான ஆடையை தைத்து பகல் கனவில் உள்ளார் நிமால்

### அமைச்சர் சஜித் கிண்டல்

(கொழும்பு)


எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா பிரதமர் நாற்காலியில் அமர அழகான ஆடை ஒன்றை தைத்து வைத்துள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் தொடர்பில் உடன்படிக்கை எதுவுமில்லை என்று தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் கூறுவதுடன் அப்படியான உடன்படிக்கை இருந்தால் அதனை நாட்டுக்கு வெளியிடுமாறும் கூறுகிறார்.

நிமால் சிறிபால டி சில்வாவுக்கு இந்த விடயங்கள் குறித்து புரிதல் இல்லாதிருப்பது தொடர்பில் நான் ஆச்சரியமடைகின்றேன். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பக்கத்திலேயே நிமால் சிறிபால டி சில்வா 16 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி - பிரதமர் நாளை சந்திப்பு !



(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தின் 20-வது திருத்தச் சட்டம் சம்பந்தமாக ஏற பட்டுள்ள நெருக்கடியான நிலைமை குறித்து இறுதி இணக்கப்பாட்டுக்கு வருவதற்காக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் நாளையும் நாளை மறுதினமும் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன. இரு தலைவர்களுக்கும் இடை 16 ஆம் பக்கம் பார்க்க....

SONY
32"
SONY
வட்டி இல்லை
விசேட விலை
ரூ.54,999
SAMSUNG
SMUA32H4100
32"
SAMSUNG
வட்டி இல்லை
விசேட விலை
ரூ.54,999
SINGER®
32"
வட்டி இல்லை
விசேட விலை
ரூ.49,999
TCL
32"
The Creative Life
விசேட விலை
ரூ.39,999
SISIL WORLD
இச் சலுகை சிசில் வேல்ட் இடம் இருந்து
இலவசம்
Dialog DISH
TCL 28"
TCL 24"
வட்டி இல்லை
விசேட விலை ரூ.35,999
விசேட விலை ரூ.26,999
இல.106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212219291
இல.125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் தொ.பே.0212242335
(C-1191)
இல.17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே.0212283755
இல.106, கண்டி வீதி, வவுனியா. தொ.பே.0778561406
மூன்று வருட உத்தரவாதம் இலவசம்
நிபந்தனைக்கு உட்பட்டது

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயம் கிடைக்காவிடின் ஜெனிவாவில் தீக்குளிப்பேன்

# அனந்தி எச்சரிக்கை



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் உரிய நியாயம் பெற்றுக் கொடுக்காவிடின் தான் ஜெனிவா சென்று உடலுக்கு நெருப்பு வைத்துக் கொள்ளப் போவதாக அனந்தி சசிதரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது கணவர் எழிலன், அப்போதைய தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியின் மகள் கனிமொழி தொலைபேசியில் அழைத்து கூறிய பின்னரே இராணுவத்திடம் சரணடைந்ததாக எழிலனின் மனைவி, வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

விசேட செவ்வியொன்றை வழங்கிய அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் தனக்கும் தனது மக்களுக்கும் உரிய நியாயம் பெற்றுக் கொடுக்காவிடின் தான் ஜெனிவா சென்று உடலுக்கு நெருப்பு வைத்துக் கொள்ளப் போவதாக அனந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இம்மாதம் இடம்பெறவுள்ள மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்திலும் எதிர்காலக் கூட்டங்களிலும் அனந்தி கலந்து கொள்ளவுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயான அவர், தான் இறந்த பின் எப்படி வாழ வேண்டும் என்பதை தனது பிள்ளைகளுக்கு கற்பித்து வருவதாகக் கூறியுள்ளார்.

ஜெனிவா கூட்டத்தொடர் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாத இறுதி வாரத்தில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி கல்வயல் கோவிலடியைச் சேர்ந்த ஆறு ஆண் பிள்ளைகளின் தந்தையான ச.சபாரத்தினம் (வயது 55) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்ட குடும்பஸ்தர் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் தேடிச் சென்றுள்ளனர். இதன்போது நேற்றுக்காலை 6.30 மணியளவில் கெருடாவில் இல்லாறை குளத்தடியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் காணப்பட்ட இடத்தில் தீப்பெட்டி, வெறுமையான மதுப்போத்தல், எரிந்த நிலையில் பிளாஸ்ரிக் போத்தல் என்பன தடயங்களாக பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரியில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-3,29)

# கவுணாவத்தையில் நேற்று வேள்வி 400 கடாக்கள் வெட்டப்பட்டன



(யாழ்ப்பாணம்)

கருகம்பனை கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற வேள்வியில் 400 இற்கும் மேற்பட்ட கடாக்கள் வெட்டப்பட்டன.

நேற்று சனிக்கிழமை காலையில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வைரவருக்கு பொங்கல் இட்டு படையல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து வேள்வி இடம்பெற்றது. வேள்விக்காக நேற்று அதிகாலை முதல் பொது மக்கள் கோவிலுக்கு உழவுயந்திரங்கள், லாண்ட் மாஸ்ரர்கள் மற்றும் கால்நடையாகவும் கடாக்கள் கொண்டுவரப்பட்டது.

காலை முதல் தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி எஸ்.நந்தகுமார் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் கடாக்களை பரிசோதனை செய்து வெட்ட அனுமதி வழங்கினார்கள்.

காளை என்று அழைக்கப்படும் கடாய் வெட்டப்படும் இடம் நீதிமன்றத்தின் பணிப்புக்கமைவாக மூடிக் கட்டப்பட்டிருந்தது. தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி நந்தகுமார் கடா வெட்டும் காளை என்ற இடத்தில் நின்று உரிய விதிமுறைகளுக்கு அமைவாக கடாக்கள் வெட்டப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்தார்.

ஆலயத்தில் சுமார் 400 இற்கு மேற்பட்ட கடாக்களும் முன்னூறு வரையிலான கோழிகளும் வெட்டப்பட்டன. அத்துடன் ஒரு தொகுதி கோழிகள் உயிருடன் ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டு ஏலத்தில் விடப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

ஆலய சுற்றாடலில் பாதுகாப்புக் கருதி இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஞ்சுள டி சில்வா தலைமையிலான சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (எ-11)

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
German Language Academy
தற்பொழுது ஜேர்மன் கல்லூரி பலாலி வீதியில் இருந்து ஆரியகுளம் சந்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய பிரிவுகள் வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளன. பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்.
ஆரியகுளம் சந்தி,
(பன்சாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.
0779707322
(650)

# தேர்தலுக்கு முன் உயர்தரப் பரீட்சை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தல்!

இவ்வருடம் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தடை ஏற்படாதவகையில் தேர்தலை நடத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

தேர்தல் மற்றும் அதன் பிரசார நடவடிக்கையினால் தேசிய பரீட்சை நடவடிக்கைகளுக்கு பல்வேறு தடைகள் இதற்கு முன்னர் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தினுள் பொது தேர்தலை நடத்துவதற்கான பேச்சு வார்த்தைகள் இடம் பெறுகின்றன.

கடந்த காலங்களில் ஒகஸ்ட் செப்டெம்பர் மாதங்களில் தேர்தலை நடத்தியமையினால் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

மாணவர்கள் போன்றே ஆசிரியர்களுக்கும் பரீட்சை நடவடிக்கைகளின் போது சிக்கல் நிலை ஏற்பட்டது.

மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கும் உயர்தர பரீட்சையின் போது அதற்கு தடை ஏற்படும் வகையில் தேர்தலை நடத்த நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க முடியாதென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்வரும் பொது தேர்தலை உயர்தர பரீட்சைக்கு முன்னர் நிறைவு செய்து விடுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்வதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-11)

தொழில் வாய்ப்பு
பல வேலை வாய்ப்புக்கான வெற்றிடங்கள் இன்றே தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 18000/=, 49000/=,(தொழில் -அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகள் (கோடியல், கிளவுஸ்,பால்மா, T.shirt.) துறைமுகம், விமான நிலையம், வாகன சாரதிகள், இலக்றீசன், பெயின்டர், மேசன் (கம்பி, செடலிங்) மற்றும் தச்சு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள். வயது 18-50 ஆண், பெண் உணவு தங்குமிடம் குறைந்த விலைகளுடன். விசேடம் பாமசிகளில் வேலை செய்யக்கூடிய பெண்கள் வவுனியாவில் உள்ளோர் விரும்பத்தக்கது. (சி-1196) தொடர்பு:-077 683 8231




பாராட்டி வாழ்த்துகின்றோம்
திரு. வேலுப்பிள்ளை யோகேஸ்வரன்
யாழ்.மத்திய கல்லூரி ஆங்கில ஆசிரியர் திரு.வேலுப்பிள்ளை யோகேஸ்வரன் 26.05.2015 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் MA in TESL கற்கை நெறியில் பட்டம் பெற்றமையை இட்டு உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-அப்பா, அம்மா, அத்தான், அக்கா
மருமக்கள்-சயந்தன், பாரதி, சபேசன், சஜீவன், வேணுகா (அளவெட்டி)
பெறாமகன்-வேணுகோபன் (வவுனியா)





அக்ஷயா
அழகுக் கலை பயிற்சியகம்
- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன.
- சாறிவுளவுஸ் கட்டிங் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட் கறுப்பு, வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு
- உதட்டு கறுப்பு, கழுத்து கறுப்பு, கருவளையம் நீக்கும் கிறீம்
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா குளிசை டொனிக்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- பேசியல், அயனிங், கிளிநப் செய்து கொள்ளலாம்.

0772106155, 0775387973 அக்ஷயா நாவலர் றோட் 221, பிறவுண் றோட் சந்தி (அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ். (674)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
- 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
- வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்



11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்
3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்துகொடுக்கப்படும்.
திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.) 021 222 7835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
A9 வீதி, கிளிநொச்சி (கொமர்ஷல் வங்கி முன்பாக)
பிரதான வீதி, சாவகச்சேரி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNP வங்கிக்கு அருகாமையில்)
TCN EXPRESS இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6
(673)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு ஆரிகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறஉள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (இ-3)


## தேவை

கொழும்பை அண்மித்த பிரதேசங் களில் ஜேம்/ டொபி/ பிஸ்கட்/ கோடியல்/ பால்மா/Pvc/சொக்லெட்/காமெண்ட்.... போன்ற பலதொழி ற்சாலைகளில் உற் பத்தி/ லேபல்/ பொதியி டல் பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= , 38000/= உணவுதங்குமிடம்குறைந்தவிலைகளில் நண் பர்கள் குழுக்கள் தம்பதியினர் ஒரே தொழிற் சா லையில் வருகை அன்றே வேலை. 077 817 6234 (சி- 1116)

## நிரந்தர தொழில் வாய்ப்பு

எதிர்காலத்தில் நிரந்தர தொழில் ஒன்றினை பெற உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 18000/=, 49000/=, (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் பிரதான தொழிற்சாலைகள் (ஜேம், டொபி, சொக்லட்,யோக்கெட், பிளாஸ்டிக், காமெண்ட்....) தனியார் துறைமுகம், விமான நிலையம், வாகன சாரதிகள், இலக்ரீசன், வெல்டர் ,தச்சு,பெயின்டர்,மேசன் (கம்பிபாஸ்,செடலிங்)போன்ற பல வெற்றிடங்கள் 17-50வயது ஆண், பெண் தேவை. உணவு,தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை. (சி-1118) தொடர்பு:-077 111 6770

## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உள்ள வலம்புரியின் உப அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

- அலுவலக உத்தியோகத்தர் (ஆண்)
- கணனி இயக்குநர் (ஆண்)
- அலுவலகப் பணியாளர் (ஆண்)

**தகைமை**

- கல்வித் தகைமை: க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- வயது: 25-35
- உப அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி**
**இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-பொது முகாமையாளர்

# நியூ நெல்சன் லேணர்ஸ்

# New Nelson Learners

**அரச அங்கீகாரம் பெற்ற A தர முதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை இடமாற்றம்**

**நெல்லியடியில் நவீன வசதிகளுடன் இல. 127, பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் இயங்கி வந்த எமது சாரதிப் பயிற்சிப் பாடசாலை இன்று முதல் இல. 97A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி என்னும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது.**



- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிசூழ்ய பயிற்சி நேரங்கள், அதிசூழ்ய பயிற்சிக் காலங்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்கள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்
- இரவு நேர சாரதிப் பயிற்சி
- எமது அலுவலகம் காலை 8 மணி முதல் இரவு 8.30 மணிவரை திறந்திருக்கும்.

**இன்று பதிவினை மேற்கொள்ளும் அனைவருக்கும் 10 % கட்டணக் கழிவு வழங்கப்படும்!!**

நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

**கிளைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| இல.97A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 1393, 077 111 3382 | காளிகோயில் வீதி, சாவகச்சேரி. 021 492 3114 077 761 1686 | இல. 89, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 021 222 4527, 077 358 1916 | பஸ் நிலையம், சுன்னாகம். 077 715 0097 021 492 3732 | பிரதான வீதி, வல்வெட்டித்துறை. 077 557 3711 021 492 3733 |


# இராசி பலன்

07.06.2015
(வைகாசி 24, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 3.40 மணிவரை
திருவோணம் மாலை 5.38 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
உலக தொல் பொருளியலாளர் தினம்

வளவன்

**மேடம்:** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சிதரும், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தேவையற்ற விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்:** உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும்

**சிம்மம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பிறருக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** உங்களின் செயற்பாடுகளுக்கு உறவினர் பக்கபலமாக இருப்பர், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், முயற்சிகளில் அதிக பிராயாசை காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்களை எதிர்நோக்க வேண்டி வரலாம், சயன சுகக் குறைவான நாள், உறவினர்களால் சில மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மீனம்:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன நன்மையுண்டு, உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனாதிபதி கேட்டுக்கொண்டால் விவாதத்தை பிற்போடத் தயார்

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கில் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தை தாமதப்படுத்துமாறு ஜனாதிபதி எம்மிடம் கோரினால் அதனை செய்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பிக்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பிக்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் சில தினங்களில் இந்த பிரேரணை மீதான விவாதம் கோரப்படலாம். இந்நிலையில் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கில் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தை தாமதப்படுத்துமாறு ஜனாதிபதி எம்மிடம் கோரினால் அது குறித்து சாதாகமான தீர்மானம் எடுக்க தயாராக இருக்கின்றோம்.

அதாவது 20 ஆவது திருத்தச் சட்டமாக வரவுள்ள தேர்தல் முறை மாற்றத்தை கருத்திற் கொண்டும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தும் இதனை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த கோரிக்கையை முன்வைத்தால் நாம் அதனை செய்ய தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சிரிலிய கணக்கில் அரச பணமில்லை

சிரிலிய சவிய கணக்கில் அரசாங்க பணம் ஒரு சதம் கூட இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சிரிலிய சவிய அரசசார்பற்ற அமைப்பிற்கு உரியவர்கள், சுதுவெல்ல மக்கள் வங்கியிலுள்ள கணக்கை நிறுத்தி வைத்துள்ளனர். அத்துடன் இது தொடர்பில் கடந்த நாட்களில் எனது மனைவியிடம் நிதி மோசடி விசாரணைப்பிரிவினர வாக்குமூலமொன்றை பதிவு செய்து கொண்டுள்ளனர் என மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (துனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000/- - 35,000/- வரை தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை, வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

**076 639 8366**

(662)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் 13ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இப்பகிரங்க ஏல விற்பனை மு.ப.10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

ஏலத்தில் மணலை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவேண்டும் என யாழ். நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

(இ-3)

# மரண அறிவித்தல்

## அமரர் சோமசுந்தரம் பாஸ்கரன்



கரணவாய் கிழக்கை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பாஸ்கரன் 01.06.2015 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி) மற்றும் லீலாவதி ஆகியோரின் அன்பு மகனும், சந்திரிக்கா (கனடா), அஜந்திகா (நகரசபை ஊழியர், பருத்தித்துறை), ஜெனோதினி (ஆசிரியை, யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.06.2015 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கேணியடி,**
**விக்னேஸ்வரா வீதி,**
**தெல்லியடி.**
**T.P:- 077 590 2235**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்களே தொழிலில்லா பிரச்சினையா?

இதோ இதற்கான தீர்வு இலங்கையில் அனைத்துப் பிரதேசங்களிலும். உடனடி வேலைவாய்ப்பு. ஜேம், டொபி, பிஸ்கட், ஐஸ்கிறீம், பால்மா போன்ற பிரிவுகளில் லேபல் பொதியிடல் போன்ற உடனடி வேலைவாய்ப்பு உண்டு. ஆண், பெண் இருபாலாரும் வயது (17-50). உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். மேலதிகமாக வருகைக்கான கொடுப்பனவு, மேலதிக நேர வேலை மற்றும் நாள் சம்பளமாக (1000/=) மற்றும் வருடாந்தம் போனஸ் ஆகியவுடன் மாதாந்த சம்பளம் (25000-35000) மேல் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். இன்னும் 75 வேலை வாய்ப்புக்கள் மட்டுமே உள்ளது. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

077 597 7259, 077 891 0598

## உடனடி வேலைவாய்ப்பு

அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனம் இலங்கையில் அனைத்துப் பிரதேசங்களிலும் எமது தொழிற்சாலைகளில் ஐஸ்கிறீம், ஜேம், டொபி, டிபிடிபி, பிஸ்கட் போன்ற பிரிவுகளுக்கு ஆண், பெண் அனைவருக்கும் உடனடியாக வேலைவாய்ப்பு உண்டு. முன் அனுபவம் தேவையில்லை. வயது (17-50) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். சம்பளம் (25000/=-45000/=) வரும் நாளிலே வேலைவாய்ப்பு உண்டு. தம்பதியினர், நண்பர்கள் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். அரிதாக வேலைவாய்ப்பு உள்ளதால் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

077 401 7543, 072 976 7800, 071 921 5892

## அதிரடிச் சலுகை

**வலம்புரியின் அதிரடிச் சலுகை**

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

**ஆகியவற்றுக்கு 01.06.2015 முதல்**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampuriijaffna@gmail.com

## அன்பு வாசகர்களே !

01.06.2015 முதல் உங்கள் வலம்புரியில்

**செல்ஃ(f)பி**

சிறந்த செல்ஃ(f)பி அனுப்புபவர்களுக்கு வாராந்தம் பரிசில்கள் உண்டு.

நீங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்
photosofvalampurii@gmail.com


## அகதிகளின் கோரிக்கை

இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் உள்ளிட்ட 65 புகலிடக் கோரிக்கையாளர்கள் தமக்கு உதவுமாறு நியூசிலாந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டவிரோதமாக நியூசிலாந்துக்கு கடல் மார்க்கமாக செல்ல முற்பட்ட நிலையில் கடலில் தத்தளித்த இவர்களில் இலங்கை, மியன்மார் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அகதிகள் அடங்குவதாக தெரியவந்துள்ளது.

தாம் தமது நாட்டுக்கு திரும்புவது பாதுகாப்பற்றது எனவும், தமக்கு புகலிடம் வழங்குமாறும் இவர்கள் நியூசிலாந்து அரசுக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

தமக்கு அமைதியான வாழ்வே வேண்டும் என்றும் சில அரசியல் பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளாலேயே தாம் சொந்த நாட்டை நீங்கி வந்ததாகவும் மேற்கு தீமோர் - குப்பாங் தடுப்பு முகாமில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ள குறித்த அகதிகளில் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக நியூசிலாந்து ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இவர்கள் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் மிகவும் சோர்வடைந்துள்ளதாகவும், பெரும் சிரமம் மற்றும் அழுத்தத்திற்கு மத்தியிலேயே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இதுவரை உதவி கோரிய எந்தவொரு வேண்டுகோளும் தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என நியூசிலாந்து குடிவரவு அமைச்சர் தெரிவித்தார். (இ-5)

## பேசும் படம்-67

இடம்: மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



**மனிதமும் மனிதாபிமானமும் இன்னமும் இறக்கவில்லை**

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
வி. ஜெயப்பிரகாஸ்
(mrtc)
கல்மடு, வவுனியா


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: civil engineering/ அரச தொழில்<br>தொ.இ: B/772 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 18 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1349 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 16<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/777 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 50 செவ் 12 இல்<br>உயரம்: 125cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1351 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 23<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/778 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 66 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1354 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA, MBA<br>லண்டன் PR<br>தொ.இ: B/780 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசிரீடம்<br>கி.பா: 39 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/1358 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(C-1138)
தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்

## வாடகைக்கு

83, நக்கா வீதி, சுண்டுக்குளியில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. பலா, தென்னை, மா போன்ற பயன்தரு மரங்களும் உண்டு.

தொடர்புகளுக்கு:- [illegible]
(669) 077 [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தபிரஜைகள் பேரவை யாழில் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மூத்த பிரஜைகள் பேரவை தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் எம்.இராமமூர்த்தி கருத்து தெரிவிக்கையில்,

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் முதியோர் நலத் திட்டங்களை நோக்கமாக கொண்டு கிராம சேவகர் மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் பிரதேச செயலக ரீதியில் உள்ள சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா அமைச்சால் வழங்கப்பட்டு வருகின்றது.

அதேபோன்று மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்படும் சங்கங்களுக்கு தலா 2இலட்சம் ரூபா வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சங்கங்களின் ஊடாக மூத்த பிரஜைகள் தமது தேவைகள் என்ன என்பதை தெரியப்படுத்தி அதற்கான உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் இந்த சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் கிராமங்களில் நடைபெறும் ஒப்பந்த அடிப்படையிலான வேலைகளை செய்யமுடியும். சுயதொழில் உதவிகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து தலா இரண்டு மூத்த பிரஜைகள் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை இப்பேரவை தற்போது அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(இ-3-9)

# யாழ். பல்கலை. ஊழியர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

## திருமணமாகி 5 மாதங்களேயான நிலையில் சோகம்

**(யாழ்ப்பாணம்)**

**வடமராட்சி இமையாணன் புறாப்பொறுக்கி பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் யாழ்.பல்கலைக் கழக ஊழியர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.**







நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் புலோலி தெற்கைச் சேர்ந்த செல்வராஜா பிரசன்னா (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்துச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிதனியார் பேருந்து சென்றுகொண்டிருந்தது. தனியார் பேருந்துக்குபின்னால்மோட்டார்சைக்கிளில் பிரஸ்தாப பல்கலைக்கழக ஊழியர் சென்றுகொண்டிருந்தார்.

இந்நிலையில் புறாப் பொறுக்கி பகுதியில் மோட்டார் சைக்கிளும் பேருந்தும் எதிர்பாராத விதமாக மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

விபத்தின் போது பிரஸ்தாப நபரின் தலைக்கவசம் கழன்றதால் தலையில் காயம் ஏற்பட்டதுடன் கால் ஒன்றும் முறிந்துள்ளது.

உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது இடைவழியில் அவரது உயிர் பிரிந்துள்ளது. இவர் திருமணமாகி 5 மாதங்களேயான நிலையில் இக்கோர விபத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

# எமது பிரதான பிரச்சினைகளை மறக்கடிப்பதற்கு திரைமறைவில் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுப்பு

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குற்றச்சாட்டு





(யாழ்ப்பாணம்)

வடக்கில் கோஷ்டி மோதல்கள் மற்றும் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களை அதிகரித்து எமது அடிப்படை பிரதான பிரச்சினைகளை மறக்கடிப்பதற்கு திரைமறைவில் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு, கிழக்கு அமைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் தற்போது காணப்படுகின்ற சமகால சூழ்நிலைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குறித்த இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.இன்பம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே யேசுதாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் தமிழ் மக்களாகிய எமது உரிமைகளை தக்க வைப்பதற்கு எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பில் ஆராயப்படல் வேண்டும்.

முன்பு அரசியல் பிரச்சினைகள் பற்றி பேசி வந்த, போராடி வந்த நாம் இன்று வன்முறைகள், பாலியல் வன்புணர்வு சம்பவங்கள், வள்வெட்டுச் சம்பவங்கள் பற்றி பேசி வருகின்றோம்.

இதன்மூலம் 60 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வருகின்ற அரசியல் உரிமைப் போராட்டங்கள் மறக்கடிக்கப்பட்டுள்ளன.

பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் பாரதூரமான குற்றங்களாக காணப்படுகின்ற நிலையில் இங்குள்ள அரசியல் தலைவர்கள், சமூக அமைப்புக்கள் இணைந்து அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்.

அல்லது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும் என்பது தொடர்பில் ஆராயப்படல் வேண்டும்.

எமது சமூகத்தில் நடைபெறுகின்ற குற்றங்களை நாம் கட்டுப்படுத்தா விட்டால் அதற்குள் வெளியாரின் தலையீடு அதிகரிக்கப்பட்டு எமது உரிமை பிரச்சினைகள் மறக்கடிக்கப்படும் சாத்தியக் கூறுகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இங்கு நடைபெறும் பாலியல் வன்புணர்வுகள் தொடர்பான நீதிக்கான போராட்டத்தை தென்னிலங்கை அரசியல் வாதிகள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த உட்பட தமக்கான தேர்தல் பிரசாரமாக மாற்றியமைக்க முயற்சிக்கின்றனர்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தை வன்முறை கொண்ட பிரதேசமாக உருவகப்படுத்தி மீண்டும் புலிகள் என்ற கோசத்தை முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் தான் தமிழ் மக்களாகிய நாம் சிந்தித்து செயற்பட வேண்டிய காலகட்டத்திலுள்ளோம்.

எமது இளைஞர்கள் வன்முறையை கையிலெடுக்காமல் போராட முன்வரல் வேண்டும்.

இங்கு மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு என்பனவும் கணவனை இழந்த பெண்கள் சொல்லொணா துன்பங்களை தற்போதும் அனுபவித்து வருகின்றனர் என்பதனையும் தென்னிலங்கை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

இதன்மூலமே எமக்கான தீர்வினை நோக்கி பயணிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)





# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தின் சிவன் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-7)

# விளக்கவுரை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்சின்மயா மிஷனின் "சின்மய ஞானவேல்" ஆச்சிரமத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை "கேன" உபநிடதம் மற்றும் 7.45 மணி முதல் 8.45 மணிவரை "தியான யோகம்"- ஸ்ரீமத் பகவத்கீதை அத்தியாயம் - 6 ஆகியன பற்றிய விளக்கவுரை வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளினால் வாராந்த விளக்கவுரை இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்க்கால்களில் கழிவு நீர்த்தேங்கி தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம்



(கிளிநொச்சி 1)

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் மழை நீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கொங்கிறீட் வாய்க்கால்களில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம், நுளம்பு பெருக்கம் ஆகியவை ஏற்பட வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைநீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கொங்கிறீட் வாய்க்கால்களில் உணவகங்களின் கழிவுநீர், கிளிநொச்சி பொலிஸ் நிலைய உணவகக் கழிவு நீர் என்பன விடப்படுவதால் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் கொசுகள், இலையான்கள் அவற்றின் மீது இருந்து விட்டு உணவுகளில் வந்து அமர்வதால் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமாகில் கிளிநொச்சி குளமும் நிலத்தடி நீரும் மாசுபடும் அபாயம் ஏற்படுமென சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கழிவு நீர் ஏ-9 வீதி இருமருங்கிலும் கனகபுரம் வீதி வாய்காக்லிலும் புகையிரத வீதி வாய்க்காலிலும் கிளிநொச்சி பொதுச்சந்தை பகுதியிலும் விடப்படுவதால் அவ்விடங்களில் இருந்து நுளம்புகள் பெருக்கெடுப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கீல்வாய்களில் தேங்கி நிற்கும் கழிவு நீரானது மாரிகாலங்களில் கிளிநொச்சி குளத்தை சென்றடைகின்றது.

இதனால் குளத்து நீர் மாசுபடுவதுடன் நிலத்தடி நீரும் பாதிக்கப்படுமென பொதுமக்கள்அச்சம் தெரிவிக்கின்றனர்.

இக்கழிவுநீர் அகற்றப்படுவதாயின் உணவகங்களில் மூடிய பாதுகாப்பான குழிகள் அமைக்கப்பட்டு அதனுள்ளே கழிவுநீர் விடப்பட வேண்டும்.

ஆனால் கிளிநொச்சி மத்திய சுற்றாடல் அதிகார சபை,பிராந்திய சுகாதார பணிமனை,கரைச்சி பிரதேச சபை என்பன இவ்விடயத்தில் அக்கறை கொள்ளாதது ஏன் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் அனைத்து தரப்பினரும் கூடிய கவனமெடுத்து சுற்றுச் சூழலைப் பாதுகாக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் . (2-277)

## திருக்கேதீச்சர ஆலய பாலாலய குடமுழுக்கு பெருவிழா

(மன்னார்)

மன்னார் மாவட்ட மாதோட்ட சிவபூமி நன்னகர் அருள்மிகு கௌரி இணைதிருக் கேதீச்சரநாதர் ஆலய பாலாலய குடமுழுக்குப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப.10.30 மணிவரையுள்ள நேரத்தில் நடைபெறவு ள்ளது.

இப்பெருவிழாவில் அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு அருளைப்பெற வேண்டுமென இவ்வாலய திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் இந்திய அரசின் 326மில்லியன் நிதியுதவியுடன் திருக்கேதீச்சர ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் இன்றைய தினம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட கட்டடப் பொருட்களைக் கொண்டே குறித்த புனரமைப்பு பணி கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# கப்ரக வாகனம் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு

## சாரதி கைது

(மன்னார்)

மன்னார் தள்ளாடி சந்தியில் இருந்து வங்காலைக்குச் செல்லும் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில், 55 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது இது தொடர்பில் தெரியவருவதாவது,

சிறுநாவற்குளம் கிராமத்தைச் சேர்ந்த குறித்த நபர் வங்காலை பகுதியில் மாடுகளை மேய்த்து விட்டு, தள்ளாடி பிரதான வீதியூடாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் வேகமாக வந்து கொண்டிருந்த கப்ரக வாகனம் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவ்வீதியால் பயணித்தவர்களின் உதவியுடன் குறித்த சடலம் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொட்றிக்கோ கொண்ட பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கப்ரக வாகனத்தின் சாரதியையும் மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளதோடு மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (2)




மலையகத்தில் ஏற்றுக்கொண்டது போல்

# துணை ஆசிரியர்கள் நியமனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும்

## வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவிப்பு

(புளியங்குளம்)


முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நாம் புதிய நியதிச் சட்டத்தை வடக்கு மாகாண சபையில் இயற்றி அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் கௌரவமான அடிப்படை வசதிகளுடன் சேவை செய்யக்கூடிய நிலை உருவாக பாடுபடவேண்டியுள்ளது.

அவர்களுக்கு மலையகத்தில் ஏற்றுக கொண்டது போல் துணை ஆசிரியாகள் என்ற அடிப்படையிலாவது நியமனம் வழங்கப்பட வேண்டியுள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வின் ஐந்தாவது நலத்திட்ட நிகழ்ச்சி அண்மையில் புளியங்குளம் வலயக் கல்வி பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு அவர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், வன்னி பிரதேசத்தின் முன்பள்ளி ஆசிரியர்களின் ஒரு பகுதியினரை அவர்களது போரின் பின்னரான



பொருளாதார நலிவு நிலையை சாதகமாக பயன்படுத்தி சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் உள்வாங்கியது மகிந்த அரசு.

முன்பள்ளி நிர்வாகம் நேரடியாக வடக்கு மாகாண சபையின் கீழ் வருகிறது. அவர்களை இராணுவத்தின் கீழ் கொண்டு வருவது அங்கு கல்வி கற்க வரும் இளம் சிறார்களிடத்தேயே மனோவியல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு பிழையான உதாரணமாகும்.

காலத்திற்கு காலம் அரசின் அடக்குமுறை சிந்தனைகள் புதிய புதிய வடிவங்களை எடுத்து வந்ததை நாம் அறிவோம். இன்று பிஞ்சுக் குழந்தைகள் படிக்கும் முன்பள்ளியிலும் இராணுவத்தின் தலையீடு இருப்பது ஏற்புடையதல்ல.

எனவே இதற்காக நாம் ஒரு புதிய நியதிச்சட்டத்தை வடமாகாண சபையில் இயற்றி அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் கௌரவமாக அடிப்படை வசதிகளுடன் சேவை செய்யக்கூடிய நிலை உருவாக பாடுபடவேண்டியுள்ளது. அவர்களு க்கு மலையகத்தில் ஏற்றுக் கொண்டது போல் துணை ஆசிரியர்கள் என்ற அடிப்படையிலாவது நியமனம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

எமது கலாசாரம் சீரழிக்கப்படும் நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது. எமது சமூக கட்டமைப்பால் இராணுவ, துணை இராணுவ அணிகளின் அநாவசிய தலையீடுகள், மதுபாவனை ஊக்குவிப்புகள் சட்டஆட்சிக்கு புறம்பான நடவடிக்கைகள் போன்றவை மறை முகமாக எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களில் புற்று நோய் போல் ஊடுருவி வருகிறது.

ஆசிரியர் சமுதாயத்தின் கையிலேயே இன்றைய கிராமிய மட்ட சீரழிவுகளை அகற்றி ஒரு சிறந்த தமிழ் கலாசார பண்பாடுமிக்க சமுதாயத்தை கட்டியெழுப்பும் ஆளுமை மிக்க சமூக பொறுப்பு உள்ளது. (2)

# 10 இலட்சம் ரூபா வேலைத்திட்டத்தின் கீழ் சனசமூக நிலையத்திற்கு அடிக்கல்நாட்டல்



(பனிக்கன்குளம்)

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் கிராமத்திற்கு பத்து இலட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பனிக்கன் குளம் கிராமசேவையாளர் பிரிவில் அமைக்கப்படவுள்ள சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பனிக்கன்குளம் கிராமசேவையாளர் வே.ஜெயசீலன தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் இ.குருபரன், முல்லைத்தீவு மாவட்டசெயலக திட்டமிடல் பணிப்பாளர் வி.முகுந்தன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர்,உத்தியோகத்தர்கள் மற்றும பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

இந்நிகழ்வில் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராமத்தினுடைய அபிவிருத்தி உத்தியோகத்தர் [illegible] கலந்துகொண்டனர். (2-281)

# முதியோர் அபிவிருத்தி பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முதியோர் அபிவிருத்திப் பேரவை மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் வழிகாட்டலில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந் திர னின் தலைமையில் மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் [illegible] மணிக்கு நடைபெற்றது.

சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரிகள் பங்கேற்புடன் நடைபெற்ற நிகழ்வில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவராக அ.கனகரத்தினம், செயலாளராக இ.புவனேந்திரன்,பொருளாளராக சி.சந்திரராஜா, உபதலைவர்களாக அ.ரகுபதி, கா.இரட்ணாயகம், உப செயலாளராக கு.சிறீதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக குழு உறுப்பினராக 3 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.(2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாகரனின் சிலையை தமிழகத்தில் அமைக்க வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து



**(சென்னை)**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவச்சிலை அகற்றப்பட்ட இடத்தில், தமிழக அரசு தனது சொந்த செலவில் மீண்டும் அவரின் சிலையை அமைத்துத்தர அரசு முன்வர வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியை அடுத்த தெற்கு பொய்கை நல்லூர் கிராமத்திலுள்ள கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஈழப்போராளி பிரபாகரனின் உருவச் சிலையை பொலிஸார் இரவோடு இரவாக அகற்றியிருக்கின்றனர.

இதன் மூலம் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு அதன் தமிழர் விரோதப் போக்கை மீண்டும் ஒருமுறை அப்பட்டமாக வெளிக்காட்டியிருக்கிறது. தெற்கு பொய்கை நல்லூரில் சேவூதராய அய்யனார் கோவில் அந்த ஊர் மக்களுக்கு சொந்தமான தனியார் நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அக்கோவில் வளாகத்தில் ஊரையும, இனத்தையும் காத்த முன்னோரின் உருவச்சிலைகள் வைக்கப்படுவது வழக்கமாகும். அதன்படி, அக கோவில் வளாகத்தின் ஒரு புறத்தில் கருப்பன் சாமி சிலையையும், மறுபுறத்தில் குதிரையுடன் பிரபாகரன் இருக்கும் சிலையையும் அமைத்த மக்கள் அக்கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தினர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு நாகை மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் அபினவ் குமார் தலைமையில் தெற்கு பொய்கை நல்லூர் கிராமத்திற்குச் சென்ற பொலிஸார், அந்த ஊரில் மின்சாரத்தை துண்டித்துவிட்டு பிரபாகரன் சிலையை மட்டும் அகற்றியுள்ளனர்.

குதிரை சிலை மட்டும் இருக்கும் நிலையில், பிரபாகரன் சிலை இருந்த இடத்தின் மீது வெள்ளை வர்ணம் பூசி அங்கு சிலை இருந்ததற்கான அடையாளமே தெரியாமல் அழித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி, கோவில் அமைந்துள்ள நிலத்தின் உரிமையாளர், கோவில் குடமுழுக்கு குழுவினர் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் அழைத்த பொலிஸார், 'பிரபாகரன் சிலை இங்கு இருப்பது எங்களுக்கு பிடிக்கவில்லை என்பதால் நாங்களே அகற்றிவிட்டோம்' என்று எழுதி தர வேண்டும் என்றும்,

அவ்வாறு செய்யாவிட்டால் அனைவர் மீதும் பொய்வழக்கு பதிவு செய்து வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்து விடுவோம் என்றும் மிரட்டியுள்ளனர். பொது மக்களும் மிரட்டலுக்கு பணிந்து அவ்வாறே எழுதிக் கொடுத்துள்ளனர்.

பொலிஸாரின் இந்த அத்துமீறல் கடும் கண்டனத்துக்குரியது.

தெற்கு பொய்கை நல்லூரில் தனியாருக்கு சொந்தமான நிலத்தில் தான் பிரபாகரன் சிலை அமைக்கப்பட்டிருந்தது. தமிழ் இனத்தைக் காத்தவர் என்ற அடிப்படையில், மற்ற குலசாமிகளுக்கு எப்படி சிலை அமைக்கப்பட்டதோ, அதே போல் பிரபாகரனுக்கு ஊர் மக்கள் சிலை அமைத்துள்ளனர்.

இது முழுக்க முழுக்க ஊர்மக்களின் நம்பிக்கை சார்ந்த விடயமாகும். இதில் தமிழக அரசோ, பொலிஸாரோ தலையிட எந்த உரிமையும் இல்லை. கோவில் வளாகத்தில் பிரபாகரன் சிலை அமைக்கப்படுவதால் யாருக்கும், எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

---

**உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு**

# கழிவுகளை வகைப்படுத்தல் தொடர்பாக யாழில் பிரசார வேலைத்திட்டம் ஆரம்பிப்பு

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் செயற்படுத்தப்படும் பிலிசரு கருத்திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் கழிவுகளை வகைப்படுத்தல் தொடர்பான பிரசார வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் விஜித்தா சத்தியகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சுற்றாடல் தினம் உலகளாவிய ரீதியில் மே மாதம் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த வருடம் "ஏழு பில்லியன் கனவுகள் ஒரு கிரகம் கவனத்தோடு நுகர்வோம்" என்ற தொனிப் பொருளில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் செயற்படுத்தப்படும் பிலிசரு கருத்திட்டத்தின் மூலம் இலங்கையில் உள்ள 125 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு திண்மக் கழிவிலிருந்து கூட்டுப்பசளை தயாரிக்கும் செயற்பாடுகளுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் உள்ள மாநகரசபை உட்பட 17 உள்ளூராட்சி மன்றங்களிலும் நடைபெறவுள்ளது. இலங்கையில் நாளாந்தம் 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன்னிற்கு மேற்பட்ட குப்பை கூழங்கள் உருவாக்கப்படுவதோடு அண்ணளவாக 3 ஆயிரத்து500 மெற்றிக்தொன் குப்பைகள் உள்ளூராட்சி நிறுவனங்களால் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன.

வீடுகள்,பாடசாலைகள் ,அலுவலகங்கள்,நிறுவனங்கள், சந்தைகள் என்பவற்றிலிருந்து உருவாக்கப்படுகின்ற உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுகளை வெவ்வேறாக பிரித்து சேகரிப்பது என்பது கூட்டுப்பசளை தயாரிக்கும் நிலையத்திற்கு அனுப்பிவைப்பதற்கான இலகுவான நடைமுறையாகும். இச்செயற்றிட்டம் உள்ளூராட்சி மன்றங்களின் சிறந்த கழிவு முகாமைத்துவத்துக்கான மிகவும் முக்கியமான ஒரு நடைமுறைஆகும். இந்த விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம் ஒருவார காலத்துக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10பாடசாலைகளில் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்று வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

---

# சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழ்மை பிற்பகல் 2மணியளவில் நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகத்தில் சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் மற்றும் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோவிந்த பிள்ளை வரதராஜமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இதில் கௌரவ விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B1 மாவட்ட உப ஆளுநர் லயன் டீ.ஆர்.வை.தியாகராசா, இ.எஸ்.பி.என்.சக நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் இ.எஸ். பி.நாகரத்தினம் மற்றும் யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை முகாமைத்துவ பணிப்பாளர் வி.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

---

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 140 | 100 | 120 | 100-120 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 50 | 120 | 60 | 120 |
| தக்காளி | 80 | 60 | 100 | 80 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 50 | 50 |
| கோவா | 200 | 100 | 90 | 120 | 100 | 100 |
| கரட் | 240 | 180 | 140 | 280 | 160 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 140 | 120 | 100 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160 | 140 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 100 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 130 | 140 | 120 | 100-140 | 160 |
| வெண்டிக்காய் | 160 | 150 | 80 | 120 | 80-100 | 140 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 160 | 150 | 120 | 100-120 | 150 |
| லீக்ஸ் | 240 | 240 | 150 | 200 | 160 | 180 |
| பீற்றூட் | 120 | 150 | 110 | 140 | 60 | 60 |
| கறிமிளகாய் | 240 | 200 | 120 | 160 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 500 | 300 | 400 | 160-200 | 300 |
| போஞ்சி | 240 | 200 | 200 | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 100 | 80 | 80 | — | 90 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 120 | 120 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 150 | 150 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | 120 | 80 | 50 | 120 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 25 | 20 | 10 | 20 |

---

06.2015 07

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1099 - முதலாவது சிலுவைப் போர்: ஜெருசலேம் மீதான தாக்குதல் ஆரம்பமானது.
- 1494 - ஸ்பெயினும் போர்த்துக்கல்லும் தாம் கண்டு பிடித்த புதிய உலகத்தைத் தமக்கிடையே பகிர்ந்துகொள்ள உடன்பாட்டை எட்டினர்.
- 1654 - பதினான்காம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.
- 1863 - மெக்சிக்கோ நகரம் பிரெஞ்சுப் படையினரால் கைப்பற்றப்பட்டது.
- 1893 - மகாத்மா காந்தி தனது முதலாவது ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1905 - நோர்வே சுவீடனுடனான தொடர்புகளைத் துண்டித்தது.
- 1967 - ஸ்ரேலியப் படைகள் ஜெருசலேம் நகரினுள் நுழைந்தனர்.
- 1981 - ஸ்ரேலிய வானூர்திகள் ஈராக்கின் ஒசிராக் அணுக்கரு உலை மீது குண்டு வீசித் தாக்கி அழித்தன.
- 1991 - பிலிப்பைன்சில் பினடுபோ எரிமலை வெடித்து 7 கி.மீ உயரத்துக்கு அதன் தூசிகள் பறந்தன.
- 2007 - கொழும்பு விடுதிகளிலிருந்து தமிழர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1974 - மகேஷ் பூபதி, இந்திய டெனிஸ் ஆட்டக்காரர்
- 1975 - ஏலன் ஐவர்சன், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர


**இறப்புகள்**

- 1906 - பொன்னம்பலம் குமாரசுவாமி, இலங்கையின் சட்டசபை உறுப்பினர் (பி. 1849)
- 1964 - [illegible] (பி. 1890)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து முடிந்தால் வாக்கெடுப்பு நடத்தவும்

### காமினி ஜயவிக்ரம பெரேரா சவால்



(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் முடிந்தால் வாக்கெடுப்பு நடத்தவும் என அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான தரப்பினருக்கு சவால் விடுத்துள்ளார்.**

நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தி, முடியுமென்றால் வாக்கெடுப்பு நடத்தவும்.

இவ்வாறான நம்பிக்கையில்லா தீர்மானங்களை முன்வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்கள், ஜனாதிபதியையும் பிரதமரையும் மகிந்தவிடம் காட்டிக் கொடுக்க முயற்சிக்கின்றனர்.

பிரபல்யம் அடைவதற்காக இவ்வாறான நம்பிக்கையில்லா தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றன.

எனினும், இவற்றை வாக்கெடுபுக்கு விட மகிந்த தரப்பு அஞ்சுகின்றது என காமினி ஜயவிக்ரம பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.


பிரதமர் ரணிலுக்கு எதிராக நேற்று முன்தினம் நாடாளுமன்ற செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் தெரிவித்துள்ளார். (3-5)

# நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தல் இனிமேல் இலங்கையில் இல்லை

### அமைச்சர் கரு ஜயசூரிய உறுதி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல்கள் இனி இலங்கையில் நடத்தப்படாது என உள்ளூராட்சி மன்ற மற்றும் ஜனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.



இதன்படி கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இலங்கையில் நடைபெற்றது இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலாகும்.

தற்போது ஜனாதிபதிக்கு காணப்படும் அதிகாரங்கள் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் பின்னர் இரத்து செய்யப்படும்.

ஜனாதிபதிக்கு காணப்பட்ட பெரும் எண்ணிக்கையான அதிகாரங்கள் 19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டு மக்களின் சுதந்திரத்தை தனியொரு நபர் தீர்மானிக்கும் சூழ்நிலையில் மாற்றம் செய்யப்பட்டது.

சுயாதீனமான அரச சேவை மற்றும் சுயாதீனமான நீதிமன்றக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாக, உள்ளூராட்சி மன்ற, மாகாணசபைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க அமைச்சுப் பொறுப்புக்களை நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்ட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அமைச்சர் கரு ஜயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார். (3-5)

# பொதுத் தேர்தலில் போட்டியிட யாரிடமும் வேட்பு மனு கோரவில்லை

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அபயராமய விஹாரை தேர்தல் காரியாலயம் அல்லவென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சஷ தெரிவித்துள்ளார்.

வென்னப்புவ மற்றும் குளியாப்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கட்சி செயற்பாட்டாளர்கள் அபயராமயவில் மகிந்தவை நேற்று முனதினம் சந்தித்த போதே இதனை தெரிவித்துள்ளார்.

அபயராமய ஓர் விஹாரையாகும். என்னை சந்திப்பதற்கு அடிக்கடி மக்கள் வருகின்றார்கள். மக்களை சந்திப்பதற்கு அபயராமய விஹாராதிபதி எனக்கு அனுமதி வழங்கியுள்ளார்.


நான் அடிக்கடி விஹாரைகளுடன் இணைந்து செயற்படுபவன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட நான் யாரிடமும் வேட்பு மனு கோரவில்லை. அவ்வாறு யார் வேட்பு மனு கோரினார்கள்?

அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என நான் நினைக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை எதுவுமில்லை

### அடித்துக்கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எவ்வித புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் இரு கட்சிகளுக்கும் இடையில் எவ்வித உடன்பாடும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது, ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராவதை தடுக்க முடியாது என அண்மையில் அமைச்சர் சஜித் பிரேமதாச அம்பலாந்தோட்டையில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், சஜித் பிரேமதாசவின் இந்த பொய்யான கருத்தை நிராகரிக்கின்றோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய தோல்வியைத் தழுவ உள்ளது.

மூழ்கப் போகும் மனிதன் வைக்கோல் புல்லைப் பிடித்துக் கொள்வது போன்று ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சியை பற்றிப் பிடித்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

சஜித்தின் இந்த முயற்சியானது சுதந்திரக் கட்சியையும் அதன் உறுப்பினர்களையும் தைரியம் இழக்கச் செய்யும் முயற்சியாகும்.

இவ்வாறு உண்மையிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தால் அதனை பகிரங்கப்படுத்த வேண்டும்.

கற்பனைக் காரணிகளின் அடிப்படையில் இவ்வாறான கருத்துக்களை வெளியிடக் கூடாது.

அடுத்த பிரதமர் யார் என்பதனை சஜித் தீர்மானிக்க முடியாது, மக்களே அதனை தீர்மானிக்க வேண்டும்.

சமுர்த்தி அமைச்சர் பக்கச்சார்பாக செயற்படுவதுடன் மக்கள் பணத்தை நெருக்கமானவர்களுக்கு பகிர்ந்தளித்து வருகின்றார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயமாக தோல்வியைத் தழுவும் என நிமால் சிறிபால டி சில்வா வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (3-5)

# வாரம் ஒரு தகவல்

## இளமை இதோ!

"தாத்தா உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இளமை திரும்ப வேண்டும்! அதற்கு ஏதாவது மருந்து உங்களது கடையில் இருக்கிறதா?"

"அதற்கு டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு மருந்து கண்டு பிடித்திருக் கிறார்களாம் தாத்தா" அப்படியா? அது என்ன மருந்து?

"கற்றாழையிலிருந்து தான் அந்த மருந்தை உருவாக்கியிருக் கிறார்கள்"

"ஏற்கனவே காய்ச்சலைக் கட்டுப்படுத்த கற்றாழைச்சாறு கொடுப்பது வழக்கம்"

"ஆமாம் தாத்தா. அதேபோல் அல்சரையும் குணப்படுத்தும். கற்றாழையைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் வருவதில்லையாம். கொலஸ் ரோலும் இருப்பதில்லையாம். அதனால் இப்பொழுதெல்லாம் கற்றாழை டொனி க்கே கடைகளுக்கு வந்துவிட்டது"

"அதைச் சாப்பிட்டால் நல்லது என்கிறாயா?"

"முதலில் எலிகளுக்கு இதைக் கொடுத்துத்தான் சோதனை செய்து பார்த்தார் களாம். அவற்றுக்கெல்லாம் இளமை தள்ளிப் போகிறது என்பதை கண்டு பிடித்திருக்கிறார்கள்" "அப்படியா!"

"இப்பொழுதெல்லாம் அமெரிக்காவில் கற்றாளை சாலட் கிடைக்கிறதாம்"

"நல்ல செய்தி சுஹினாய் தம்பி அது இருக்கட்டும். இப்பொழுது ரெடிமெட்டா உன்னிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?"

"இந்த வயதில் இப்படி ஒரு ஆசை தேவையா தாத்தா உங்களுக்கு?"

"இது எனக்கில்லையப்பா. என்னுடைய அப்பாவுக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா ராஜாவின் மறுபிரவேசம்



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கான வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கு போட்டியிடுவார் என பதை கடந்த திங்கட்கிழமை பி.பி.சி.யின் சிங்கள சேவையான சந்தேசயவுக்கு அளித்திருந்த பேட்டியில், அவரது ஊடக இணைப்பாளர் ரொகான் வெலிவிட்ட உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர், மஹிந்த ராஜபக்ஷ எப்போது தங்காலையிலுள்ள தனது வீட்டில் இருந்தவாறு மக்களைச் சந்திக்கத் தொடங்கினாரோ, அப்போதே அடுத்த கட்ட அரசியல் ஆசையை நிறைவேற்றுவதற்கான பயணத்தை தொடங்கியிருந்தார்.

விகாரைகள் தோறும் அவர் வழிபாடு எனற பெயரில் மக்களை சந்திக்கத் தொடங்கியதும் அத்தகைய ஒவ்வொரு சந்திப்பிலும் அரசாங்கத்தை விமர்சித்து கருத்துக்களை வெளியிடத் தொடங்கியபோதே, அவரது எதிர்காலத் திட்டம் ஓரளவுக்கு வெளிச்சமாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தோற்கடித்துள்ளனர், இனி நாமாகவே ஒதுங்குவோம் என்றில்லாமல் அவர், தனக்கு ஆதரவான அணியொன்றை வைத்து அரசாங்கத்தை மிரட்டியும் அதனுடன் பேரம் பேச வைத்தும் அவ்வப்போது ஆதரவுக்கூட்டங்களை நடத்தியும் தனது பலத்தை வெளிப்படுத்த முயன்றபோது, மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து அதிகார ஆசை விட்டுப்போகவில்லை என்பது உறுதியாகிவிட்டது.

தனக்கு பிரதமர் பதவியைக் கேட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்த அவர் எப்போது தயாரானாரோ, அப்போதே அவர் பிரதமர் பதவிக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பார் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. இப்போது அவரது பேச்சாளரிடமிருந்து வெளிப்பட்டுள்ள அறிவிப்பு, ஆச்சரியமான வொன்றே அல்ல. ஏனென்றால, இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவொன்று.

இனிமேல் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து வெளிவரப்போகும் அறிவிப்பையும்கூட, நாம் ஆச்சரியத்துடன் பார்க்க வேண்டியிருக்காது. அவர்தாம் ஆட்சியில் இல்லாத காலத்தில் நாட்டில் நிலைமைகள் மோசமடைந் துள்ளதை சுட்டிக் காட்டுவார்.

வடக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டதையும் நீதிமன்றம் தாக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டுவார். இடைநிறுத்தப்பட்ட சீன அபிவிருத்தித் திட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் முடங்கிப்போயுள்ளதாக கூறுவார்.

உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் விடுவிக்கப்பட்டதால், பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக புலம்புவார். இப்படி தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளெல்லாம் குறைகூறி, இவற்றினால் நாடு பேராபத்தில் சிக்கியிருப்பதாக கூறப்போகிறார். கடைசியாக, இந்த ஆபத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க மீண்டும் அரசியலுக்கு வாருங்கள் என்று மக்களும் மகாசங்கத்தினரும் தன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதன் பேரிலே, பிரதமர் வேட்பாளராக போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக கூறுவார்.

அதாவது, தான் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடாதுபோனால் நாடே அழிந்துவிடும் என்பதுபோல, அவரது எதிர்கால அறிக்கை ஒன்றையோ பேட்டி ஒன்றையோ நாம் விரைவாக எதிர்பார்க்கலாம். இதுவே, அவரது இரண்டாவது அரசியல் பிரவேசத்துக் காக நடத்தப்படும் நாடகத்தின் நிறைவுக் காட்சியாக இருக்கும்.

பொதுவாக நாடகங்களில் இத்தகைய இறுதிக் காட்சிகள் எப்போதுமே, பரபரப்பானதாகவும் எதிர்பாராத திருப்பங்களைக் கொணடதாகவும் இருக்கும். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்கான வேட்பாளராக களமிறங்குவதற்கு ஆரம்பித்த நாடகத்தின் இறுதிக்காட்சி அத்தகைய திருப்பங்கள் நிறைந்த ஒன்றாகவோ, பரபரப்பானதாகவோ இருக்காது. ஏனென்றால், அது கடைசியில் முன்னைய மகாராஜாவின் வருகையுடன் நிறைவுபெறப் போகிறது.

இந்த நாடகத்தின் இரண்டாம் பாகமே சுவையானதாகவும் பரபரப்பு மற்றும் கேள்விகள் நிறைந்ததாகவும் இருக்கப்போகிறது. ஏனென்றால் அதுவே மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியைப் பெற்றுக் கொடுக்குமா, இல்லையா என்ற உச்சக்கட்ட காட்சியாக- முன் எதிர்வுகூற முடியாத ஒன்றாக இருக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வி என்பது முன் எதிர்வுகூறத்தக்க ஒன்றாக இருந்திருக்கவில்லை என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். ஏனென்றால், அந்தப் போட்டி அந்தளவுக்கு சிக்கலானதாக், கடுமையானதாக, கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே இருந்தது. ஆனால், வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்காக, அதனை அடைவதற்காக வகுக்கவுள்ள அரசியல் தந்திரோபாயத் திட்டங்களே, அவருக்கு ஆறுதல் பரிசாக பிரதமர் பதவியையா வது பெற்றுக் கொடுக்குமா என்பதை தீர்மானிக்கும்.

மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் அவருக்கு அதிகாரத்திலிருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

மிக உயர்ந்த அதிகாரத்தில் அவர் இருந்திருந்தாலும், இனிமேல் அந்தப் பதவியை அவரால் பிடிக்க முடியாது. அதற்கான சட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளன. எனவே, இனிமேல் பிரதமர் பதவியையாவது பிடிப்போம் என்பதே அவரது இலக்காக இருக்கிறது.

உயர் பதவியிலிருந்துவிட்டு, அதற்குக் குறைவான பதவியில் அமர்வதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதையெல்லாம் பார்த்தால், அதிகாரம் கையை விட்டுப் போய்விடும், தாம் செல்லாக்காசாகி விடுவோம் என்பது அவருக்குத் தெரியும். மீண்டும் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்பதற்காக அவர் எதையும் செய்யத் தயாராகவிருக்கிறார், எந்த கௌரவத்தை விட்டுக் கொடுக்கவும் தயாராகவிருக்கிறார்.

பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாக எழுந்துநிற்க தயாராகவிருக்கிறாரா என்று அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி கேள்வியெழுப்பியிருந்தார். மஹிந்த ராஜபக்சவைப் பொறுத்தவரையில் அத்தகைய கௌரவப் பிரச்சினைகள் ஏதும் இல்லாததாலேயே, அவரால் முன்னைய நிலையிலிருந்து கீழிறங்கி பிரதமர் பதவிக்கு குறி வைக்க முடிந்திருக்கிறது.

2004 இல் தன்னைப் பிரதமர் வேட்பாளராக நிறுத்தவேண்டுமென்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் எவ்வாறு பேரம் பேசினாரோ, அதுபோலவே இப்போது தன்னைப் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்தவேண்டுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சென்றிருக்கிறார் அவர்.

சந்திரிகாவிடம் அவர் மிரட்டும் தொனியில் பேரம் பேசினார். அப்போது சந்திரிகாவும் வேறுவழியின்றி ஒத்துக்கொள்ள நேரிட்டது. ஆனால், இப்போது அவரால் அவ்வாறு மைத்திரிபால சிறிசேனவிடம் பேரம் பேச முடியவில்லை. இதனையொரு வகையில் கெஞ்சுதல் என்றே கூறவேண்டும்.

மக்களால் தோற்கடிக்கப்பட்ட அவரை பிரதமர் வேட்பாளராக நிறுத்த முடியாது என்று முகத்தில் அடித்தால் போல மைத்திரிபால சிறிசேனவால் இப்போது கூறமுடிந்திருக்கிறது. இத்தகைய கட்டத்திலேயே மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறு தனது பிரதமர் கனவை நிறைவேற்றப் போகிறார் என்ற கேள்வி எழுந்திருக்கிறது. ஏனென்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்மூலம் பிரதமர் கனவை நிறைவேற்றுவதே, இருக்கும் வழிகளிலேயே இலகுவானதும் சாத்தியமானதுமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தப்பட்டால், ஐ.தே.க.வுக்கு அது ஒரு மிகப்பெரிய சவாலாக மீண்டும் எதிர்க்கட்சி வரிசைக்கு தள்ளிவிடக்கூடிய ஆபத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ள பெரும்பான்மையின மக்களின் ஆதரவும் சுதந்திரக் கட்சியின் பரம்பரை வாக்கு வங்கியும் கூட்டணிக் கட்சிகளின் பலமும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவரக்கூடிய சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன.

எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலில் விழுந்தாவது சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராகி விட வேண்டும் என்று பார்க்கிறார். ஆனால், ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேனவோ, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த முடியாது என்பதில் உறுதியாக இருக்கிறார்.

இந்தக்கட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷவின் அடுத்தகட்ட அரசியல் திட்டம் எவ்வாறு முன்னகர்த்தப்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. எவ்வாறாயினும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடமளிக்காதுபோனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடையப்போவது மட்டும் உறுதி.

ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் கனவைக் கைவிடவும் தயாரில்லை. அதுபோல அவரை எப்படியாவது பிரதமர் பதவிக்கு முன்னிறுத்தி தம்மைக் காப்பாற்றிக் கொள்ள எத்தனிப்பவர்களும் அந்த முயற்சியைக் கைவிடத் தயாராக இல்லை.

மஹிந்த ராஜபக்ஷ மட்டுமன்றி, மஹிந்த ராஜபக்ஷவை முதலீடாக வைத்து அரசியல் நடத்துபவர்களுக்கும் இது முக்கியமான கட்டம். அதே வேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட இடமளிக்காதுபோனால், இவர்கள் தனியாகப் போட்டியிடப் போவது உறுதி.

அதைவிட, இன்னொரு சாத்தியப்பாடும் உள்ளது. அது என்னவென்றால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரான சுசில் பிரேமஜயந்தவோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருக்கும் அநுர பிரியதர்சன யாப்பாவோ மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் சாய்ந்துவிடாமலும் இருக்கவேண்டும்.

இறுதிக்கட்டத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளித்து, சுசில் பிரேமஜயந்த கையெழுத்திட்டுவிட்டால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதுவும் செய்துவிட முடியாது. ஏனென்றால், தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்படும் வேட்பாளர் பட்டியலில் கட்சியின் செயலாளர்தான் ஒப்பமிட வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் சுசில் பிரேமஜயந்த கையெழுத்திடுவார் என்று அண்மையில் வாசுதேவ நாணயக்கார கூறியிருந்தார். அவ்வாறானதொரு தருணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடக்கூடும். அதற்கு அநுர பிரியதர்சன யாப்பாவின் கையெழுத்து தேவைப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக போட்டியிடப் போவதாக அறிவித்ததும் உடனடியாக அவரை நீக்கிவிட்டு, அநுர பிரியதர்சன யாப்பாவை அந்தப் பதவிக்கு நியமித்திருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. தனக்கு விசுவாசமானவர் என்பதாலேயே, அவருக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியான பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளரே என்பதை தெரிந்திருந்தும் அநுர பிரியதர்சன யாப்பாவை கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து தூக்காமல் விட்டுவைத்திருக்கிறார்.

இந்த நிலையில் அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நம்பிக்கையை காப்பாற்றுவாரா- மஹிந்த ராஜபக்ஷவின் நம்பிக்கையைக் காப்பாற்று வாரா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இந்தக் கட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயலாளர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் சென்றாலும்கூட, மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசிகள் தனித்துப் போட்டியிடப் போவது உறுதி. அவ்வாறான நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடைந்துவிடும்.

அதைவிட, மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்கப்படாமல், அவராகவே வேறு ஒரு கட்சியில் போட்டியிட முடிவு செய்தாலும், சுதந்திரக் கட்சியிலுள்ள கணிசமானவர்கள் அவருக்குப் பின்னால் செல்லத் தயாராக இருக்கிறார்கள். எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அப்போதும் பிளவு ஏற்படுவது உறுதி. எனவே, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தும் எந்த முயற்சியாக இருந்தாலும், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடைவுக்கே வழி வகுக்கப்போகிறது.

இது மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியும். சந்திரிகா குமாரதுங்கவுக்கும் தெரியும். ஆனாலும், இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிந்திக்கின்றனர். சுயநலன், கட்சிநலன், நாட்டு நலன் என்று இவர்களின் பார்வை மாறுபாடாக உள்ளது. இதில் எந்த நலன் வெல்லப் போகிறது என்பது மஹிந்த ராஜபக்ஷவின் மறு அரசியல் பிரவேசத்தின் இறுதி விளைவிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்நீதிமன்ற செயற்பாட்டை அரசு கட்டுப்படுத்தவில்லை

## பிரதமர் உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை போலல்லாது தற்போதைய அரசாங்கம், உயர்நீதிமன்றத்தின் செயற்பாடுகளை சுயாதீனமாக்கியுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சர்வதேச மத்தியஸ்தானம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று அவர் உரையாற்றும் போது இதனை தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உயர்நீதிமன்றத்தின் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் அரசாங்கமே கொண்டிருந்தது.

எனினும் மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் கீழ் அது நீக்கப்பட்டு உயர்நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மத்தியஸ்த நிலையம் என்ற விடயம் இலங்கையை பொறுத்தவரை புதிய விடயம் அல்ல. அநுராதபுர இராச்சிய காலத்திலும் அது இருந்தது என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (3-5)




# 13 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் 11 வீதமானோர் புகைத்தல் பழக்கத்திற்கு ஆளாகியுள்ளனர்

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் 13 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் 11 சதவீதமானவர்கள், புகைத்தல் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இலங்கையில் 13 முதல் 15 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய பாடசாலை மாணவர்களில் 11 சதவீதமானவர்கள் புகைத்தல் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளதோடு பாடசாலை மாணவ, மாணவிகளில ஆயிரம் பேரில் ஒருவர் புகையிலை பாவனைக்கு ஆளாகியுள்ளனர்.

இதன்படி 16 சதவீதமான மாணவர்களும் 5 சதவீதமான மாணவிகளும் புகையிலை பாவனைக்கு உட்பட்டுள்ளனர்.

புகைத்தல் மற்றும் புகையிலை பாவனையால் ஏற்படும் விளைவுகள தொடர்பில் போதுமான அளவு மாணவர்களிடையே தெளிவு நிலை ஒன்று காணப்படும் சந்தர்ப்பத்திலும 80 சதவீதமான மாணவர்கள் இது தொடர்பில் கவனத்திற்கொள்வதில்லை.

இவ்வாறு மாணவர்கள் இந்த பழக்கத்துக்கு உள்ளாகியுள்ளதால் பாடசாலை கல்வி செயற்பாடுகள் தொடர்பில் அம்மாணவர்களுக்கு ஆர்வமின்மை ஏற்பட்டுள்ளது.

புகையிலைப் பாவனைக்கு உட்பட்டுள்ள மாணவர்கள், அவற்றைப் பாவனைக்கு உட்படுத்திவிட்டே பாடசாலைகளுக்குச் செல்வதால் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பல வீனமான தன்மைக்கு மாறியுள்ளதாகவும் உலக சுகாதார ஆய்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இவ்வாறான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ள அதேவேளை எமது நாட்டில் அண்மைக்காலங்களில் வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவியர மீதான துஷ்பிரயோகங்களும், குற்றச்செயல்களும் அதிகரித்துள்ளன.

மறுபுறம் பாடசாலை மாணவ, மாணவியரின் சிறுவயது தற்கொலை சம்பவங்களும் நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன. மாணவர்கள் தமது கல்வி கற்கும் வயதில் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை செலுத்துவதை தவிர்த்து ஏனைய விடயங்களில் மாணவ, மாணவியரின் செயற்பாடுகள் அதிகரிப்பதன் காரணமாகவே இவ்வாறான சம்பவங்கள் எமது நாட்டில் அண்மைக்காலங்களில் அதிகரித்து காணப்படுகிறது.

இவ்வாறான நிலை தொடர்ச்சியாக எமது நாட்டில் நிலவுமாயின் எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையானது கேள்விக் குறியாகிவிடும். எனவே மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொறு செயற்பாடுகள் தொடர்பிலும் பெற்றோர் உட்பட பாடசாலை ஆசிரியர்களும் அக்கறை செலுத்துவது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கி (இ-5)

# இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவின் விசாரணைகள் ஸ்தம்பிதமடையவில்லை

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவின் விசாரணைகள் ஸ்தம்பிதமடையவில்லை என இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினர் பதவி விலகுவதனால் விசாரணைகள் ஸ்தம்பிதமடையாது. கடந்த சில மாதங்களில் ஆணைக் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற 300 முறைப்பாடுகளில் அரைவாசி விசாரணை செய்யப்பட்டுள்ளது.

ஏனைய முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளும் விரைவில் பூர்த்தியாகும். புதிய ஆணையாளர் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க நியமிக்கப்படுவதற்கு முன்னதாக செய்யப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த முறைப்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு முறைப்பாடுகள் தொடர்பில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

கடந்த சில மாதங்களில் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு எதிராக பல கோடி ரூபா பணம் மற்றும் அரச சொத்து மோசடிகள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு எவ்வித தடையும் ஏற்படவில்லை, விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன என ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும், புதிய முறைப்பாடுகளை விசாரணை செய்யவும், நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பில் வழக்குத் தொடரவும் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவின் ஆணையாளரின் கையொப்பம் அவசியம்என வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# அவன்கார்ட் ஆவணங்களை பாதுகாக்க நீதவான் உத்தரவு

அவன்கார்ட் நிறுவனத்தின் மூல ஆவணங்களை பேணிப் பாதுகாத்து வைத்திருக்குமாறு, அந்த நிறுவனத்திற்கு காலி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலி கடற்பரப்பில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியமொன்றை அவன்கார்ட் நிறுவனம் பேணி வந்தது.

இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 2012ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் சகல கணக்கு விபரங்கள் உள்ளிட்ட சகல மூல ஆவணங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

காலி பிரதான நீதவான் நிலுபுலி லங்காபுர நேற்று முன்தினம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

நிறுவனம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கு அமைய ஆவணங்களை பாதுகாக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கப்பல் பழுதடைந்த நிலையில் இருப்பதனால் அதனை விடுவிக்குமாறு நீதிமன்றில் கோரப்பட்டது.

இது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு நீதவான், புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தினால் காலி கடற்பரப்பில் பேணப்பட்டு வந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தின் ஊடாக சட்டவிரோத ஆயுதக் கொடுக்கல்-வாங்கல்கள் இடம்பெற்றதாகவும், சர்வதேச தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே. (இ-3-5)


# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கனகசபாபதி பரமேஸ்வரி

வண்ணார்பண்ணை கலட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி பரமேஸ்வரி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி தில்லைநாதன் வள்ளியம்மை

குப்பிளான்தெற்குகுப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் வள்ளிய ம்மை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் குப்பிளான் காடாகம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்



### கனகரட்ணம் சொர்ணலிங்கம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் சொர்ணலிங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 12.30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சின்னத்தம்பி சிவபாக்கியம்

சுன்னாகம் சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவபாக்கியம் கடந்த 3 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி மாணிக்கம் சின்னம்மா

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை லண்டன் Harrow வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சின்னம்மா கடந்த 3ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் கிரியைகள் நாளை காலை 9 மணியளவில் 125 Lynton Rd, Harrow, Greater London HA2 9NH, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்!

## அவுஸ்திரேலியா அதிர்ச்சித் தகவல்



**(பெர்த்)**

**ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் குளோரின் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதாகவும், இரசாயன ஆயுதங்களை மேலும் மேம்படுத்த பயிற்சி பெற்ற நிபுணர்களை பணிக்கு அமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் அவுஸ்திரேலியா அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.**

இந்த தகவலை அவுஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜூலி பிஷப் சர்வதேச அரங்கு ஒன்றில் பேசிய போது தெரிவித்தார். இன்று நாம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய, பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இது எனவும் அவர் வரையறுத்துள்ளார்.

கடந்த ஜனவரியில் வடக்கு ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய கார் வெடி குண்டு தாக்குதல் உள்ளிட்ட தடையங்களை சேகரித்து பார்க்கையில் அவர்கள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள கிடைத்துள்ளன என்று குர்திஷ் படையினர் தெரிவித்திருந்த நிலையில், அவுஸ்திரேலியா குற்றஞ் சாட்டியுள்ளது. (இ-5)

## புதிய குடியேற்ற கொள்கையானது மரணதண்டனைக்குக் காரணமல்ல

### அவுஸ். மறுப்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியர்களின் மரண தண்டனைக்கு புதிய குடியேற்ற கொள்கை காரணம் அல்ல என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

போதைப் பொருள் கடத்தல் வழக்கில் பிடிபட்ட 2 அவுஸ்திரேலியர்கள் உட்பட 7 வெளிநாட்டினருக்கு கடந்த ஏப்ரல் மாதம் இந்தோனேஷியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச அளவில் இதற்கு பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில், இந்தோனேஷியாவில் இருந்து தனது தூதரை அவுஸ்திரேலியா திரும்பப்பெற்றது.

அவுஸ்திரேலியா பின்பற்றி வரும் கடுமையான புதிய குடியேற்ற கொள்கையினால் தான், 2 அவுஸ்திரேலியர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அந்த நாட்டு மனித உரிமை ஆணைய தலைவர் கில்லியன் ட்ரிக்ஸ் கூறியதாக அவுஸ்திரேலிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அதில், அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளாக வருபவர்கள் நடுககடலில் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இதில் பெரும்பாலானோர் இந்தோனேஷியர்கள். ஆனால், இது எந்த மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என நாம் நினைத்ததுண்டா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில், கில்லியன் ட்ரிக்சின் இந்த கருத்தை அவுஸ்திரேலிய அரசு மறுத்துள்ளது. இது சட்டத்துக்கு புறம்பானது என கூறியுள்ள குடியுரிமைத்துறை அமைச்சர் பீட்டர் டட்டன், இந்த கருத்து அவுஸ்திரேலிய அரசு, பொதுமக்கள் மற்றும் கொல்லப்பட்ட 2 பேரின் குடும்பத்தினருக்கு எதிரானது என்று தெரிவித்துள்ளார். (இ-5)

## சிறுநீர் தொற்று நோயால் அவதியுறும் ராஜீவ்காந்தி கொலை வழக்குக் கைதி

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதியாகியுள்ள பேரறிவாளன சிறுநீர் தொற்று, முதுகுவலி, வயிறு பிரச்சினைகளால் அவதியுற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பில் கடந்த 23 வருடங்களாக முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் ஆண்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோர் புழல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே பேரறிவாளன் சிறுநீர் தொற்று உள்ளிட்ட பிரச்சினைகளினால் அல்லலுற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவரை அவ்வப்போது வேலூர் அடுக்கம்பாறை அரசு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அழைத்து செல்கின்றனர்.

வேலூர் சிறைச்சாலையிலுள்ள பேரறிவாளனை அவரது தாயார் அற்புதம்மாள் சந்தித்துள்ளார்.

பேரறிவாளன் நோய் கொடுமையால் அவதிப்பட்டு வருகிறான், அவனுக்கு வேலூர் அரசு வைத்தியசாலையில் அவ்வப்போது சிகிச்சை அளிக்கப்படுவதாகவும்,

சிறுநீர் தொற்று பிரச்சினைக்கு சிகிச்சை அளிக்க வேலூரில் போதிய வசதிகள் இல்லை எனும் காரணத்தினால் சென்னை அரசு பொது வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க வேண்டுமென சிறைத்துறை டி.ஐ.ஜி. யிடம் பேரறிவாளன் மனு அளித்துள்ளதாகவும் அவரது தாயார் குறிப்பிட்டுள்ளார். மேலும் பேரறிவாளன் விரைவில் குணமடைவான் என அவரது தாயார் நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

## இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தம்

இலங்கையில் உள்ள தமிழக மீனவர்களை உடனே விடுதலை செய்யவேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இராமேஸ்வரம் மீனவர்கள் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் 45 நாட்கள் மீன் பிடி தடைக்காலம் கடந்த வாரம் முடிவடைந்ததையொட்டி மீனவர்கள் கடலுக்கு புறப்பட்டனர். மீன்பிடி தடைக்காலம் முடிந்து கடலுக்கு சென்ற 2 நாளிலேயே எல்லை தாண்டி வந்ததாகக்கூறி 14 இராமேஸ்வரம் மீனவரகளை இலங்கை கடற்படை சிறை பிடித்து சென்றது. இச்சம்பவம் மனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய-இலங்கை மீனவர்களின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை என பல்வேறு கட்ட முயற்சிகள் எடுத்தும் இலங்கை கடற்படை தொடர்ந்து இராமேஸ்வ ரம் மீனவர்களை சிறைபிடித்து செல்வது வாடிக்கையாக நடந்து வருகிறது.

இந்நிலையில் தடைக்காலம் முடிந்து கடலுக்கு சென்ற மீனவர்களுக்கும் மீன்பாடு குறைந்த அளவே கிடைத்தது. மேலும் மீனவர்கள் பிடித்து வரும் இறால், நண்டு, கணவாய் உள்ளிட்ட ஏற்றுமதி வகை மீன்களுக்கு வியாபாரிகள் குறைந்த விலையே நிர்ணயம் செய்து வாங்கச் செல்கின்றனர். இவ்வாறு கடலிலும், கரையிலும் மீனவர்களுக்கு சோதனையாகவுள்ளது.

இது தொடர்பாக இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் மாலை மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், இலங்கை அரசு கைது செய்துள்ள 14 மீனவர்களை உடனே விடுவிக்க இந்திய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறால், நண்டு மற்றும் மீன்களுக்கு உரிய விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று 6ஆம் திகதி முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி இராமேஸ்வரம் மீனவர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் 800இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கடலுக்குள் செல்லாமல் கரையிலேயே நிறுத்தப்பட்டுள்ளன. இந்த வேலை நிறுத்தத்தில் மீனவர்கள் மற்றும் மீன்பிடி தொழிலை சேர்ந்தவர்கள் என 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். தெரிவித்துள்ளனர். (இ-5)

## வங்கதேசத்தில் மோடிக்கு உற்சாக வரவேற்பு







அரசு முறைப் பயணமாக வங்கதேசம் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

டில்லியிலிருந்து புறப்பட்ட பிரதமர் மோடியின் விமானம் நேற்று (சனிக்கிழமை) காலை வங்கதேச தலைநகர் டாக்காவை அடைந்தது. பிரதமர் நரேந்திர மோடியை வங்கதேச பிரதமர் ஷேக ஹசீனா விமான நிலையத்துக்கு சென்று நேரில் வரவேற்றார்.

பின்னர் அரசு முறைப்படி வழங்கப்பட்ட இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையையும் பிரதமர் மோடி ஏற்றுக்கொண்டார்.

வங்கதேச அரசியல் கட்சித் தலைவர்களும் பிரதமர் மோடியை வரவேற்றனர். இந்தியாவின் கொள்கைகளுக்கு எதிரான சிந்தனைகள் கொண்ட ஜமாத்-இ-இஸ்லாமி கட்சியின் சார்பிலும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தப் பயணத்தில், பிரதமர் மோடியின் அழைப்பின் பேரில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் உடன் இணைந்துள்ளார்.

வங்கதேசம் புறப்படும்போது, "இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை இந்தச் சந்திப்பு நிச்சயம் வலுப்படுத்தும். இதனால் இருநாட்டு மக்களுக்கும் நன்மைகள் ஏற்படும்" என்று தனது டுவிட்டர் பக்கத்தில் பிரத

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெற்றி என்பது வாழும் விதத்தில் உள்ள சத்தியத்தைப் பொறுத்தது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


## குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் உரைத்த பேருண்மை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் இராணுவத் துப்பாக்கியாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற தகவலை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் இராணுவத் துப்பாக்கியாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்திருப்பது என்பது மிகப்பெரும் ஆச்சரியமான விடயம்.

கடந்த முப்பது ஆண்டு காலத்தில் தமிழின அழிப்பு என்பது எத்துணை மோசமாக நடந்தது என்பது உலகறிந்த விடயம். இருந்தும் தமிழினத்தில் நடந்த கொலைகள் நீதிவிசாரணைகள் இன்றி அமிழ்ந்து போன சம்பவங்கள் ஏராளம்.

இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் ஒரு தமிழன் இறந்தால் அவனுக்கு வழங்கப்பட்ட பட்டம் பயங்கரவாதி என்பதாகும்.

இராணுவத்தின் துப்பாக்கி துளைத்த அத்தனை தமிழர்களும் பயங்கரவாதிகள் என்று பட்டியல் படுத்தப்பட்ட இந்த நாட்டில்,

இப்போதுதான் ஓர் ஒளிக்கீற்று தெரிகிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் எந்தப்பக்கச்சார்புமின்றி ஓர் உண்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் இராணுவத் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டார் என்று இந்த நாட்டின் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரியப்படுத்தியது எனில் அந்த உண்மையை எப்படி உயர்வுபடக் கூறுவதென்று தெரியவில்லை.

2008ஆம் ஆண்டு கொழும்பில் காணாமல் போன ஐந்து தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான வழக்கு கடந்த 3ஆம் திகதி கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஐந்து தமிழ் இளைஞர்கள் காணாமல் போனதில் கடற்படைக்குத் தொடர்பு உள்ளது என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்த போது, குற்றப்புலனாய்வுத் திணைக்களமா? இப்படிச் சொல்வது என்று தமிழர்கள் திகைத்தனர்.

அந்த திகைப்பு எடுபடுவதற்கு முன்னதாக, இராணுவத் துப்பாக்கியாலேயே ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற மற்றொரு பேருண்மையை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்திருப்பது;

இறைவா! நீ கண் விழித்து விட்டாய். இது போல தமிழர் தாயகம் எங்கும் நடந்த கொலைகள் பற்றிய உண்மைகளையும் வெளிப்படுத்து என்று மனம் மன்றாடுகிறது.

ஜனநாயகம் மலர்ந்தால் உண்மைகள் நிச்சயம் வெளிவரும். அந்த ஜனநாயக மலர்ச்சிக்கு வாக்களித்தவர்கள் தமிழர்கள்.

அதனால்தான் வருணபகவானும் காண்டாவனம் (காண்டவ தகனம்) என்றும் பார்க்காமல் வடக்கில் கோடையிலும் மழை பொழிய வைத்தார்.

அன்புக்குரிய தமிழ் நெஞ்சங்களே! நீதியை நிலைநாட்டும் பெரும் பணி எங்களிடமும் உண்டு. அதைச் செய்தால் கடவுளும் நமக்கு உதவுவார் என்ற ஒரு பெரும் உண்மையை அனுபவவாயிலாக நாம் உணர்ந்துள்ளோம். தொடர்ந்தும் நீதிக்காகப் பாடுபடுவோம்.

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி உ. யசோதாதலைமையில்நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரனும், சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர் ஆர்.ராஜாறணசிங்கவும், கௌரவ விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஆர்.மோகனதாஸ், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-1)

## மண்டைதீவில் மகா குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய மகா குடமுழுக்கு நாளை 08 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு தூபி அபிசேகம் இடம்பெற்று தொடர்ந்து கண்ணகியம்மனுக்கு மகா குடமுழுக்கு இடம்பெறும்.

இதேவேளை இன்று காலை முதல் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும். (எ-1)

## சிற்பனை முருகனுக்கு கும்பாபிஷேகம்

வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும் கிரியை வழிபாடுகளில் இன்றைய தினம் காலை 10.30 மணி முதல் 11.35 மணி வரையான சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (எ-1)

# தேர்தல் களத்தில் ஞானசார தேரர்?

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொது பல சேனா அமைப்பு புதிய கட்சி ஒன்றை பதிவு செய்யாத நிலைமையில், வேறு ஒரு கட்சியின் மூலம் போட்டியிட உள்ளதாகவும் எந்த கட்சியில் ஞானசார தேரர் போட்டியிட உள்ளார் என்பது இன்னும் தெரியவரவில்லை எனவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஞானசார தேரரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்காக பொது பல சேனா அமைப்பின் முழுப்பலத்தையும் பயன்படுத்த அந்த அமைப்பு தீர்மானித்துள்ளது.

அதேவேளை பொது பல சேனா அமைப்பு ஊடக சந்திப்பை நடத்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விமர்சித்த போதிலும், அவரை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் இருப்பதாக அதன் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். (எ-11)

## வாள்வெட்டில் இளைஞன் காயம்

(கரணவாய்)

துன்னாலை குடவத்தையில் நேற்று மாலை 8 மணியளவில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கு இடையிலான மோதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்வாள்வெட்டுச் சம்பவத்தில் துரைசிங்கம் பிரபா (வயது-29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த அவர் உடனடியாக மந்திகை வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-60)

# திருட்டுக்களை நிறுத்த மின்ஒளி கிடைக்குமா?

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபைக்கு உட் பட்ட கட்டைவேலி சனசமூக நிலை யத்துக்கு அருகாமையில் உள்ள வீதி, மின் குமிழ்கள் இன்றிக் காணப் படுகின்றது.

இதனால் இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி திருட்டுக் கும்பல்கள் அப் பகுதிகளில் தமது கைவரிசையைக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் இறைக்கும் இயந்திரங்கள், கால்நடைகள், மின் உபகரணங்கள் என்பவற்றை குறிவைத்து இத்திருட்டுக்கள் நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இவ்வீதிகளுக்கு விரைவில் மின்ஒளி கிடைக்க ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (3-60)

# திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவை அர்த்தமுள்ளதாக்க எம்மில் மாற்றத்தை ஏற்படுத்துவோம்

இயேசு தம் திருவுடலையும், இரத்தத்தையும் நமது பாவ மன்னிப்புக்கும் ஆன்மீக இரட்சிப்பிற்குமான திரு உணவாகத் தரும் அவரது பேரன்பைப் போற்றி இன்று அதை எண்ணி நாம் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம். உடல் என்பது ஒருவரது ஆளுமையின் மிக வெளிப்படையான கூறு. மனம், ஆன்மா, உணர்வுகள் என்பவை வெளியில் தெளிவாகக் காணக் கிடைக்காத ஆளுமையின் தளங்கள். ஆனால், உடல் மட்டுமே அனைவருக்கும் அறிமுகமான, வெளிப்படையான தளம். அது மட்டுமல்ல, உடல்தான் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யத்தகுந்த மிகச் சிறந்த தளமும்கூட. அதனால்தான், ஆண்டவர் இயேசு தம் உடலை இறைவனுக்காகவும், நமக்காகவும் கையளித்தார். இரத்தம் உயிரின் ஆதாரம். இரத்தம் சிந்துதல் தியாகத்தின் அடையாளம். 'இரத்தம் சிந்துதல் இன்றி பாவ

## பரமபிதா காட்டிய பாதை

மன்னிப்பு இல்லை". எனவே, எமக்காக தன்னை கையளித்த இயேசுவின் உடலுக்காக, இரத்தத்துக்காக நாம் பிரதியுபகாரமாக நமது உடலையும் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றக் கையளிப்போம். நாம் இரத்தத்தைச் சிந்தாவிட்டாலும், பிறர் வாழ தியாகங்கள் செய்ய முன் வருவோம்.

'இயேசுவின் திரு உடல் திருஇரத்த பெருவிழாவிற்கு வரலாற்று உண்மைக் காரணங்களும் உண்டு. 1264 ஆம் ஆண்டு திருத்தந்தை நான்காம் அர்பன் இந்த இயேசுவின் திருஉடல் திருஇரத்த திருவிழாவை தொடங்க கட்டளை பிறப்பித்தார்.

1431இல் இங்கிலாந்தில் புனித ஜோன ஆப் ஆர்க் சிறையில் நெருப்பில் இடப்படுவதற்கு முன்பாக அவரது கடைசிஆசைக்கு என்ன வேண்டும், கடைசி உணவாக விருந்தாக என்ன வேண்டும் என்று கேட்கப்பட்டபோது அவர் திருவிருந்தானது 'நற்கருணை வேண்டும்" என்று கேட்டிருந்ததுடன் எந்த திருவிருந்து எனக்கு தொடர்ந்து பலம் தந்து என்னோடு இருந்து என்னைத் தொட்டதோ அதுவே நிரந்தர துணை பலம் பிரசன்னம் என்றும் கூறினார்.

பாத்திமாவிலிருந்து சிறிது தொலைவிலுள்ள பலசார் என்ற இடத்தில் 1904 இல் பிறந்து 1955இல் இறந்த அலெக்சாண்டிரியா என்ற பெண் ஒரு விபத்தான சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருந்து 13 ஆண்டுகள் நற்கருணை மட்டுமேபெற்று வாழ்ந்தது மருத்துவர்களை ஆச்சரியத்துள்ளாக்கியது என்பதும் வரலாற்றுப் பதிவாகியுள்ளது. விசுவசித்தால் திருவிருந்து தொடர்ந்து என்றும் நம்மை தொடும்.

அண்மையில் மரியா என்ற14வயது இளம்பெண் 8 மாதங்களாக காத்திருந்து இருதயமாற்று அறுவை சிகிச்சை வழியாக புதிய இதயம் பெற்றாள். அவள் பல நாட்கள் பெற்றோரோடு நற்கருணை. திருவிருந்தை தேடி வரக்காரணம்என்ன என்று கேட்ட பொழுது அவர்கள் சொன்னது இதுதான் .எங்களின் தொடர்விருந்து எங்களை இப்புதிய இதயத்தின் வழியாக தொடும் நற்கருணை இயேசு எங்களுக்கு தினமும் வேண்டும் அவர் தான் நிரந்தர சக்தி என்றார்கள்.

இப்படி நற்கருணையின் அற்புதங்கள் பலவற்றை நாம் படித்திருக்கிறோம் கேட்டிருக்கிறோம். இவைகளெல்லாம் இத் திருவிருந்து



நம்மையும் அந்த தொடரும் தொடும் உணர்வுக்கு அழைக்கின்றது.


இயேசு கிறிஸ்து தமது கடைசி இராப்போசனத்தின் போது அப்பத்தையும் இரசத்தையும் தமது உடலும் இரத்தமும்எனக்கூறிஅதனை தம்சீடர்களுக்குப் பகிர்ந்தளிக்கிறார். அப்பம் ஏந்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பகிர்தலின் ஞாபகம் நமக்கு உணர்த்தப்படுகிறது. எனினும் அப்போது எம் மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறதா என்பதே நாம் சிந்திக்கவேண்டியது. ஏனெனில் பகிர்தல் வாழ்வுக்கு மனநிலை மாற்றம் மிக அவசியம். கல்மனம் படைத்தவர்களால் பகிர்ந்து வாழமுடியாது.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா நமக்கு இன்னுமொரு செய்தியையும் தருகிறது. அப்பத்தின் வடிவில்இயேசுவின் உடலையும் இரசத்தின் வடிவில் அவரது இரத்தத்தையும் உண்ணும் நாம் அவரது திருவுளப்படி வாழ முற்படுகிறோமா? நம்மில் அதற்கான மனமாற்றம் ஏற்படுகிறதா என்பதையும் சிந்திக்க வேண்டும் இத்தகைய சிந்தனைகள் ஏற்படுத்தும். மாற்றமே இப்பெருவிழாவை அர்த்தமுள்ளதாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 கே.சீ.சீ வெற்றிக்கிண்ணம் திருநெல்வேலி - ஹாட்லியையற்ஸ்





**இன்று பலப்பரீட்சை**

2015 ஆம் ஆண்டு கே.சீ.சீ வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சீ.சீ விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிக்குதிருநெல்வேலிகிரிக்கெட்கழக அணியும் ஹாட்லிக்யையற்ஸ் கழக அணி யும் தெரிவு செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

கடின பந்து கிரிக்கெட் போட்டி 1983 ஆம் ஆண்டு ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.அந்த வருடம் ஜொலிஸ்ரார் அணியும் சென்றலைட்ஸ் அணியும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றிருந்தன. இவ்விரு அணிகளும் முதல் வருடத்திலே இறுதி போட்டிக்கு தகுதி பெற்ற முதல் இரு கழகங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வரிசையில் 2015 ஆம் ஆண்டுஹாட்லியையற்ஸ்கழக அணி முதல் வருடத்திலே முதல் சுற்றுப் போட்டியில் காலடி எடுத்து வைத்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றதன் மூலம் முதல் வருடத்திலே பங்கு பற்றி 3 அணியாக சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி முதல்சுற்று ஆட்டத்தில்திருநெல்வேலி வைஎம். எச்.எ அணியை 95 ஓட்டங்களாலும் 2 ஆவது சுற்றில் சாவகச்சேரி டிறிபேக் ஸ்ரார் கழக அணியை 6 ஓட்டங்களாலும்கால் இறுதிப் போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணியை 27 ஓட்டங்களாலும் அரை இறுதிப்போட்டியில் கே.சீ.சீ அணியை ஒரு ஓட்டத்தாலும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஹாட்லியையற்ஸ் கழக அணி 2 ஆவது சுற்று ஆட்டத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் கழக அணியை 3 விக்கெட்டுக்களாலும் கால் போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை 20 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ் இரு அணிகளும் இச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

> “2015 ஆம் ஆண்டு கே.சீ.சீ. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியும் ஹாட் லியையற்ஸ் கழக அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.”

# ஆஸியின் வேகத்தில் வீழ்ந்தது கரீபியன்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

டொமினிக்காவில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 148 ஓட்டங்களில் சுருண்டது. இதைத் தொடர்ந்து விளையாடிய.அவுஸ்திரேலியா 318 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் 170 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 216 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.



சாமுவேல்ஸ் 74 ஓட்டங்களும், டவ்ரிச் 70 ஓட்டங்களும் எடுத்தனர். அவுஸ்திரேலியா சார்பில், ஸ்டார்க் 4 விக்கெட்டும், ஜான்சன், ஹாசில்வுட், லயன் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

இதைத் தொடர்ந்து 47 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 1 விக்கெட் மட்டும் இழந்து இலக்கை எட்டியது. இதனால் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றி மூலம் 2 போட்டிகொண்ட டெஸ்ட் தொட ரில் அவுஸ்திரேலியா 1:0 என்ற கணக்கில் முன்னிலை யில் உள்ளது. இவ்விரு அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வருகிற 11 ஆம் திகதி கிங்ஸ்டனில் நடைபெறவுள்ளது. (க)



நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஓட்ட நிகழ்வினை படத்தில் காணலாம்.

## மென்பந்து சுற்றுப்போட்டி

வவுனியா வளாக முன்னாள் முதல்வர் அமரர் பேராசிரியர் நா. பாலகிருஸ்ணன் ஞாபகார்த்தமாக வவுனியா வளாக உடற்கல்வி அலகினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் வவுனியா மாவட்ட அரச திணைக்கள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 6 பேர் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் வவுனியா வளாக உடற்கல்வி போதனாசிரியரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிரட்டும்...

யெழுத்தை திரும்பப் பெற போவதாக அச்சுறுத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்கு முதலில் 20வது திருத்தச் சட்டத்தை கொண்டு வரவேண்டும் என இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை விட 20-வது திருத்தச் சட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என இந்த 35 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளதுடன்,

அவர்கள் பிரேரணை தொடர்பான யோசனையில் தாம் இட்டுள்ள கையெழுத்தை திரும்ப பெறக்கூடும் எனவும் அமைச்சர் சேனாரத்ன கூறியுள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனை நேற்று முன்தினம் எதிர்க்கட்சியினரால் நாடாளுமன்ற செயலாளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# எதிர்க்கட்சியின்...

தெரிவித்துள்ளார்.

செய்வதற்கு வேறு எவ்வித வேலையும் இல்லாமையினாலேயே எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணையை பிடித்துக் கொண்டு கூச்சலிடுவதாக அவரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சிக்கு நம்பிக்கையில்லா விட்டாலும் அரசாங்கம் மிகவும் நம்பிக்கையுடனே செயற்படுகின்றது.

எதிர்க்கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தற்போதே தோல்வியடைந்துள்ளது.

நாடாளுமன்றில் உள்ள 225 உறுப்பினர்களில் 112 பேர் மாத்திரமே கையொப்பமிட்டுள்ளனர்.

அதற்கமைய பெரும்பான்மை இன்னமும் அரசாங்கத்திடமே உள்ளது.

அத்துடன் ஜனாதிபதியின் ஆதரவும் பிரதமருக்கு கிடைப்பதனால் எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லா பிரேரணை பயனற்றதென அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் 5 நாட்களுக்குள் நாடாளுமன்ற ஒழுங்குபத்திரத்தில் உள்ளடக்கப்படும் என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்கவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே பிரதி சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் சுமார் 112 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஆணைக்குழுவின்...

குணதாச தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இறுதி அறிக்கையை வெளியிட ஜனாதிபதி ஆணைக்குழு எண்ணியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க முன்னாள் ஜனாதிபதி நியமித்த வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆணைக்குழுவின் பணிகளை செம்மையாக மேற்கொள்ள ஆணையாளர்களின் எண்ணிக்கை மூன்றில் இருந்து 5 ஆக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மேலதிக ஆணையாளர்கள் நியமிக்கப்பட உள்ளதாகவும் இது தொடர்பில் விரைவில் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புகளை மேற்கொள்ள உள்ளதாகவும் குணதாச குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# 20க்குத் தடை...

புதிய தேர்தல் முறை அடங்கிய 20ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்து ஐந்து மாதங்களாக இது குறித்து சுயாதீனமாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. எனது 40 வருட அரசியல் வாழ்க்கையில், சட்ட மூலம் ஒன்று தொடர்பில் இந்த அளவு சுதந்திரமாக விவாதம் செய்ய எந்த அரசாங்கமும் அனுமதி வழங்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் 18-ம் திருத்தச் சட்டத்தை அமைச்சரவையில் கூட விவாதிக்கவில்லை. சில நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொது மக்களும் அதன் உள்ளடக்கங்கள் குறித்தும் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் தற்போதைய நல்லாட்சி இதற்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கி இருக்கிறது.

எவ்வாறாயினும், இதனை நிறைவேற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கு ஒத்துழைப்பு வழங்காதவர்கள் யார்? என்பது தொடர்பில் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் நிறைவேற்ற முடியாமல் போனால், நாடாளுமன்றத்தை கலைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் உரையாற்றும் போது, தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பில் இன்னும் இணக்கப்பாடு ஏற்படுத்தப்படவில்லை, இது தொடர்பில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பில் தொடர்ந்தும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் மாதுலுவாவே சோபித தேரர் குறிப்பிட்டதாவது, 20ஆம் திருத்தச் சட்டம் எப்படியேனும் நிறைவேற்றப்பட வேண்டும். 20ஆம் திருத்தச்சட்டம் நிறைவேற்றுவதனை வலியுறுத்தி எதிர்வரும் காலத்தில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கியுள்ளதாக அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இது குறித்து கலந்துரையாடியுள்ளதுடன் அவர்கள் இருவரது இணக்கத்திற்கு அமையவே அனைத்தும் நடைபெறும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கண்காட்சிகள் இன்னும் குறுகிய காலத்தில் முடிந்து விடும்.

உறுதியாக திகதி எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் நாடாளுமன்றத்தை கலைப்பதாக ஜனாதிபதி உறுதியாக இணங்கியதாகவும் அகிலவிராஜ் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாளை மறுதினம் அல்லது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி திட்டமிட்டு உள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-11)

# புலிகளின்...

GLOCK 17 ரக மில்லிமீற்றர் 9 ரக கைத்துப்பாக்கியை பிரபாகரன் விரும்பி பயன்படுத்தினார் எனவும் அதனை அநேக சந்தர்ப்பங்களில் இடுப்பில் வைத்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகை கைத்துப்பாக்கி மிகவும் விலை உயர்ந்ததாகும்.

M16A2 ரக ரைபில் ஒன்றையும் பிரபாகரன் பிரத்தியேக ஆயுதமாக பயன்படுத்தியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக உறுப்பினர்களை அடையாளம் காண்பதற்காக கழுத்தில் கட்டப்படும் இலக்கத் தகட்டையும் காணவில்லை. பிரபாகரனின் உறுப்புரிமை இலக்கம் 001 ஆகும்.

பிரபாகரன் பயன்படுத்திய இரண்டு ஆயுதங்கள் மற்றும் இலக்கத் தகடு என்பனவற்றுக்கு என்னவாயிற்று என்பது புரியாத புதிராகியுள்ளது என பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரபாகரன் கொல்லப்பட்ட போது உயர் பதவிகளை வகித்த பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்தவர்கள் நினைவுச் சின்னமாக இந்தப் பொருட்களை எடுத்துச் சென்றார்களா அல்லது அழிக்கப்பட்டு விட்டதா என்பது மர்மமாகவே நீடிக்கின்றது என சிங்கள பத்திரிகையொன்று முதல்பக்கச் செய்தி வெளியிட்டுள்ளதாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன. (எ-11)

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் செரினா வில்லியம்ஸ் சம்பியன்

பிரெஞ் ஓபன் தொடரில் கிண்ணம் வென்று சாதித்தார் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ். கிராண்ட்ஸ்லாம் தொடரில் இவர் வென்ற 20ஆவது பட்டம் இது. பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் பாரிசில் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் "நம்பர்-1" வீராங்கனை, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், முதன் முறையாக பைனலுக்கு தகுதிபெற்ற செக் குடியரசின் லூசியே சபரோவாவை எதிர கொண்டார். இதற்கு முன் செரினாவுக்கு எதிராக விளையாடிய 8 போட்டிகளிலும் சபரோவா தோற்றிருந்தார்.

இதனால் எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என களமிறங்கிய செரினா, முதல் செட்டை 6-3 என எளிதாக கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் பதிலடி கொடுத்த சபரோவா, "டை பிரேக்கர்" வரை சென்று 7-6 என வென்றார். வெற்றியாளரை முடிவு செய்யும் 3-வது மற்றும் கடைசி செட்டில் அசத்திய செரினா, 6-2 என தன் வசப்படுத்தினார்.

முடிவில், செரினா 6-3, 6-7, 6-2 என்ற செட்களில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.



கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 6 அவுஸ்திரேலிய ஓபன், 5 விம்பிள்டன், 6 யு.எஸ்., ஓபன் பட்டம் வென்ற செரினா, பிரெஞ் ஓபன் தொடரில் 3வது முறையாக அசத்த, ஒட்டுமொத்தமாக 20 கோப்பை வென்று சாதித்தார். (க)

# பிரெஞ் ஓபன் இறுதிப் போட்டி ஜோகோவிச்-வாரிங்கா இன்று மோதல்



பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் இறுதிப்போட்டிக்கு செர்பியாவின் நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச் முன்னேறினார்.


உலகின் நம்பர்-1 வீரரான ஜோகோவிச், பிரெஞ் ஓபனில் முன்னணி வீரர்களுக்கு அதிர்ச்சி அளித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தி வருகிறார். 9 முறை சம்பியன் பட்டம் வென்ற ரபேல் நடாலை காலிறுதியில் வீழ்த்திய ஜோகோவிச், நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், இங்கிலாந்து வீரர் ஆண்டி முர்ரேவை எதிர்கொண்டார்.

இரு முன்னணி வீரர்கள் களத்தில் இருந்ததால் தொடக்கம் முதலே ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. முதல் இரண்டு செட்களை 6-3, 6-3 என ஜோகோவிச் கைப்பற்றினார்.

3-வது செட்டை 7-5 என முர்ரே வென்றார். 4-வது செட் ஆட்டம் 3-3 என சம புள்ளிகளுடன் இருந்தபோது, புயல் காரணமாக ஆட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது.

நேற்று தொடர்ந்து ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து முன்னேறிய முர்ரே, 7-5 என அந்த செட்டைக் கைப்பற்றினார். இதனால் 2-2 என்ற நிலையில் போட்டி சம நிலையில் இருந்தது. இதையடுத்து வெற்றிக்கான 5-வது செட் ஆட்டத்தைக் காண ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் இருந்தனர்.

இந்த செட்டில் முர்ரேவுக்கு கடும் சவாலாக விளங்கிய ஜோகோவிச், அந்த செட்டை 6-1 என எளிதில் வென்று இறுதிப்போட்டியை உறுதி செய்தார். இவர் பிரெஞ் ஓபனில் இறுதிப்போட்டிக்கு முன்னேறுவது இது 3-வது முறையாகும். சாம்பியன் பட்டத்துக்காக இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் ஜோகோவிச், வாரிங்கா ஆகியோர் பலப்பரீட்சை நடத்த உள்ளனர். (க)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அழகான ஆடையை...

இருக்கின்றார். அந்த தேர்தலில் மைத்திரி பால சிறிசேனவே வென்றார் என்பதை நிமால் சிறிபால டி சில்வா மறந்து போயுள ளார். அவர் தனியான கனவில் இருக்கின் றார். பிரதமர் நாற் காலியில் அமர புதிய ஆடையை தைத்து வைத்து கொண்டு அவர் பகல் கனவில் இருந்து வருகிறார்.

நிமால் சிறிபால டி சில்வா இருப்பது மக் களால் நிராகரிக்கப் பட்ட தோல்வியடைந்த அணியில் என்பதை அவருக்குகூறவிரும்பு கிறேன்.

எவர் தோற்றா லும் எவர் வெற்றி பெற்றாலும் அடுத்த இரண்டு ஆண்டு களுக்கு தேசிய அர சாங்கமே ஆட்சியில இருக்கும்எனவும்சஜித பிரேமதாச குறிப்பிட் டுள்ளார். (எ-11)


# தே வை

எழுதுவினைஞர் ஒருவர் தேவை. நேரில் வருகை தரவும் (அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.) 08.06.2015 4 pm திங்கள்

மேலதிக தொடர்பு : 077 175 3838 (678)

வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் பிரிவு ஐடியல் கல்லூரி, மானிப்பாய். (கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி)


## பிரபாகரன்...

வித்தனர்.

தெற்குப் பொய் கை நல்லூர் கிரா மத்தில், வியாழக் கிழமையன்று இந்த பிரபாகரனின் சிலை திறந்து வைக்கப் பட்டது. வலதுகை யில், குதிரையின் கடிவாளத்தையும் இடதுகையில் துப் பாக்கியையும் வைத் திருப்பது போல, இந் தச்சிலை வடிவமைக் கப்பட்டிருந்தது. (எ-11)

## ஜனாதிபதி...

யில் இணக்கத்தை ஏற்படுத்தி கொண்ட பின்னர் 20-வது திருத்தச்சட்டம் அடுத்த வாரம் அமைச்சர வையில் தாக்கல் செய்யப்பட்டு நிறை வேற்றப்பட உள் ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 இல் இருந்து 255 ஆக உயர்த்த வேண்டும் என 20-வது திருத்தச் சட்டத் தில் யோசனை முன் வைக்கப்பட்டுள்ள துடன் ஐக்கிய தேசி யக் கட்சி உட்பட பல கட்சிகள் இந்த யோச னைக்கு எதிர்ப் பை வெளியிட்டுள் ளன.

இந்த விடயம் தொடர்பில் ஏற்பட் டுள்ள பிரச்சினைகளு தீர்வுகாண பேச்சு வார்த்தைகள் நடத் தப்பட்டன.

அடுத்த இரண்டு தினங்களில் நடை பெறும் பேச்சுவார்த் தைகளில் நாடாளு மன்ற உறுப்பினர் களின் எண்ணிக் கை 230 ஆக உயர் த்த இருதரப்பும் இணங்கும் என அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக் கின்றன. (எ-11)


# வேலைவாய்ப்பு

கணனி பயிற்சி நிலையம் ஒன்றுக்கு ஆண்கள் / பெண்கள் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அடிப்படைத் தகைமை A/L -2 Pass. கணனி அறிவு இருப்பின் விரும்பத்தக்கது. (C-1192)

தொடர்புகளுக்கு : 077 398 7164

**INFORMATION TECHNOLOGY PARK**

Jaffna, Sri Lanka.

Under the purview of the

Ministry of Foreign Affairs

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.

Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

JUNE BATCHES

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course

- Dip.in PC Application & Office Management

Languages

- VB.Net
- PHP
- C Sharp
- Java

Workshops

- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 20-06-15
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 19-06-15

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

*-Executive Officer-* (C-1190)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

# FRENCH CLASSES

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
938 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்..

Register now : 0779 789 456 / 021 221 7781

No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973.
கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி
(C-1186)

# VANAKKAM PHONE CITY

SAMSUNG HUAWEI INTEX DEMAND MORE

Mobile Phone & Accessories Sales
Repairing
Unlocking

வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் அனைத்துவகையான தொலைபேசிகளும் குறைந்த கட்டணத்தில் *Unlock* செய்து தரப்படும்.

SAMSUNG, HUAWEI, INTEX ஆகிய கைபேசிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். (C-1198)

தொடர்புகளுக்கு:
வணக்கம் போன் சிற்றி
இல.07, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(அன்னை நாகா பூட் சிற்றிக்கு முன்பாக)
077 659 0399/077 222 9638

வேலை வாய்ப்பு யாழ் நகரில் இயங்கும் கணினி நிறுவனத்துக்கு சுத்திகரிப்பு, அலுவலக உதவிக்கு ஆள் தேவை

தொடர்புகளுக்கு - 0777 17 3517

## தங்குமிடவசதி

வெள்ளவத்தையில் A/C, Non A/C உடனான தனி அறைகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். யாழ்.மகால் Rest

தொடர்புகளுக்கு :- 19/1, சுவி சித்தாரா றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06 (065)

T.P :- 0113158398, 0770260180, 0773074477

## English for You

G.C.E.O/L மாணவர்களுக்கான கடந்த கால வினா விடை வகுப்புகள் ஆரம்பம்
Student Success Centre (677)
Main Street, Jaffna. 077 616 9470

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கியிருந்து வேலை செய் வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். (667)

தொடர்பு : 0777 700 716

# Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

*(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 ,0212220393 (C-1183)

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

# யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD

## P.ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.

**தொடர்புகளுக்கு:-384, A, நாவலர் வீதி, (கைலாச பிள்ளையார் கோயில் அருகில் நல்லூர்)**

**தொலைபேசி:-021 221 7944**

கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி,
தொலைபேசி:-011 258 6180/ 011 258 6208
(657)

# மருந்தாளர் தேவை

பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு Srilankan Medical Council இல் பதிவு செய்யப்பட்ட மருந்தாளரும் உதவியாளரும் தேவை.

(C-1197) தொடர்புகளுக்கு :- 0777787545, 0771728141

SPEED LANKA EXPRESS Courier



# வெளிநாடுகளுக்கான தபால் பொதி விநியோக சேவை

- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926
(C-1188)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 07.06.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 18



# வாழ்க்கைத் துணைகளை வாட்டி எடுக்கும் விசாரணை

INQUIRY



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : நாளை நமதே
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
வரிகள்: கண்ணதாசன்
பாடியவர்: டி.எம்.சௌந்தராஜன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம்




அன்பு மலர்களே நம்பி இருங்களே
நாளை நமதே இந்த நாளும் நமதே
தர்மம் உலகிலே இருக்கும் வரையிலே
நாளை நமதே எந்த நாளும் நமதே
தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்
நாளை நமதே...
காலங்கள் என்னும் சோலைகள் மலர்ந்து காய்
கனியாகும் நமக்கென வளர்ந்து
நாளை நமதே நாளை நமதே நாளை நமதே
நாளை நமதே நாளை நமதே நாளை நமதே
நாளை நமதே
பாசம் என்னும் ஊர் வழி வந்து பாசமலர் கூட்டம்
ஆடும் மழையில் அமைவது தானே வாழ்க்கை
பூந்தோட்டம்
மூன்று தமிழும் ஓர் இடம் நின்று
பாடவேண்டும் காவியச் சிந்து
அந்த நாள் நினைவுகள் எந்த நாளும் மாறாது
அந்த நாள் நினைவுகள் எந்த நாளும் மாறாது
நாளை நமதே, நாளை நமதே
வீடு என்னும் கோயிலில் வைத்த வெள்ளி
தீபங்களே
நல்ல குடும்பம் ஒளிமயமாக வெளிச்சம்
தாருங்களே
நாடும் வீடும் உங்களை நம்பி நீங்கள்தானே
அண்ணன் தம்பி
எதையுமே தாங்கிடும் இதயம் என்றும் மாறாது
நாளை நமதே நாளை நமதே
தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்
நாளை நமதே...
காலங்கள் என்னும் சோலைகள் மலர்ந்து காய்
கனியாகும்
நமக்கென வளர்ந்து
நாளை நமதே நாளை நமதே நாளை நமதே

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

நல்லதம்பி, ஆர்.கலக்சி-யாழ்ப்பாணம், K.டிசாந்-கிளிநொச்சி, தர்மசீலன், ரூபினி,டுஷி-நீராவத்தை, தர்மசீலன், பாசனா,கருணிகா-மானிப்பாய், அருள்மொழி,தருணான்-சண்டிலிப்பாய், பத்மன்,காண்டீபன், தர்மினி-ஊறணி,பரந்தாமன், தேவரி குடும்பம்-கிளிநொச்சி, அருந்தவநா தன், மதனரூபி,தர்மசீலன்-யாழ்ப்பா ணம், அருமைச்சந்திரன், மதிவதனி, பவானி-தருமபுரம்.

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1532**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

### தவறிப் பிறந்த தராளம்-குறும்பட விமர்சனம்




போர்ச்சூழல் முடிவடைந்தபின்னும் சிறுவர்களுக்குள் புகுந்திருக்கும் உளவியல் நெருக்கடிகளை நெருடிப்பார்க்கும் குறும்படம் தவறிப் பிறந்த தரளம். போர்காலப்பகுதியில் வாழ்ந்த சிறுவனின் மன எண்ணவோடங்களையும் அவனின் வாழ்வியல் மாறுதல்களையும் பதிவுசெய்ய எத்தனித்துள்ளார் இயக்குனர் வதீஸ் வருணன்.

நுட்பமாகச் சிறுவனின் உளவியல் பின்னணிகள் காட்சிப் படிமத்தில் சொல்லப்படுகின்றன. சிறுவனுக்கும் தந்தைக்குமான உறவின் விரிசல்கள், தாய்க்கும் சிறுவனுக்கும் இடையிலான உறவின் ஸ்பரிசங்கள் சரியான பரிமாணத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தன் தந்தையைப்பற்றிக் குறிப்பில் எழுதும்போது தந்தைக்கும் தனக்கும் உள்ள உறவின் சிக்கல்தன்மையை வசனங்களாகக் குறிப்பிடும் படிமமாக்கல் சிறுவனின் மன விம்பத்தினை அட்டகாசமாக முன் வைக்கின்றது. படம் ஆரம்பிக்கும்போது கச்சிதமாகச் சிறுவனின் கதாப்பாத்திர ஸ்திரத்தை சரியான கட்டுமானங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தன்மை திரைக்கதைக்கு வலுவைத்தருகின்றன.தனது சொந்த கிராமத்திற்கு மீளக்குடியேறிய பின்னர் சந்திக்கும் நுட்பமான உளவியல், பொருளாதார, ஒழுக்க நெருக்கடிகளை மையப்படுத்தியும் அதிலிருந்து அவன் எவ்வாறு மீள முயற்சி செய்கின்றான் என்பதையும் விளக்க இயக்குனர் பல்வேறு தளங்களுடன் திரைக்கதை நுட்பத்தினைச் செலுத்தியுள்ளார்.

தந்தையின் கதாப்பாத்திர பின்னல்களையும், பொருளாதாரப் பின்னணியையும் சித்திரிக்கும்போது காட்சிரீதியான சித்திரிப்புக்களைப் படிமமாக்கிச் சில ஒளிச் சட்டங்களிலே வெளிப்படுத்தியதன்மை மகத்துவமான பதிவுசெய்யப்பட்டுள்ளது. தந்தையின் பாத்திரக்கட்டுமாணங்களை உருவாக்கியது போலத் தாயின் பாத்திரக்கட்டுமானங்கள் போதியளவு நுட்பமாக உருவாக்கப்படவில்லை. தாய் ஒழுக்கத்தைத் தவறும் செயறபாட்டுக்குத் தரக்கரீதியான காரணங்கள் சிறுவனின் பார்வையிலோ அல்லது பொதுப்படையான பார்வையிலோ காட்சிப்படுத்தப்படவில்லை. சிறுவன் பாடசாலை செல்லும்போது இளைஞர் குழாம் அவனின் தாயாரின் ஒழுக்கத்தைப் பற்றி நகையாடுகின்ற காட்சியின் போது பார்வையாளர்களுக்குத் தாயும் ஒழுக்கமற்றவள் என்ற செய்தி தெரிவிக்கப்படுகின்றது. அது திரைக்கதையின் முக்கிய திருப்பமாக இருந்தபோதும் அதனை உள்வேண்டிக் கொள்வதில் திகைப்புள்ள சிக்கல் தன்மை உடனடியாக உருவாகின்றன. தாயின் ஒழுக்கம் தவறும்தன்மைக்குக் காரணமாகக் கணவனின் திருப்தியற்ற சச்சரவான வாழ்க்கை முறையினைப் பார்வையாளன் பொதுப்படையாகத் தொடர்புபடுத்தி உய்த்தறிந்துகொள்ள முடியும். இருந்தபோதிலும் அதற்கான வலிமைப்படுதல் சிறிதளவு தவறியிருக்கின்றது.

ஒளிப்பதிவு சீராகக் காட்சிகளைப் பறந்துவிரிந்து நுட்பமாகப் படம்பிடித்துள்ளது. சமந்த தசநாயக்கவின் ஒவ்வொரு ஒளிப்பதிவுச்சட்டமும் மகத்துவமாக அமைந்திருக்கின்றது. நீட்சியான படிமமாக்கல் படக்கோர்ப்பின்போது இன்னும் வேகப்படுத்தப்பட்டு இருக்கலாம். மெலிதான இழுபட்ட தன்மையை அதீதமான தொடர்ச்சியான காட்சிகள் உருவாக்க எத்தனித்துள்ளன. படத்தின் ஒவ்வொரு காட்சிப்படிமமும் அழுத்தம் நிறைந்ததாகவிருப்பதினால் பின்னணி இசைக்கான தேவை அற்றுப்போகின்றது. இதனைச்சரியாகக் கணித்துப் பின்னணி இசையை நுட்பமாக இயக்குனர் தவிர்த்துள்ள விதம் இயக்குனரின் கற்பனை புனைவியல் தன்மையை மிளிரலடையச் செய்திருக்கின்றது.

முடிந்தளவுக்கு இயல்பான நடிப்பினை தர்மலிங்கம், பிரியா, பிரகாஷ் ஒப்பேற்றியுள்ளனர். பிங்கள வடிவமைப்புகள் செயற்கைத்தனமின்றி இயல்பாக அமைந்திருக்கின்றன. உள்ளடக்கம் நேர்த்தியான வடிவத்துடன் அமையப்பெற்றிருக்கின்றது. திரைக்கதையில் இன்னும் நேர்த்தியைக் கொண்டுவந்திருக்க முடியும். மிகநுட்பவியல் தவறுகளைத் தவிர்த்து இப்படம் கவனிக்கத்தக்க குறும்படம்.

போரினால் பாதிக்கப்பட்ட எமது சமுதாயத்தை இயல்பான நிலைக்குக் கொண்டுவர பொருளாதாரம்,கல்வியோடு நின்றுவிடாமல் சமூகக் கடடமைப்பையும் சீர்திருத்த வேண்டியிருக்கின்றது. அதனை உணர்த்த இக்குறும்படம் முயன்றிருக்கின்றது. இக் குறும்படம் முதலாவது கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவிலும் ஜப்பானின் இரண்டாவது ப்லிம்ஏசியா திரைப்பட விழாவில் தெரிவாகி திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தான்யா

உறவின் உந்துதலில்
படுக்கை சுகம் தர
மற்றவை மறந்து
நெருங்கிக் கொண்டேன்

கட்டில் வரைக்கும் ஆதிக்கம் கொண்டு
பிணமாய் மாறிக் காத்திருந்தேன்
எனக்கான நிமிடங்களுக்காக
தினமும் அது வருவதாயில்லை

முடிவுகள் எடுத்து விலகிய போதும்
மீண்டும் மீண்டும்
பிணமாய்ப் போனேன்.
திருப்ப முடியாதபடி கழுத்தில் கனம்
கொஞ்சம் கீழே
தேக்கிய உணர்வோடு
மங்கலான வெளிச்சத்தின் கீற்று

பிரகாசமான உதடுகளின்
வெடிப்பை மறைக்கும்
சாயங்கள்
விழிகளின் குறும்புகளை
இரசிக்க முடியாமல்
சிதறிய கருமை
சுவாதீனமான சோர்வையாய் உடல்


மார்பகங்கள் பால் உறுப்புகள்
இவற்றை மூடி மறைத்து அடக்கி
சட்டம் ஒழுங்கு எனும் சூழல்
ஒரு ஆன்மாவின் துடிப்பும் தேவையும்
உணரப்படாமலே முடிகிறது.

குளிரின் மெல்லிய சிலிர்ப்பில் ஊடுருவி
மெதுவாய்க் கூதி நேரம் போக
நடுங்கிக் கொண்டு
கணவனாய் காதலனாய் குழந்தையாய்
தன்மைகளுக்கேற்ப மாறிப் போகிறேன்.
குளிரோ வெயிலோ காலங்கள் மாறி
மாற்றம் நிகழும்
ஆனால் இங்கு எனக்கான நிமிடங்கள்
எனக்கான நாட்கள்
எனக்கான வருடங்கள்
எப்போதும் போல அப்படியே இருக்கிறது.

எஞ்சிய நினைவாய்
அங்கும் இங்குமாக
ஞாபகத்தின் ஒட்டைகள்
காதலின் எச்சமாய்
சிரிப்பாய் சிரிக்கும்
என்றென்றைக்குமாக
அளித்திருந்த பரிசுகள்

பாதங்களுள் நசிந்து போகும்
மண் புழுவைப் போல உணர்ந்தபோது
சிதறிய துளிகளை விலத்தி விடைபெற
ஒரமாய் அன்பின் எச்சமாய்
தொடர்ச்சியான நாட்கள் கீறும்.

# facebook



## குருவின் நல்ல உள்ளம்

ஒருநாள், முனிவர் சித்தானந்தர் தம் சீடர்களுடன் நகரத்தின் தெருக்கள் வழியாக நடந்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ஞானி. எனவே, மக்கள் அவரை மிகவும் மதித்தனர். அவர் சீடர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர். ஒரு பணக்கார பெண்மணி யின் வீட்டருகே அவர்கள் நடந்தனர். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த வீட்டி லிருந்து வெளியே வந்தது. குழந் தைகள் மேல் மிகுந்த அன் புடையவர் ஞானி. அவர் குழந் தையை அன்புடன் நோக்கினார்.

குழந்தை ஒரு தட்டு நிரம்ப ரோஜா மலர்களைக் கொண்டு வந்து சித்தானந்தர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

மலர்கள், மணம் தரும் பொருட்கள், தைலங்கள் என்றால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார் என்பது சீடர்களுக்குத் தெரியும். ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை சீடர்களிடம் நீட்டினார். சீடர்களுக்கு சொல்லவா வேண்டும். தலைக்கு இரண்டு மூன்றாக அவர்கள் மலரை அள்ளிக் கொண்டனர்.

மலர்களை அர்ப்பணித்த குழந்தை மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றது. சீடர்கள் புடை சூழ சித்தானந்தரின் உலா தொடங் கியது.

ஒரு வயதான மூதாட்டி ஞானியை தன் வீட்டுக்குள் வரவேற்றாள். சீடர்கள் உள்ளே சென்று அமர்ந்தனர். ஒரு பணியாள் அப்பிள் பழத்தட்டை அவர் முன் வைத்தார். ஒரு பழத்தை எடுத்துச் சுவைத்தார் சித்தானந்தர். பழம் மிகவும் சுவையாக இருந்தது. அவை களை எடுத்து தன் சீடர்களுக்கு வழங்கினார்.

சீடர்கள் பழங்களை சுவைத்து உண்டனர். ஞானி யைத் தொடர்ந்து செல்வதால் அவர்களுக்கு அவ்வப்போது நல்ல சுவையான பொருட்கள் கிடைத்து வந்தன. எனவே, இந்த சந்தர்ப்பங்களை சீடர்களில் எவரும் தவறவிடுவதில்லை.

செல்வந்தர்கள் வாழும் வீதிகளை எல்லாம் அவர்கள் கடந்து சென்றனர். இப்போது வசதி குறைந்தவர்கள் இடம் நகரின் ஒதுக்குப் புறமான பகுதி.

ஏழை விதவைப் பெண் ணொருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் ஞானியை தன் சிறிய வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். அவளது அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் சீடர்களும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

ஐயனே, நீங்கள் இதைச் சாப்பிட வேண்டும், என்று கூறி ஒரு தட்டை நீட்டினாள்.

தட்டைப் பெற்றுக் கொண்ட ஞானி அதில் திராட்சைப் பழங் கள் இருந்ததை பார்த்தார்.

ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார். சுவைத்து உண்டார். சீடர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

மீண்டும் ஒரு பழத்தைப் பிய்த்து வாயில் போட்டு மென்று சுவைத்தார். இப்படியாக எல்லா பழத்தையும் தான் ஒருவராகவே தின்று தீர்த்தார். தங்களுக்கு அப்பழத்தை வழங்காமல் தானே உண்டதைக் கண்ட சீடர்கள் வியப்படைந்தனர்.

திராட்சைப் பழம் வழங்கிய ஏழைக் கைம்பெண்ணுக்கு நன்றி கூறினார் ஞானி. பின்னர் வெளியே வந்து நடக்கத் தொடங் கினார். சீடர்கள் அவரோடு நடந்தனர்.

சீடர்கள் முகத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இதுவரை எல்லா பொருட்களையும், உணவையும் பகிர்ந்து கொண்ட குரு திராட் சைப் பழங்களை மட்டும் தன் னந்தனியாய்த் தானே உண்டது ஏன்? எல்லோருடைய உள்ளத் திலும் இக்கேள்வி எழுந்து நின்றது.

சீடர் ஒருவர் வாய் திறந்து இக்கேள்வியைக் கேட்டே விட் டார். நீங்கள் ஏன் தனியாகச் சாப்பிட்டீர்கள்? எங்களுக்கு ஒரு பழங்கூட தரவில்லையே... ஏன்? அந்த திராட்சைப் பழம் மிகவும் புளிப்பாய் இருந்தது. எனவே, நான் ஒருவனாக அவற்றைத் தின்றேன், என்றார் குரு.

உங்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு கொண்டிருக்கிறோம். அப்படி யிருக்க, சுவையற்றதை நீங்கள் தனியாக உண்ண வேண்டும் சுவை மிகுந்ததை மட்டும் எங் களோடு பகிர்ந்துண்ண வேண் டுமா? இது நீதியாகுமா?

என்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் நீங்கள் பங்கு கொள்ள விரும்புவது உண் மையாக இருக்கலாம். ஆனால், இதில் ஓர் ஏழைக் கைம்பெண் இடையே இருக்கிறாள். அவள் தந்த திராட்சைப் பழங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டால், இந்தப் பழம் புளிக் கிறது" என்று நீங்கள் சாப்பிடும் போதே சொல்லி விமர்சனம் செய்து அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்திவிடுவீர்கள். அவளது மனது படாத பாடுபட்டு நொந்து போய்விடும். அதனால் தான் திராட்சைப் பழங்களை உங்களுக்குத் தரவில்லை" என்று சொன்னார் முனிவர்.

எவருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற கருத்தில் தங்கள் குரு எத்தனை உண்மையாக இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர் சீடர்கள்.


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 394

Search for people, places and things Nagendram Home

இராசரத்தினம்றஜி றஜி




சச்சி சங்கீத்




ரவிவர்மன் ராஜகோபால்




ராகுலன் பாலா




நிஷா விஸ்வா




கியாஸ் மொகமட்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நரியாரும் நத்தையாரும்

நரியார் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் வயது முதிர்ந்தவராக இருப்பதால், தனது பாதுகாப்பில் மிகவும் கவனமாக இருக்க வேண்டியிருந்தது. அவர் ஒரு அழகான பள்ளத்தாக்கு வழியே நீண்ட நேரம் நடந்து கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு பெரிய மரத்தை அடைந்தர். திரு நரியார், மிகவும் களைப்படைந்திருந்ததால் ஓய்வெடுக்க விரும்







பினார். அத்தோடு பாதுகாப்பும் தேவைப்பட்டது.

அவர் அந்த மரத்திடம் கேட்டார். "மரமே! தயவு செய்து உன்னை திறக்கச் செய். அப்பொழுதுதான் நான் உன்னுடைய கவனிப்பில் கீழ் பாதுகாப்பாக ஓய்வெடுக்க முடியும்."

அந்த மரமும் திறந்து (பிளந்து) கொண்டது. அப்படியே நரியாரும் உட்பக்கம் செல்ல முடிந்தது. அப்பொழுது அவரை பாதுகாப்பாக தைத்திருப்பதற்காக அது மூடிக்கொண்டது. நரியார் சில மணி நேரம் உறக்கத்தில் வீழ்ந்து விட்டார். அவர் கண்விழித்தபோது, மரத்தைத் திறக்கச் செய்வதற்காக என்ன சொன்னார் என்பது இப்போது அவருக்கு ஞாபகத்தில் இல்லை.

அவர் சொன்னார். "திரு மரமாரே என்னை வெளியில் விடு" என்று ஆனால், அங்கே ஒன்றும் நடக்கவில்லை.

அவர் மீண்டும் சொன்னார். "தயவு செய்து இப்பொழுது என்னை வெளியேவிடு." என்று. திரும்பவும் ஏதும் நடக்கவில்லை. முன்னர் திறக்கும்போது கேட்ட *கிரீச்* ஒலி இப்பொழுது கேட்கவில்லை. நரியார்தான் முன்பு எப்படி மரத்துடன் பேசினேன் என்பதை மறந்துவிட்டாரே. நரியார் உட்பக்கமாக இருந்துகொண்டு மரத்தின் மீது தட்டினார். அப்பொழுதும் மரம் திறக்கவில்லை.

மரத்தில் இருந்த பறவைகள் நரியார் தட்டியஒலியைக்கேட்டு, நரியாருக்கு உதவி செய்வதற்காக கீழே பறந்து வந்தன. ஆனால், அவை சிறியனவாக இருந்தன. மரமோ பெரிதாக இருந்தது. இறுதியாக மரங்கொத்தியார் வந்தார். மரத்தில் துளை ஒன்று இடுவதற்கு உதவினார். இருந்தாலும் அது மிகவும் சிறிய துளையாக இருந்தது. மரங்கொத்தியின் அலகு வளைந்ததுதான் மிச்சம்.அவரால் அதற்கு மேல் உதவ முடியவில்லை.

நரியார் தனது ஒரு கையை துளையி னூடு வெளியேவிட்டார். ஆனால், அவரது உடல் வெளியே வரமுடியவில்லை. பின்பு நரியார் தனது கால்களை வெளியேவிட்டார். துளையானது கைக்கும்காலுக்கும் கொருந்தி யதே ஒழிய அவர் முழுமையாக வெளியே வருவதற்கு- அந்தத் துவாரம் சிறியதாக இருந்தது. மரங்கொத்தியார் போட்ட துளையி னூடு தப்பிக்க ஒரு வழி செய்ய வேண்டியிருந்து. நரியார் ஒரு வழியாக தப்பிப்பதற்கான மார்க்கத்தைக் தெரிந்துகொண்டார்.

ஆனால், அது மிகவும் வருத்தம் தருவ தாக இருந்தது. அவர் மரத்தாரை ஏசினார். "ஆ...ஹ்ற அசிங்கமான பழைய மரமே வா...! என்னை வெளியேவிடு." ஆனால், அதன் பின்பும் எதுவும் நடக்கவில்லை. எல்லாம் அப்படியேதான் இருந்தது. நரியாரை அமைதி சூழந்து கொண்டது.

நரியார் இறுதியில் தனது எண்ணத்தை நிறைவேற்ற முடிவெடுத்தார்.

அவர் முதலில் தனது ஒரு கையை துளையினூடாக வெளியே வைத்தார். பின்பு கால்களைக் கழற்றி வெளியே வைத்தார். பிறகு தனது உடலை அத்துவாரத்தினூடாக வெளியே வைத்தார். "இது நன்றாக வேலைசெய்கிறது! மரமே என்னை உன்னால் உள்ளே வைத்திருக் முடியாது! உனக்கு நான் யாரென்று காட்டுறன்" என்று முணுமுணுத்தார்.

அடுத்ததாக நரியார் தனது தலையை வெளியே துவரத்தினுடாக எடுக்க முயற்சித்தார். ஆனால், அது பெரிதாக இருந்தது. அதனுடைய காதுதுவாரத்தின் பாதையில் இருந்தது. அதனால், காதைக் கழற்றி துளையினூடாக வெளியே வைத்தார். மீண்டும் தலையை துளையினூடாக வைத்தார். இப்பொழுது கண் பெரிதாக இருந்தது. இதனால், தனது இரு கண்களையும் கழற்றி தூவரத்தினுடாக வைத்தார்.

ஒரு காக்கையார் அந்தக் கண்களைக் கண்டார். கீழே பறந்துவந்து அந்தக் கண்களை எடுத்துக்கொண்டு மீண்டும் மரத்தின் உச்சிக்குப் பறந்தார். "அவை எவ்வளவு அழகானவை வாத்தின் நீலத்தைப்போன்று. இவை புதையலாகத்தான் இருக்கவேண்டும்" என எண்ணிய காக்கையார் அதனை இரகசியமான ஒரு இடத்தில் மறைத்து வைத்தார்.

இறுதியாக தனது தலையை வெளியே எடுத்த நரியார், தனது உடலின் பாகங்களை தன்னுடன் ஒன்று சேர்த்தார். மீண்டும் முழுமையான ஒரு நரியாராக அவர் வந்துவிட்டார். ஆனால், தனது தலையைப் பொருத்திய பிறகு அங்கே கண்களைக் காணவில்லை. நரியார் மிகவும் கவலையடைந்தார்.நரியாரின் காதுகள் கேட்கிறது. கைவிரல்கள் கவனமாக இருக்கிறது. ஆனால், கண்களை மட்டும் காணவில்லை.

அவர் குருட்டு நரியாராகிவிட்டார். இதனால், விலங்குகளுக்கு மத்தியில் அவர் செல்லவில்லை. காட்டுரோஜ புதர்வழியே தன்வழியே போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது அது இரண்டு ரோஜா இதழ்களை தனது இரண்டு கண்களுக்கும் பதிலாக வைத்துக்கொண்டார். இதுதனது குருட்டுக்கண்களை மறைத்துக்கொள்ளும் என அது எண்ணியது.ஆனாலும் தனது கண்களை அது தேடிக்கொண்டுதான் இருந்தது. "நிச்சயமாக அது இங்கே எங்கேயோ எனக் மிகவும் அருகில்தான் இருக்க வேண்டும்" என நினைத்தது.

நரியாரின் பாதையில் நத்தையார் ஒருவர் சந்தித்தார். அது கேட்டது. "நீர் ஏன் உமது கண்களில் ஏன் ரோஜா இதழ்களை வைத்திருக்கிறீர்" என்று. நரியார் சொன்னார். ஏனென்றால், அவை மிகவும் அழகாக உள்ளன. அவை அழகான நிறத்தையும் கொண்டிருக்கின்றன. நீரும் விரும்பினால் முயற்சிக்கலாம். நான் உனது கண்களைப் பிடித்திருப்பேன்" என்றது.

நத்தையார் தனது இரு கண்களையும் கழற்றி நரியாரின் கைளின் மேல் வைத்து விட்டுரோஜா இதழ்களை எடுத்து கண்கள் இருந்த இடத்தில் வைத்துக் கொண்டது. நரியார் நத்தையின் கண்களை தனது கண்களில் வைத்துக் கொண்டு தனது நீண்ட வாலை ஆட்டி ஆட்டி ஓடித்தப் பிவிட்டார்.

இன்றும் நத்தையார் தலையைத் தொங்கப் போட்டவாறு தனது கண்களைத் தேடி ஊர்ந்து திரிகிறார். எல்லா நரிகளும் நீலக் கண்களுக்குப் பதிலாக மண்ணிறக் கண்களைக் கொண்டுள்ளன. ஏனென்றால் நரியின் கண்களை காக்கையார் மிக இரகசியமான இடத்தில் ஒழித்து வைத்துவிட்டார்; காக்கையாருக்கே அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

தமிழில், பாமா

# நிலா வாசம்!



இந்த அம்மாக்கள்
தோசைக்கல்லில்
நிலவு வார்ப்பார்கள்!

அப்பா கட்டிய
வீடாயிருந்தாலும்
அது எமக்கு
அம்மா வீடுதான்.

அடுப்படியே
அம்மாவின்
அலுவலகம்!
அன்புமட்டுமே
எதிர்பார்க்கும் சம்பளம்!

பிள்ளைகள்
வெளியூரில்
பணியிலிருக்கும்
ஒரு வீட்டில்,
பக்கத்துவீட்டுக் குழந்தைகள்
சாப்பிட்டுக்கொண்டிருக்கும்!

அப்பா வாசம்
வெயில் வாசம்
அம்மா வாசம்
நிலா வாசம்!
எமது
சமையலறையெங்கும்
நிலா வாசம்!

எமக்குக்
காய்ச்சல் வந்தால்
மருந்து தேவையில்லை!
அடிக்கடி வந்து
தொட்டுப் பார்க்கும்
அம்மாவின் கையே
போதுமானது!

# கிருமிகொல்லி உபகரணம்- இளவயதினர் சாதனை!



கிருமிகளைக் கொல்லும் கருவியொன்றைப் படைத்து ஹொங்கொங்கைச் சேர்ந்த இளவயதினர் சாதனை யொன்றை நிகழ்த்தியிருக்கின்றனர்.

ஸம்மிங்-17 வயது, கிங்பொங்-18 வயது ஆகிய இருவரும் இணைந்து கதவுக் கைபிடி போன்ற அமைப்பின் மூலம் கிருமிகளை கைகளில் காணப்படக் கூடிய கிருமிகளைக கொன்றொழிக்கும் ஞைங்கரியத்தைச்செய்துள்ளனர். ஒவ்வொரு முறை கதவு திறந்து மூடும்பொழும் அச்சமயத்தில ஒரு சக்தி பிறப்பிக்கப்படுகிறது. அந்த சக்தி கதவின் கைப்பிடியில் கிருமிகளைக் கொல்லும் எதிர்வினையைத் தூண்டுகிறது. ஆய்வுகூட சோதனைகள் மூலம் இந்தக் கருவி, கைகளில் உள்ள 99.8 வீதமான கிருமிகளை அழித்துவிடுகிறது.

தைததானியம் டையொக்சைட் என்ற இரசாயனப் பொருளானது புறஊதாக் கதிர்களின் முன்னிலையில் ஒரு கிருமி நீக்கியாகத் தொழிற்படுகிறது. எனவே, அந்த இரசாயனத்தை இந்த கைபிடியில் பூசியிருக்கிறோம். அதற்கு புறஊதா ஒளியைச் செலுத்துகிற நுட்பத்தை [illegible] என்று தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் பிறந்தநாள் எப்போது...

யாழ்ப்பாணத்தில் அதிகமாக இருக் கும் பிரச்சினை எது?

மகிந்த பிரதமராக வருவாரா?

**அனுசியா — கொடிகாமம்**

**பயம் ஆனால் வெற்றிபெற்று விட்டோம் என்ற திருப்தி எப்படியிருக்கும்?**

ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் மஞ்சள் கோட்டைக் கடக்கும் பாதசாரிகளைப் பார்த் தால் புரியும். நிறைய வாகனங்களை நிறுத்தி விட்டு நாம் குறுக்காக செல்கின்றோம் என்ற பயத்துடன் கூடிய திருப்தி.

**தனம் — வரணி**

**விஜய் அவர்ட்ஸில் விஜய்க்கு விருது இல்லை ஏன்?**

அதுதான் அவர்ட்ஸிலேயே அவர் இருக்கிறாரே?

**அரவிந் — மானிப்பாய்**

**மனதளவில் நீங்கள் கஷ்டப்பட்டது எப் போது?**

இறந்து போன ஆருயிர் நண்பனின் பெயரை எனது தொலைபேசியில் இருந்து அழிக்க முற்பட்டபோது.

**தர்சி — வயாவிளான்**

**மகிந்த பிரதமராகவரு வாரா?**

செவ்வாய்க் கிரகத்தில் குடியேற விணணப்பம் கோருகிறது நாசா. தமிழர்கள் விண்ணப் பத்தை அனுப்புவது நல்லதென்பது நம் கருத்து.
புரியவில்லையா?
**வெள்ளம் வருமுன் வரம்பு கட்டுவோம்.**

**நகுவராஜ் — சுழிபுரம்**

**அம்மாவின் பாசமா அப்பாவின் பாசமா பெரிது?**

அம்மாவின் அன்பு களிமண் போலே எப்போதுமே ஈரத்தை வெளிக்காட்டிக் கொண் டிருக்கும். அப்பாவின் அன்பு கருங்கல் போல நீர் இருக்கும். ஆனால் தெரியாது. அன்பு என் பதில் மாற்றமில்லை.

**நிருஜன் — கோண்டாவில்**

**அழகான ஒரு ஆணும் பெண்ணும் சண்டை போட்டா எப்படி இருக்கும்?**

ரம்ப அழகா இருக்கும்.

**தனு — அல்வாய்**

**நட்பு இறுதிவரை நட்பாக இருக்க என்ற செய்யணும்?**

நட்பு நட்பாக இருந்தால் போதும்.

**ரெனிசொன்**

**யாழ்ப்பாணத்தில் அதிகமாக இருக்கும் பிரச்சினை எது?**

ஒரு சிறிய கதை. துறவி அந்த வழியால் வந்து கொண்டிருக்கிறார். ஒருவன் அவரை மறிக்க அவர் நான் போக வேண்டும் என்னை விடு என்கிறார்.
அவனோ இதோ இங்கே ஒரு பெண் இருக் கிறாள். அவளிடம் ஒரு குழந்தை இருக்கிறது. அவள் கையில் மதுவும் வைத்திருக்கிறாள். நீ போக வேண்டுமென்றால் மதுவைக் குடித்து விட்டு செல் அல்லது இந்த குழந் தையை கொன்றுவிட்டு செல் அல்லது இந்த பெண்ணை பலாத்காரம் செய்துவிட்டுச்செல் என்கிறான்.
துறவியோ கொலை செய்வது, பெண்ணை பலாத்காரம் செய்வது இரண்டையும் விட மதுவை குடித்துவிட்டு இவனிடமிருந்து தப்பி விடுவோம் என்று மதுவைக் குடித்தார். போதையில் பெண்ணை பலாத்காரம் செய் தார். தடையாக இருந்த குழந்தையைக் கொன்றார் எல்லா தவறுகளுக்குமே காரணம் மது... மது... மது...



**போர்க்களத்தில் வைத்து உன் தலையைச் சீவிடுவேன் என்று ஓலை அனுப்பினான் எதிர் நாட்டு மன்னன் !**
**தலையை மொட்டை அடித்துக் கொண்டு வந்தால் என்ன செய்வாய் என்று கேட்டு பதில் ஓலை அனுப் புங்கள் அமைச்சரே !**

**சத்தியா — புங்குடுதீவு**

**ஒன்றுமே அறியாத சிறுமிகளை சீரழிப்ப வர்களை என்ன செய்யலாம்?**

மிருகங்களுடன் கூட இவர்களை ஒப்பிட முடி யாது. ஏனென்றால் ஒரு மிருகம் இன்னொரு மிருகத்தை தன் உணவுக்காக அடிக்கிறதே தவிர தன் பாலியல் தேவைக்காக தன் இனத் தையோ வேறு இனத்தையோ அவை துன் புறுத்துவதில்லை.

**குருபரந்தாமன் — அல்வாய்**

**வெளிநாட்டில் வாழ்வதா? உள்நாட்டில் வாழ்வதா சிறந்த வாழ்க்கை?**

அண்மையில் கனடாவில் இருந்து வந்த எனது சிநேகிதிமகள் கூறினாள். வீட்டு வாச லில் கொட்டியிருக்கும் பனியை நாம்தான் சுத் தம் செய்ய வேண்டும் என்று. நமக்குத்தான் பனிப் பிரச்சினையுமில்லை புல் பிரச்சினையு மில்லையே.

**கரன் — சுழிபுரம்**

**சென்னை சுப்பர் சிங் அணியில் அஸ் வினுக்கு ஏன் அணித்தலைவர் பதவி கொடுக்கவில்லை?**

ஏன் சென்னை அணி நன்றாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?

**கிருஷா — வரணி**

**உங்கள் மனைவி ஐந்து மாதமாக வீட்டுக்கு வெளியே வரவில்லையாமே ஏன் மாமா?**

இல்லையே எட்டு மாசமாக தானே வரவில்லை. இன்னும் இரண்டு மாதத்தில் வந்துவிடுவார்.

**தேவி — யாழ்ப்பாணம்**

**குற்றவாளிகள் எனத் தெரிந்தும் தண் டனை தள்ளிப் போவது ஏன்?**

குற்றவாளிகள் என தெரிந்த பின் தண்டனை கள் தள்ளிப்போவதில்லையம்மா. குற்றவாளி என உறுதிப்படுத்தமுன் எப்படி தண்டனை வழங்குவது?

**அ.நளினாசினி — கோண்டாவில்**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிறந்தநாள் எப்போது? அவ்ருடைய நம் பருக்கும் அவருடைய குணங்களுக்கு ஏதேனும் தொடர்பு உள்ளதா?**

03.09.1951
மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் ஆன் மீகத் தலைவர்களாகவோ, தேச நலன் கருதிய தேசத்தின் தலைவர்களாகவோ, விஞ்ஞான ஆராய்ச்சியில் பிரசித்திபெற்றவர் திகழ்வர்.

அடக்கம், பொறுமை, நல்லெண்ணம் என் பவற்றால் பிறரை கவருவார்.

சுவாமி விவேகானந்தர், இந்தியாவின் முதல் ஜனாதிபதி பாபு இராஜேந்திர பிரசாத், தொலை பேசியை கண்டுபிடித்த கிரகம்பெல் ஆகியோா மூன்றாம் எண் இலக்கத்தையுடையவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## விதையாகிப்போன வித்தியா

வித்தியா...
நீ,வாடாமல்
பூத்துக்குலுங்க வேண்டிய
வண்ணமலர்
உன்னை மொட்டிலே
கசக்கி எறிந்தனரே பாவிகள்
பள்ளிச் சிட்டாய்
பறந்து திரிந்த
உன்னை
கொன்று சிதைத்தனரே
பாதகர்கள்
சிறகுகள் உடைக்கப்பட்டு
விலங்குகளால்
விலங்கிடப்பட்டு
சீரழிக்கப்பட்ட
சின்னஞ்சிறு மலர்-நீ
தாயகமே உனக்காக
தன் நிலை மறந்து
கதறியழுகின்றது
சர்வதேசமும்
உன் நிலை கண்டு
கண்ணீர் வடிக்கின்றது
காலத்தால்
ஈடு செய்ய முடியாத
உன் இழப்பை
கவிதைகளும் கண்டனங்களும்
கண்ணீர் அஞ்சலிகளும்
கண் துடைத்துப் போகின்றன
வித்தியா...உன் சாவு
மௌனங்களால்
முடிச்சிடப்பட்டு
மௌனித்துப் போகின்றன
இருந்தும்...
புரட்டப்படும் வரலாறுகள்
ஒரு நாள் திருத்தப்படும்
அப்போது உனக்கான நீதியும்
அதில் எழுதப்படும்

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்.**

## வேண்டும் ஓர் சுய இராச்சியம்

விழாக்கோலம் பூண்டு -பல
வித்தை காட்டும் உலகினிலே
பல வினோதமான
செயல்களும் நடப்பதுண்டு
நாம் விளக்குபோல் ஒளிர்ந்தாலும்
எம்மை வீழ்த்தி விட்டுப்போவார்கள்
வீம்பர்கள்
நாம் வீர நடை போட்டு
வீராப்பாய் நடந்தாலும்
போதைகளால் எம் பாதைகளை
மாற்றி விடுவார்கள்
நல்லவனாய் வாழ்வதற்கும்
இங்கு நாதியில்லை
பிறரை நல்லவனாய்
ஆக்குவதற்கும்
இங்கு இடமில்லை
இதற்கெல்லாம் எமக்கு
வேண்டும்
ஓர் சுய இராச்சியம்

**அ.அச்சுதன்,**
**கோண்டாவில்**

## மீளக்குடியமர்வோம்

இருபத்தைந்து வருடங்கள்
இருக்க இடமாற்று
இரவல் வீட்டில் இருந்து விட்டு
இயற்கையின் ஆதிக்கத்தினுள்
செல்லும் சண்முகம்
பத்து ரூபா போனில் மீதியிருக்கு
பத்து பேர்க்கு கோல்
எடுத்து செய்தி பரப்ப
பரவிய செய்தியால்
பரிதவித்து ஓடிய ஏக்கர்கள்
மிகுதி கூரையற்ற கட்டட்மும்
இப்பில் இப்பில்
மரம்களும் வரவேற்க
தன்வீட்டை தன்னால்
அடையாளம் காணாத
பவளராணி அக்காவும்
பொழுது புலர தன்
வீட்டுக்கு விடைகொடுத்து
சூரியன் அழைத்து அடுத்த நாள் வர
வழுக்கி விழுந்தவனை
மாடு ஏறி மிதிப்பதுபோல்
இரும்பு எடுக்கும் இரணியன்கள்
இப்பற்றாக்குறை தீர்க்க "பிளாற்"
எல்லாமே பிரித்தெடுக்கும் வில்லன்கள்
ஆலயத்தில் ஆண்டவனையும்
அடைவு வைக்க முற்பட்டு
கள்ள விறகு எடுக்கும் கயவர்கள்
இலாவகமாக லான்மாஸ்ரருடன்
நடைபோடும் தரகர்கள்
அலக்கேசன் வந்து விட்டால்
பாரில் தேடும் பாதைகள்
பாவியான பக்கோவும் தன் மூச்செறிய
தவித்து தவித்து தள்ளுகிறது
மக்கள் வாழும் மனித பூமியாக மாறிட
எத்தனை நாள் தவம் கிடப்போம்

**கு.கோபிராஜ்**
**சண்டிலிப்பாய் வடக்கு**

## இமயம் தொட

உன் வாழ்வைத் தொலைத்துவிட்டு
எங்கே ஓடுகிறாய்?
பணத்தை நோக்கிய
உன் பயணம்
பாதாளத்தை கொண்டு சேர்க்கும்
உண்மை புரிந்து கொள்
வியர்வை சிந்தி உழை
அந்த முத்துக்களே
உன் வாழ்வின் சொத்துக்கள்

மாவை. நா.கஜேந்திரன்

## வேளை

வந்தது வேளை
'வாய்ப்புகள் தேடி
இரண்டடி வைத்தால்
நாலடி சறுக்கி
கண்டனர் மாந்தர்
கனவிது வன்றோ!
கூட்டினை விட்டு
குஞ்சு போனது
சாத்திரம் கேட்டும்
சாபம் போகுமா?
நீட்டிய கையும்
நிலத்தில் பார்வையும்
பிச்சை என்று
பிதற்ற வைக்கிறது
வேண்டாம் இனியும்
விரும்பாத துன்பம்
தூண்டா மணிவிளக்கே
ஆண்டவனைக் கேளு!

**மயிலை**
**தேவகவி. மசா**

# மௌனத்தின் தேடல்- 251



## மரண சன்மானம்

கடல் நீரில்
திரி எரியும்
அற்புதம் நிகழ்த்தும்
அம்மனுக்கு...
நிழல் கொடுத்துவரும்
தாடையில் விடமேந்திய
சர்ப்பமே
சுமையில் புத்தகமேந்தி
கல்விக்காய் தனிவழி
சென்ற இளம் பெண்ணை
பாடையில் ஏற்றிய பாதகருக்கு
உன் விடத்தினால்
ஈந்திடாயோ மரண-சன்மானம்!

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

## வஞ்சனை விதி

வன்முறையால்
வாழ்வழிக்கப்பட்ட
வனிதையே! உன்னை
கொடிய நஞ்சும்
விரட்டித் தொடரினும்
நாணியது பின் நாடி
சென்றிடுமே!
உன் விதி முடியவில்லையே
எப்படி உயிர்
செல்லமுடியும் இறைவா
ஏன் இந்த வஞ்சனை-இவள்
என்ன பாவம் செய்தாள்

*பொ.புனிதன்*
*வரியப்புலம்*

## பெண்ணே

பேதை என்றாலும் என்ன
மேதை என்றாலும் என்ன
கசக்கிப்-பிழிந்து ஏப்பமிடும் உலகம்
கயவர் காமுகரின் அறிவு
ஆறுமில்லை ஐந்துமில்லை- ஏன்
ஒன்றுகூட இல்லை
சொற்ப ஆசைகள் இன்று
பெட்டிக்கடைகளில் சில்லறைகளாக
சிதறுகிறது தெருவோரம்
தெருவோரம் சிதறுவது
சில்லறைகளே தவிர-உன்
சிந்தனைகள் அல்ல
திடமாய் இரு தெளிவாய் இரு

*யு.சோபியா*
*விசுவமடு*

## உறுதி

கருநாகங்களின்
சீண்டுதலுக்கு
கிருஷாந்தி மட்டுமல்ல
புங்கை மண் பெற்றெடுத்த
எங்கள் சோதரி வித்தியாவும்
விலையாகிப் போய்விட்டாள்
காமசுகம் காணத்துடிக்கும்
கரும்பாம்புகளே
வேஷம் புனைந்து
விளையாடும்
நாசகார ஞாலத்தில்-உம்
புற்றுக்கள் சிதைவது
உறுதியே!!!

*மல்லாவி மைந்தன்*

## நாளைய விடியல்

புராணங்கள் சொன்ன
கலாசாரம் எங்கே?அது
புராதனத்திலேயே
புதைந்து விட்டதா!
பெண்மையின் சுதந்திரம் எங்கே?
அது பாரதியின்
காலத்தில் மட்டும்தானா!
ஒவ்வொரு வீட்டிலும் தெய்வமாய்
போற்றவேண்டிய மங்கையினத்தை
மதுவின் மயக்கமோ
மாதுவின் விருப்பமோ
இரகசியம்தான் என்ன!
எம் சகோதரி வித்தியாவின்
உயிரையே பறித்துவிட்டதே!
ஒன்பது நச்சுப் பாம்புகளின்
கொடியவிஷம்- மிளிரட்டும்
நீதிதேவதையே கண் திறப்பாயா
உன் பார்வைதான் நாளைய
விடியலில் பெண்களின் சுபீட்சம்

*எஸ்.அகல்யா*
*சண்டிலிப்பாய்*

## முற்றுப்புள்ளி

போதையால் நாளும் பொழுதும்
பேதைகள் பலியாகின்றனர்
வேகமாய் வளரும் விஞ்ஞானம்
விவேகத்தை மட்டுமல்லாது
விபரீதங்களையும்
ஏற்படுத்துகின்றது
மலைப்பாம்பிடமன்று சிக்கிய
தமயந்தியை விரைந்துவந்த
வனவேடன் காப்பாற்றினான்
இன்று வேடதாரிகள் பெருகி
இரை தேடித்திரிகின்றார்
திரைமறைவு நாடகங்களுக்கு
விரைவில் வேண்டும் முற்றுப்புள்ளி


*க.நாகராசா*
*நுணாவில்*

## கொன்றுவிடு அந்தக் கயவர்களை

பெண்களைக் குறிவைக்கும்
ஒரு சில இழிவான
ஆண்கள் மத்தியில்
நீயும் இணைசேர்ந்ததன்
காரணம் என்னவோ
மாணவ பூக்களை- உன்
கொடிய விஷத்தினால்
கொல்லப்போகிறாயா? முடிந்தால்
வித்தியாவின் படுகொலைக்கு
காரணமானவரை
நீ கொன்றுவிடு
உமக்கு நாம்
ஆலயம் கட்டுகிறோம்

*பா.சுபீதன்*
*கரணவாய் மத்தி*

# மௌனத்தின் தேடல் -252



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 10.06.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமையவிருக்கும் பொதுத்தேர்தலில்

## த.தே.கூட்டமைப்புக்கான சவால்கள்



கடந்த மாதம் திருகோணமலையில் நடைபெற்ற மேதின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பேசுகின்ற போது நாங்கள் மீண்டும் ஒருமுறை எங்களின் பலத்தை நிரூபிக்கவேண்டியிருக்கிறது. என்னும் பொருளில் பேசியிருந்தார். சம்பந்தன் பலம் என்று குறிப்பிட்டது எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் சார்பில் அனைத்து ஆசனங்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வசமாக வேண்டும் என்பதைத் தான். *அப்போதுதான் புதிய அரசாங்கத்துடன் நாங்கள் பலமான நிலையில் பேச முடியும்* என்னும் உட்பொருளை அது கொண்டதாகும்.

அவரது எதிர்பார்ப்பு தவறல்ல. விடுதலைப்புலிகளுக்குப் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியாக அடையாளம் காணப்பட்டது. ஆனால், த.தே.கூட்டமைப்பு எப்போதும் தமிழ் மக்களின் பிரதான அரசியல் சக்தியாக வெளித்தெரிந்ததோ அன்றிலிருந்து அதன் உள்முரண்பாடுகளும் வெளித்தெரியத் தொடங்கி விட்டன என்பதும் உண்மை.

கூட்டமைப்பின் பலம் என்பது அதன் அதிகமான பாராளுமன்ற ஆசனங்கள் என்பது மட்டும்தான். எனவே, ஆசனங்கள் குறையுமிடத்து கூட்டமைப்பின் தலைமைத்துவதகுதி நிலையும் சரிவடையும். ஆனால், வடக்கு கிழக்கை பெறுத்தவரையில் ஒப்பீட்டடிப்படையில் கூட்டமைப்பிற்குச் சவால் விடக்கூடியளவிற்கு மக்களை தன்வசப்படுத்தும் பிறிதொரு பலமான எதிரணி இங்கு இல்லை. அந்த வகையில் த.தே. கூட்டமைப்பிற்கு முன்னால் பிரதான சவால் என்று ஒன்றில்லை. ஆனால், வேறுசில சவால்களும் இல்லாமலில்லை.

அண்மைக்காலமாக கூட்டமைப்புத் தொடர்பிலும், தமிழரசுக் கட்சி தொடர்பிலும் மக்கள் மத்தியில் அதிருப்திகள் ஏற்பட்டிருக்கின்றன. இதில் சமூக வலைத்தளங்களின் பங்கு முக்கியமானது. அண்மையில் யாழ்ப்பாணத்தையே ஸ்தம் பிக்க வைத்த வித்தியாவின் கோரக் கொலைச் சம்பவத்தின் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களை முன்னிறுத்தி த.தே.கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சியும் சமூக வலைத்தளங்களில் கடுமையாக தாக்கப்பட்டிருக்கின்றன. இந்த விடயங்களில் எந்தளவு உண்மை இருக்கிறது என்பதற்கு அப்பால், இவ்வாறான சம்பவங்கள் மக்கள் மத்தியில் உற்றுநோக்கப் படுகின்றன என்பதையே கருத்தில் கொள்ளவேண்டும். அந்தவகையில் பார்த்தால், குறிப்பாக ஆட்சி மாற்றத்தின் பின்னரான சூழலில் த.தே.கூட்டமைப் பிற்கு எதிரான பிரச் சாரங்கள் அதிகளவு மத்தியதர வர்க் கத்தினர் மத்தியில் அரசியல் மயப்பட்டிருக்கிறது. இவ்வாறான அனைத்தும் எதிர்வரும் தேர்தலில்ஓரளவு த.தே.கூட்டமைப்பின் வாக்கு வங்கியை பாதிப்பதற்கான ஏதுவாக அமைய முடியும்.

இது தவிர, ஆட்சி மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள இடைவெளியில் தமிழ்மக்களை நெருங்குவதற்கான பிரயத்தனங்களை இருபிரதன கட்சிகளும் மேற்கொண்டுவருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியினர் மாவட்ட தலைவர்களை கிராமப் புறங்களில் உள்ள தமிழ் மக்களை அணுகி அவர்கள் மத்தியில் தங்களிற்கான செல்வாக்கை அதிகப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முனனெடுத்து வருகின்றனர். அதுபோன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ்மக்கள் மத்தியில் தங்களின் ஆதரவை பெருக்கிக் கொள்வதற்காக ஏற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது. இதன் ஓர் அங்கமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஆலோசனையிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஈடுபட்டுவருவதாகவும் அறிய முடிகிறது. ஆனால், இங்குள்ள சிக்கலான விடயம், இம்முறை அரசாங்கத்தை இலக்கு வைத்து கூட்டமைப்பினரால் எதிர்ப்பிரச்சாரங்களை முன்னெடுக்க முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தல், இரு பிரதான கட்சிகளுக்கு- குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஓரளவு தமிழ் மக்களின் வாக்குகளை பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.

மேற்குறிப்பிட்ட சவால்கள் வடக்கு கிழக்குக்கு பொதுவானது. ஆனால், வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகித்துவரும் கட்சிகள் மத்தியிலும் போட்டித்தன்மை உருவாகக் கூடிய அளவிற்கு நிலைமைகள் காணப் படுகின்றன. ஏனெனில் வடக்கு மாகாணத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஏழில்தான் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்துவரும் அனைவரும் வெற்றிபெற வேண்டும். அது நிச்சயம் ஒரு சிலர் தோற்றேயாகவேண்டியளவிற்கு வடக்கின் நிலைமைகள் காணப் படுகின்றன.

வடக்கைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடுகளை தமிழ்த்தேசிய நிலையில் எதிர்நோக்கும் ஆற்றலுள்ள ஒரே கட்சி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ்தேசிய மக்கள் முன்னணி மட்டும்தான். அந்த வகையில் கூட்டமைப்பிற்கான எதிரணி என்றால், அதுமட்டும்தான் என்னும் நிலையை உருவாக்குவதில் அவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள். அண்மைக்காலமாக வடக்கிற்கு வெளியிலும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சில செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. வடக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் அணி த.தே.கூட்டமைப்பிற்கு சவாலாக அமையமுடியும். கூட்டமைப்பில் அதிருப்தியடைந்த யாழ். மத்தியதர வர்க்கத்தினர் முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவு கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தான் என்பதில் மாறுபட ஏதுமில்லை. ஆயினும் நிமலைமைகளை அவர் எவ்வாறு கையாள்கிறார் என்பதைப் பொறுத்து அவ்வணி ஒரு ஆசனத்தைப் பெறுவதற்கு வெற்றி வாய்ப்புகள் உண்டு.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் ஊடாக களமிறங்கும் வேட்பாளர்களும் ஓரளவு வாக்குகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கலாம். இப்போதுள்ள சூழ்நிலை தொடருமானால், கூட்டமைப்பிலுள்ள ஒருவரை விடவும் ஐக்கிய தேசியக் கட்சியில் அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்ற தமிழர் ஒருவரிடமிருந்து அதிக நன்மையைப் பெறமுடியும் என்று சிந்திக்கும் மக்கள் ஆளும்கட்சியின் பலமான வேட்பாளர்களையும் ஆதரிக்கவாய்ப்பு உண்டு.

இவ்வாறான ஒரு அரசியல் சூழலில் தான் தற்போது உறுப்பினராக இருக்கின்ற பிரதானமானவர்கள் மீண்டும் வெற்றிபெறவேண்டும். அதேவேளை இதுவரை தேசியப்பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினராக இருந்துவந்த எம்.ஏ. சுமந்திரன் இம்முறை வடக்கில் போட்டியிடவுள்ளதாக தகவலுண்டு. புளொட் தலைவர் த. சித்தார்த்தன் புளொட் இயக்கத்தின் சார்பில் போட்டியிடவுள்ளார். அவர் கடந்த மாகாண சபைத் தேர்தலில் மூன்றாவது நிலையில் விருப்பு வாக்குகளைப் பெற்றவர். அவரும் வெற்றிபெறவே முயற்சிப்பார். இதுபோன்ற நிலைமைகள் வடக்கின் தேர்தல்களம் கூட்டமைப்பிற்குள்ளேயே ஒரு போட்டியை நிச்சயம் உருவாக்கும்.

வடக்கின்நிலைமை இவ்வாறென்றால் கிழக்கின் நிலைமையோ வேறுவிதமாக இருக்கிறது. ஒப்பீட்டளவில் கூட்டமைப்பிற்கு பிரதான சவால் என்று எதுவுமில்லை. ஆனால், கூட்டமைப்பிற்கு எவ்வாறான வேட்பாளர்களைத் தெரிவு செய்வது என்பதைப் பொறுத்தே நிலைமைகளில் ஏற்ற இறக்கம் ஏற்படும். சாதாரணமாக ஆசனங்களை பெற்றுக்கொளுதல் என்னும் பொருளில் இந்த விடயங்களை இங்கு குறிப்பிடவில்லை. மாறாக, நாங்கள் மீண்டும் ஒருமுறை எங்களின் பலத்தை நிரூபிக்க வேண்டும் என்னும் சம்பந்தரது அழைப்பைக்கருத்திலகொண்டே குறிப்பிடமுடியும். பலத்தை நிரூபிக்க வேண்டுமாயின் இதுவரை நிலவிவந்த முரண்பாடுகள், எதிர்வரும் தேர்தலிலும் வெளிப்படாத வகையில் அனைவரும் ஒன்றுபட்டு, ஓர் இலக்கில் பணியாற்றவேண்டும் முக்கியமாக ஆசனஒதுக்கீடுகளில் ஏனைய கட்சிகளை திட்டமிட்டு புறக்கணிக்கும் வகையில் செய்படும் தமிழரசுக்கட்சியின் வழமையான அணுகுமுறையை அக்கட்சி முற்றிலும் கைவிடவேண்டும்.

கிழக்கைப் பொறுத்வரையிலும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனநாயக அணுகுமுறைகளைக் கையாண்டு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து அணி யினரும் ஒரு மாவட்டத்துக் ஒரு வேட் பாளரையாவது நிறுத்துவதற்கு இடமளித்து செயற்படவேண்டும். மேலும் அர சியல் களத்தில் தொடர்ந்து நின்று செயற்படக்கூடியவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். கூட்டமைப்பின் மீதான அதிருப்திகளுக்கு விளக்கமளிக்கக் கூடியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இதன்போது அனைத்துக் கட்சியினரதும் செல்வாக்கும் ஓரணிப்படும்போது அதிகளவான மக்களை ஈர்க்கமுடியும். அதற்கான திட்டங்களை வகுத்து செயலாற்ற முடியும். அப்படியல்லாமல் வழமை போல் ஆசன ஒதுக்கீட்டில் முரண்பட்டு, அந்த முரண்பாடுகள் ஊடகங்களில் செய்தியாகி-பின்னர் ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் தேர்தல் வேலைகளில் ஆர்வம் காட்டாது ஒதுங்கும் நிலைமை உருவாகினால், த.தே. கூட்டமைப்பின் தலைர் திரு சம்பந்தன் எதிர்பார்க்கும் பலத்தை நிரூபிப்பது வெறுங்கனவாகவே போகலாம். இங்கு பலம் என்பது வெறும் ஆசனங்கள் மட்டுமல்ல, அவ்வாசனங்கள் எத்தனையாயிரம் வாக்குகளால் தீர்மானிக்கப்படுகிறது என்பதே முக்கியமானது.

-யதீந்திரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப் பிள்ளையார் கோவில் திருவிழா வாத்தியார் வைத்திலிங்கத்தின் சொற்பொழிவு. தமிழர் பண்பாடு என்ற பொருளில் அவரின் சொற்பொழிவு அமைந்திருந்தது.

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்று கலித்தொகை பேசுகிறது. தமிழர்களின் பண்பாடு மிகவும் உயர்வானது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை இளம் பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பைக் கொடுத்தது. பெரியப்பா, சித்தப்பா, மாமா என்ற உறவு முறைகள் வலுவாக இருந்தன.

ஆனால் இன்று கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம். இன்று தனித்தனிக் குடும்பங்கள் அடுத்த வீட்டை அறியாத வாழ்க்கை. அயல் பகை என்றால் அது அட்டமத்துச்சனி என்பார் ஔவையார். ஆ... என்ற குரலுக்கு ஓடிவருவது அயல். ஆனால் இன்று அயல்வீட்டில் யார் இருப்பதென்பதே தெரியாமல் உள்ளது.

இன்று எங்கள் மண்ணில் நடக்கின்ற அத்தனை சமூக விரோதச் செயல்களினதும் பின்னணி தனித்தனி வாழ்க்கையும் சுயநலமுமேயாகும்.

நிலைமை இப்படியே நகருமாயின் எங்கள் எதிர்காலம் மிகமோசமாகிவிடும்.

இப்படி வாத்தியார் வைத்திலிங்கம் தனது சொற்பொழிவில் கூற, கூடியிருந்தவர்கள் சம்மதம் தெரிவிப்பது போல தலையை அசைத்தனர்.

வாத்தியாரின் சொற்பொழிவு முடிய மாலைப் பொழுதாயிற்று. ஆலடி மாநாடு கூடுகின்ற நேரம் பண்டிதர், விதானையார், கங்காணி, மூப்பர் என ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் வந்தாயிற்று. அதோ வாத்தியாரும் வருகிறார். மாநாட்டை ஆரம்பிக்கலாம் என்று கங்காணி கூற மாநாடு ஆரம்பமாயிற்று.

**வாத்தியார்:** யுத்தத்திற்குப் பின்பான எங்கட இளம் பிள்ளையளின்ர வாழ்க்கை தொடர்பில நாங்கள் அதிக கவனம் செலுத்தவேணும். இல்லையெண்டால், எங்கட பிள்ளையள் தொடர்பில நாங்கள் அதிகமாகக் கவலைப்பட வேண்டியிருக்கும்.

**மூப்பர்:** அது சரி வாத்தியார் எங்கட பிள்ளையள் எப்படி அதிரடியாக பிறழ்வான பாதையை நோக்கி...

**விதானையார்:** யுத்தம் நடந்த நாடுகளில் இப்படியான சதித்திட்டங்கள் நடப்பது வழக்கம். விடுதலை கேட்ட இனங்களைச் சின்னாபின்னமாக்கிவிட்டால் எல்லாம் சரியாகிப் போகும் என்ற நினைப்பில நடக்கிற நாடகம். என்ன செய்யிறது எங்களிட்ட ஆன அமைப்புகளும் அரசியல் தலைமைகளும் இல்லாததால எங்கட இளைஞர்கள் நெறிகெட்டுப் போற நிலைமைக்கு ஆளாகியிருக்கினம்.



## வேலையில்லாப் பிரச்சினைக்கு நாங்கள் எடுத்த நடவடிக்கை என்ன?

**கங்காணி:** வாத்தியார் தொலைபேசி கதைக்கிறதால இந்த நாட்டில அதிக கட்டணம் செலுத்துகிற மாகாணம் வடக்கு என்று அடையாளப்படுத்தியிருக்கினம். அதுமட்டுமல்ல மதுபானம், சோடா போன்றவற்றிலும் நாங்கள்தான் முதலிடமாம்.

**மூப்பர்:** அப்ப பார்த்தியளே எங்கட நிலைமை எப்படி இருக்கென்று.

**விதானையார்:** அது சரி கங்காணியார் எங்கட பெடியளைப் பார்த்தா மூலைக்கு மூலை குந்திநின்று கொண்டு ரெலிபோன் கதைக்கினம். ஆரோட கதைக்கினம், என்ன கதைக்கினம் என்பதை அறிய வேணும் போல ஆசை.

**பண்டிதர்:** விதானையார் வில்லங்கத்தை விலைக்கு வேண்டுறதா முடிவெடுத்திட்டார் போல.

**மூப்பர்:** எங்கட வட பகுதியிலதான் அதிக மது விற்பனை, அதிக ரெலிபோன் கதை என்றால் அதற்கென்ன காரணம் என்று முதலில அறியவேணும்.

**பண்டிதர்:** எல்லாம் வேலையில்லாப் பிரச்சினைதான். எத்தனையோ இளைஞர்கள் படித்துப்போட்டு வேலையில்லாமல் தெருவழியில நிற்கினம். இன்னும் சிலரை சில நிறுவனங்கள் முகாமைத்துவப் பயிலுநர் என்ற பெயரில் வாட்டி வதைக்கினம். இங்க தொழிற்சாலைகள் இருந்தால்தானே எங்கட பிள்ளையளுக்கு வேலை வாய்ப்பை வழங்குறதுக்கு.

**விதானையார்:** பண்டிதர் ஐயா இருளைக் குறை சொல்லாமல் வெளிச்சத்தை ஏற்றவேணும்.நாங்கள் எங்கட மண்ணில் பொருத்தமான தொழிற்சாலைகளை நிறுவவேணும். ஒரு காலத்தில வடக்கு மாகாணத்தின்ர பொருளாதாரம் விவசாயத்திலதான் தங்கியிருந்தது.

வடபகுதி கல்வியில உயர்ந்திருந்தாலும் ஒவ்வொரு கல்வியியலாளர்களும் மாலைப் பொழுதில விவசாய வேலையில ஈடுபட்டினம். ஏன் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் அ.துரைராஜா மிகச்சிறந்த விவசாயி. பளையில பெருந்தோட்டம். அவற்ர ஊரில வெங்காயச் செய்கை. இப்பயாரும் விவசாயம் செய்யினமே. அந்தக் காலத்தில அரச உத்தியோகம். மாலை வேளையில தோளில மண்வெட்டி; வயற்செய்கை. உணவுப் பொருட்களை நாங்களே விளைவிச்சம். வீட்டில நெல்லு மூடை அடுக்கியிருக்கும்.

கடின உழைப்பால உடல் ஆரோக்கியம் இருந்தது. இப்ப... எல்லாவற்றையும் தொலைச்சுப்போட்டு ஹலோ ஹலோ என்று ரெலிபோனில கதைக்கிறம்.

**கங்காணி:** ஹலோ என்பது ரெலிபோனைக் கண்டுபிடிச்ச கிரகம் பெல்லின்ர மனைவியின் பெயராம். கிரகம்பெல் ரெலிபோனைக் கண்டுபிடித்ததும் முதலில தன்ர மனைவிக்குத்தான் ரெலிபோன் எடுத்தவர். தன்ர மனைவியை ஹலோ என்று அந்தாள் கூப்பிட்டிருக்கு இப்ப எல்லாரும் ஹலோ என்கிறம்.

(கங்காணியார் இப்படிச் சொல்ல மாநாட்டில் இருந்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர்)

**மூப்பர்:** கங்காணியாருக்கு எப்பவும் இப்படியான பகிடியள் கிடைச்சிடும். அதுசரி பண்டிதர் வேலையில்லாமல் இருக்கிற எங்கட இளம் சமூகத்திற்கு ஏதேனும் வேலைவாய்ப்பை வழங்கிற முயற்சியள் ஏதும் நடக்குதோ!

**பண்டிதர்:** எங்க நடக்குது? வடக்கு மாகாண அரசு கிடைச்சால் எல்லாம் செய்வம் என்று சொல்லிச்சினம். சனம் தங்கட கடமையை ஒழுங்காச் செய்தது. ஆனால் அவையள் சொன்னதை மறந்து போயிற்றினம்.

**வாத்தியார்:** எதுவாயிருந்தாலும் நாங்கள் எங்கட பிள்ளையள் தொழில் முயற்சியில ஈடுபட ஏதாவது செய்தாகவேணும். எங்கட புலம்பெயர் தமிழர்களிடம் உதவியப் பெற்றாவது இத நாங்கள் செய்யாவிட்டால் மிகப்பெரிய கவலைக்கு இடமிருக்கு.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறதில நூறுவீத உண்மை இருக்கு. வீதியில நிற்கிற எங்கட இளைஞர்களைக் காணும்போது வயிறு எரியிது. உழைக்கக் கூடிய மனிதவளம் வீதியில நிண்டு வீணாப்போகுது என்ற கவலை.

புத்திஜீவிகளாவது எங்கட இளம் பிள்ளையளின்ர வேலைவாய்ப்புத் தொடர்பில பொருத்தமான திட்டங்களைத் தீட்டவேணும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, படையினர் மூலம் யாழ்ப்பாணத்தில போதைவஸ்து பாவனைய பரப்பினார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

எங்கட இளம் பிள்ளையள பழுதாக்க என்னமாதிரியான சதித் திட்டங்கள் செய்திருக்கினம் எண்டத்த பார்த்தியளே.

**பண்டிதர்:** கரும்பு கட்டோட இருந்தால் எறும்பு மட்டோட இருக்கும் என்றொரு பழமொழி தமிழில இருக்குது.

எங்கட பிள்ளையள் சரியா இருந்தால் போதைவஸ்து விற்பனை எதுவும் எங்கட மண்ணில நடக்க முடியாது. எனவே எங்கட பிள்ளையள நாங்கள் சரியான முறையில வளர்த்தெடுத்தால் எந்தவிதமான தீமைகளை எங்களிட்ட பரப்பினாலும் அது வேலை செய்யாது.

(இப்படிப் பண்டிதர் சொல்ல பிள்ளையார் கோயில் மணியும் அடிக்க மாநாட்டில இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்)

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் துணைகளை வாட்டி எடுக்கும் விசாரணை


குருஷேத்திரம்

பாராளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் தடல் புடலாக நடக்கின்றன. மிக விரைவில் தேர்தல் என்று அறிவிக்கப்பட்டாலும் பாராளுமன்றத்தைக் கலைப்பது இப்போதைக்கு அவ்வளவு நல்லதல்ல என்பது அரசியல் அவதானிப்பின் முடிவு. தற்போதிருக்கின்ற அரசியல் நிலவரப்படி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவது ஜனாதிபதி மைத்திரிக்கு அவ்வளவு நல்லதல்ல என்றே கூறவேண்டும்.

பொதுத்தேர்தலை நடத்தும்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் குதிக்கக்கூடிய சாத்தியங்கள் நிறையவே உண்டு.

குறைந்தது பாராளுமன்றத்தில் எம்பியாக இருந்தால் ஜனாதிபதி மைத்திரிக்கு தலையிடி கொடுப்பது சுலபமாகும் என்பதுடன் தனது சகாக்களுடன் சேர்ந்து பாராளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதும் மகிந்த ராஜபக்ஷவின் திட்டம்.

எனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாராளுமன்ற உறுப்பினராக வரவிடுவது கூட ஆபத்தானதென்பது உணரப்பட வேண்டும்.

கின்ற பலன் உண்டென்று பிரபலமான சோதிடர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்தச் சோதிடர் பெரும்பாலும் குணதாச மாதிரி இல்லை என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் அரசியல் அவதானிப்புகளும் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக வரக்கூடிய வாய்ப்பு உண்டென்பதை உறுதி செய்கிறது.

எனவே பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக சில கிரகங்களைக் கட்டிப்போடுவது நல்லாட்சிக்கு அவசியமானதாகும். இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்தாகவேண்டும். அதே நேரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதன் பொருட்டு 112 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

ஆக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்காலம் ஆபத்தானது என்பதுடன் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்தினால் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகும் வாய்ப்பும் மிகக் குறைவாகவே இருக்கும்.

ஆக, இப்போது பாராளுமன்றத்தைக் கலைப்பது அவ்வளவு நல்லதல்ல என்பது உறுதியாகின்றது. அதே சமயம் பாராளுமன்றத்தைக்

ஆதரிக்காமை போன்ற பல விடயங்கள் நடந்தேறும்.

எனவே பாராளுமன்றத்தைக் கலைக்காமல் எதுவும் செய்யமுடியாது. அப்படியானால் பாராளுமன்ற

வைத் தொடர்ந்தும் ஆதரிப்பர்.

எனவே தேர்தலில் குதிப்பதற்கு மகிந்த ஆவலோடு காத்திருப்பார் என்பது சர்வ நிச்சயம். அதேசமயம் மகிந்த ராஜபக்ஷவை மடக்குவதற்கு

டதால இப்படியொரு அவலம் சிராந்திக்கு என்று சிராந்தி நினைக்காவிட்டாலும் சிராந்தியின் நெருங்கிய உறவுகள் நினைக்கவே செய்வர்.

இதுபோலவே, மகா தடிப்புக் காட்டிவந்த விமல் வீரவன்சவின் துணைவியார் மீதும் நிதி மோசடி விசாரணை நடக்கிறது. ஆக வாழ்க்கைத் துணைவியர் மீது நடத்தப்படும் விசாரணைகள் மகிந்தவுக்கும் விமல் வீரவன்சவுக்கும் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தினாலும் எதுவும்



த்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தவேண்டுமென்பதில் ஜனாதிபதி மைத்திரி தரப்பும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தரப்பும் உறுதியாக இருப்பது தெளிவாகிறது.

இங்குதான் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குள் நுழைவதைத் தடுத்தாக வேண்டும். மகிந்த ராஜபக்ஷவை தேர்தல் பக்கம் திரும்பிப் பார்க்காமல் செய்ய

அவர் மீதான குற்றச் சாட்டுக்களை அதிலும் குறிப்பாக சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை மீளவும் கையில் எடுப்பதுதான் மைத்திரி அரசுக்கு இருக்கக்கூடிய ஒரே வழியாக இருந்தாலும் அதனைச் செய்வதற்கு தென்பகுதியில் எந்த அரசியல்வாதியும் இல்லை என்றே கூற வேண்டும்.

எனினும் முன்னாள் ஜனா

செய்ய முடியாது.

ஊழல், நிதி மோசடி என்ற குற்றங்கள் முன்வைக்கப்பட்டால் அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் தாங்கள் நிரபராதிகள் என்பதை நிரூபித்தாக வேண்டும். இதைவிடுத்து குற்றப் புலனாய்வு செய்யும் விசாரணைகளை குற்றஞ்சாட்டுவது அவ்வளவு நல்லதல்ல.

ஊழல் குற்றச்சாட்டு

## பாராளுமன்றத்தைக் கலைப்பது தவிர்க்கமுடியாத விடயம்

முடியும். ஆனாலும் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தவர் என்பதால் தென்பகுதி



ஆக மகிந்த ராஜபக்ஷவை பொதுத்தேர்தலில் போட்டியிட முடியாதவாறு செய்துவிட்டே தேர்தல் பற்றிச் சிந்திப்பது புத்திசாலித்தனம். சோதிடத்தில் கோசார பலனின்படி மகிந்தவுக்கு பாராளுமன்றம் செல்

கலைக்காமல் விட்டால் அரசுக்கெதிராக அரசுக்குள் இருப்பவர்கள் குழப்பம் செய்து கொண்டே இருப்பர். பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருதல், 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை

யில் மகிந்தவுக்கு மக்கள் ஆதரவு உண்டென்பதை எவரும் மறுத்துவிடமுடியாது.

மகிந்த மீது ஊழல் குற்றச்சாட்டுக்களை முன் வைத்து அவற்றை நிரூபித் [illegible] மகிந்த

திபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ஷ மற்றும் விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச ஆகியோர் மீது நிதி மோசடிக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருப்பது ஒரு புதிய வியூகம் எனலாம்.

இலங்கையின் முதற் பெண்மணி என்ற புகழோடும் பெயரோடும் இருந்த சிராந்தி ராஜபக்ஷ இப்போது குற்றப்புலனாய்வுக்கு முன்னிருந்து அவர்களின் கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டியவராக இருக்கின்றார்.

மகிந்த ஜனாதிபதியாக இருந்த போது அவர் விஜயம் செய்த உலக நாடுகள் முழுவதற்கும் சென்று வந்த சிராந்தி மீது நிதிமோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பது மகிந்தவுக்குக் கடும் கோபத்தைக் கொடுக்கும். என்ன செய்வது இந்த மனுசனுக்கு வாழ்க்கைப்பட்

என்ற பெயரில் மகிந்த, விமல்வீரவன்ச ஆகியோரின் வாழ்க்கைத் துணைகள் வாட்டி எடுக்கப்படுகின்றனர். இந்நிலையில் சிராந்தி மீது எந்த விசாரணையும் வேண்டாம். நான் இனி அரசியலில் இறங்கமாட்டேன் என்ற உத்தரவாதத்தை மகிந்த ராஜபக்ஷ கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எதுவாயினும் வாழ்க்கைத் துணைகள் வழக்கு விசாரணை நீதிமன்றம் என அலைவதைப் பார்க்கும் போது நாசமாய்ப்போன ஜனாதிபதிப் பதவியால் வந்தவினை என்று மகிந்த ராஜபக்ஷ நினைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆம் எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும் என்ற கீதையின் சாராம்சத்தை நாங்கள் நினைவுபடுத்திக்கொள்வோம் அவ்வளவுதான்.

விதுரன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐயா: இது உன்னத வார்த்தை பொய்யாக்கி மகிழாதீர் அதை!



இற்றைக்கு சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு எமது தாய் தந்தையரை ஆச்சி, அப்பு என்றே அழைத்திருந்தோம். ஆச்சியென்றால் அல்லது அப்பு என்றால் அவர்கள் வயது முதிர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள் என்றில்லை. தாயும் தந்தையும் முறையே ஆச்சி, அப்பு, என அழைக்கப்பட்டனர்.

கால ஓட்டத்தில் இதே ஆச்சி, அப்பு என்ற வார்த்தைகள், அம்மா, ஐயா என மாற்றம் கண்டன. அதாவது அம்மா! ஐயா! என்று நாம் அழைத்தோம். அதிலும் பின்னர் *ஐயா* என்ற வார்த்தை அப்பா என்று மாறியிருந்தது. அம்மா, ஐயா, என்ற இரண்டு வார்த்தைகளும் மிக மிக உயர்வான வார்த்தைகளாகத்தான் கருத்தில் இருந்துவந்தன.

அக்காலத்தில், எமது குருமார்களை விசேடமாகக் கூறப்போனால், பிராமணக் குருக்களை மிகுந்த பணிவோடும் பக்தியோடும் ஐயா! என அழைத்தோம். அவர்களை முகத்துக்கு முன்னால் ஐயா! என்றும் முதுகுக்குப் பின்னால் ஐயர் என்றும் கூறுகின்ற வழக்கும் இன்று உருவாகிவிட்டது.

ஆனால், இந்த ஐயா என்ற வார்த்தைப் பிரயோகம் இருந்த காலத்தில் உயர்குலத்தவர் என்று தம்மை அடையாளப்படுத்துவோரை ஏனையவர்கள் ஐயா! என்று அழைக்க வேண்டும் என்ற கட்டாயமும் இருந்து வந்தது என்பதை மறந்துவிட முடியாது. இதுபோன்று அரசர்களை, செல்வந்தர்களை, அதிகாரிகளையெல்லாம் இந்த *ஐயா* என்னும் வார்த்தை கச்சிதமாக அலங்கரித்திருந்தது. அதற்கடுத்தாற்போல் கல்விமான்கள், மருத்துவர்கள், சட்டவாளர்கள், ஆசிரியர்கள் என்றெல்லாம் இந்தக் கௌரவ வார்த்தையால் மேன்மைப்படுத்தப்பட்டார்கள். இதையே ஆங்கிலத்தில் சேர் (Sir) என்றும் பயன்படுத்தினார்கள்.

இது இவ்வாறிருக்க இந்த ஐயா என்னும் வார்த்தையில் ஒரு வேடிக்யையும் இருப்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும். எமது சகோதர மொழியான சிங்களத்தில், எங்களுடைய ஐயா என்ற வார்த்தை அவர்களுக்கு அண்ணா என்று கருத்துப் பெறுகிறது. அது ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால், ஐயா என்னும் வார்த்தை கௌரவமானது என்று எண்ணி சிங்கள இனத்தவரான ஒரு நீதிபதியையோ, மருத்துவரையோ அல்லது ஒரு அரசியல் பிரமுகரையோ நாம் ஐயா என்று அழைத்தோமேயானால், அது கிஞ்சித்தும் பொருத்தமாயிருக்காது. அதுமட்டுமல்ல இந்த வார்த்தைப் பயன்பாட்டினால் இருதரப்பினரும் வேண்டாத சங்கடங்களுக்குள்ளாக வேண்டி வரலாம்.

தமிழகத்துத் தமிழர்களும் இந்த ஐயா- வார்த்தையைத் தாராளமாகப் பயன்படுத்துவதை நாம் அறிந்து வைத்திருக்கிறோம். சமூகத்தில் உயர் அந்தஸ்து பெற்றவர்களை, அதிகாரிகளை, அரசியல்வாதிகளையெல்லாம் ஐயா எனச் சாதாரணமாக அழைப்பர். இதே வார்த்தை இன்னும் சில தப்பினரால், சில சூழ்நிலைகளில் மிகவும் கேவலாமான ஒரு வார்த்தையாகவும் கருதப்பட்டுவருகிறது. தமிழகத்தில் ஒரு முச்சக்கர வண்டிச்சாரதியை எடுத்துக்கொண்டால், அவனுக்கும் ஒரு பயணிக்கும் இடையில் கூலி சம்பந்தமாக ஏதாவது ஒரு தகராறு வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அவனிடமிருந்து வரும் பேச்சுக்களில், இந்த ஐயா என்னும் வார்த்தையே அதிக பங்கை வகிக்கும்.

அதேபோல காவல்துறையினனும் தனது உரையாடலில் ஐயா! என்று அடிக்கடி விழித்துப் பேசுவதை நாம் அறிவோம். இந்த ஐயாவுக்கும் முன்னைய ஐயாவுக்கும் ஏராளான வேறுபாடிருப்பதை யாரும் அறிந்துகொள்ளலாம். ஏய்யா! வாய்யா, போய்யா போன்றவைகளே அவை.

இப்போதைய காலகட்டத்திலும் எமது இளைஞர்கள், ஐயா என்னும் வார்தையை தாராளமாகப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், அதைப் பயன்படுத்துபவர்கள் யார்? யாருக்காகப் பயன்படுத்தப்படுத்துகிறார்கள்? எச்சூழ்நிலையில் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் இங்கு முக்கியமான விடயம்.

உதாரணத்துக்கு சமீபத்தில் நடந்த உண்மைச் சம்பவமொன்று. அதுவே இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டியது என்பதுமிகவும் கவனிக்கத்தக்கதொன்று.

சுமார் எழுபது வயதுக்கு மேல் மதிக்கலாம். அந்த மனிதர் அழுக்கடைந்த சாரம் பெனியன் உடுத்தியிருந்தார். பாவம் அவர் தன்பாட்டிற்கு நடந்துகொண்டிருந்தார். நான்கைந்து வாலிபர்கள் அவரைக் கண்டுவிட்டனர். அவரைச் சீண்டித் துன்புறுத்த வேண்டும் என்று நினைத்தவர்கள், அவரை "ஐயா!" என அன்புடன் அழைத்தனர். எதுவித பிரக்ஞையும் இன்றி சிவ்வென்று போய்க்கொண்டிருந்த அந்த மனிதரை *ஐயா!* என்ற அந்த வார்த்தை தடுத்து நிறுத்தியது. இறந்து போயிருந்த தனது மகன் அழைத்தது போலிருந்ததாகப் பின்பு கூறினார் அந்த முதியவர்.

"ஐயாவுக்கு எத்தனை வயது!" ஒருவன் கேட்டான். தாமத மின்றிப் பதிலளித்தார்

"எழுபத்தைந்து" என்று.

"எத்தனை பிள் ளைகள்!"

இது மற் றவனின் கேள்விக் கணை.

"எட்டுப்பிள்ளைகள்"

"வயோதிபர் விடேல்லை பார்தியாடா ..."

"சா! அந்த நாளையில் ஐயா பெரிய மன்னன்தான்..." இது இன்னொருவனின் கூற்று. இந்தச் சமயத்தில் இன்னொருவனின் கைகள் முதியர் உடுத்தியிருந்த உடையோடு விளையாடியது. அந்த மனிதர் உடுத்தியிருந்த உடுப்பு தரையில் விழுந்தது.





அந்த நான்கு இளைஞர்களும் சேர்ந்து, வயோதிபத் தந்தையை அழைத்து, வலிந்து நின்று வேண்டாத அந்தக் கேவலமான, மனித குலத்துக்கு ஏற்பில்லாத காரியங்களைச் செய்தார்கள். மக்களல்ல, அத்தனை பேரும் பேரப்பிள்ளைகளுக்குச் சமமானவர்கள். ஐயா! என அழைத்த அந்தக் குரலில் மயங்கிப்போய்த்தான், அந்த முதியவர், அவர் களிடம் போய் அவமானப் பட்டுக்கொண்டார்.



ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். அவர்களை தனது பெற்றபிள்ளைகள் போன்று எண்ணிய அந்த வயோதி பருக்கு மனதில் என்ன எண்ணம் தோன்றியிருக்கும்.! எவ்வளவு வேதனையடைந் திருப்பார். அல்லது பெற்ற பிள்ளைகள் அருகில் இருந்திருந்தால் இத்தகைய மோசமான கேலிக்கும் கூத்துக்கு விடுவார்களா?

தற்கால வாலிபர்களின் *ஐயா* என்ற வார்த்தைக்கான காத்திரம்தான் என்ன! கருத்துக்கள்தான் என்ன்!

இன்னும் பார்ப்போமானால், இந்த *ஐயா!* என்ற வார்த்தைப் பிரயோகம் கிட்டத்தட்ட ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீண்டும் தொடக்கி வைக்கப்பட்ட ஒரு கண்ணியமான வார்த்தை. அதனைத் தொடர்ந்து ஏனைய இயக்கங்களும் *ஐயா* பாஷை போட்டாலும் முன்னையவர்களின் நெகிழ்ச்சி யொன்றும் அவைகளில் இருக்கவில்லை. காலப் போக்கில் ஒருவரையொருவர் பார்த்து, வயது வேறுபாடின்றி *ஐயா*வில் தொடர்கின்றது இந்தக் கலாச்சாரம்.

யாரும் யாரையும் ஐயாவாக்கி அழைக்கலாம். ஆனால், *ஐயா* எனும் வார்த்தை பொய்யா என்று எண்ணும்படியாக நடக்காமலிருந்தாற்சரி.

**மிருசுவில் தமிழ்தாசன், மீசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படடல் வேண்டும்

இலங்கையில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்ற வாக்குறுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வழங்கியுள்ளார். பயங்கரவாதிகள் என்று சிங்கள தேசத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட தமிழீழ. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனித்ததையடுத்து எடுக்கப்பட்ட ஆறாவது ஆண்டு நினைவு தினத்தின்போது ஜனாதிபதி இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார். நாட்டின் தலைவர் என்ற நிலையில் அவர் அந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார். அது அவருடைய கடமையும்கூட.



மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகயிருந்த காலகட்டத்திலும் பலமுறை இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார். இந்த வாக்குறுதி போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் சிங்களத்தலைவர்கள் அடிக்கடி வழங்கும் பிரதானமான வாக்குறுதிகளில் ஒன்று. சிங்கள மக்களை நிலை குலையவிடாது அவர்களின் ஆதரவைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் பொருட்டு வழங்கும் வாக்குறுதியாக இதைக் கருத முடியும்.

மகிந்த ராஜபக்ஷ போர் வெற்றி விழா கொண்டாட்டத்தின் போது இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார். ஆனால் ஜனாதிபதி மைத்திரியோ போர் வெற்றி விழா என்பது இந்த நாட்டில் வாழும் ஒரு இனத்தவரை புண்படுத்தும் வகையில் அது அமைவதால் அதைத்தவிர்த்து போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நாளாக அனுஷ்டித்திருந்தார்.

சிறுபான்மையினர் என்று சிங்களவர்களால் அடையாளப்படுத்தப்படும் தமிழர்களை அரவணைத்துச் செலலும் மனோ நிலையில் தான் உள்ளார் என்பதையும் தனது தலைமையின் கீழ் நடக்கும் அரசில் இனப் பாகுபாடுகளையப்படவேண்டும் என்ற உயரிய நோக்கத்தினாலும் அமைச்சர் ராஜித சேனாரட்ன போன்றவர்களின் ஆலோசனைக்கு அமைவாகவும் ஜனாதிபதி அவ்வாறு செயற்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

ஜனாதிபதியின் நல்லெண்ண நடவடிக்கைகள் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கு வழிவகுக்கலாம். அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் அளித்த வாக்கினால் மகிந்தவை வென்றதோடு மட்டுமல்லாது மரணத்தையும் வென்று விட்டார். மகிந்த தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் தான் உயிருடன் இருந்திருக்க முடியாது என்பதை ஜனாதிபதியே பலமுறை கூறியுள்ளார் என்பதனால் மரணத்தை வென்றுள்ளார் எனக்கூறலாம்.

யுத்தம் நாட்டில் பெரும் நாசங்களை விளைவித்திருந்த அதேவேளை பல இலட்சம் உயிர்களையும் காவுகொண்டிருந்தது. இதில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற வேறுபாடு காணமுடியாது. மூவினத்தவர்களும் உயிரிழந்தனர். அது யுத்தத்திற்கு கிடைத்த வெற்றியென்றே கூறவேண்டும்.

போரில் மூவினத்தவர்களும் மரணங்களை எதிர்கொண்டனர் என்பது உண்மையென்றாலும் தமிழினம் பாரிய அழிவை எதிர்கொண்டிருந்தது. அதற்கு காரணமானவர்களாக அரச படையினர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டு போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் செயற்கை மரணங்களை நாட்டிலிருந்து ஒழிக்க மைத்திரி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மகிந்தவிடமிருந்து மைத்திரி தப்பித்துக் கொண்டதைப் போன்று செயற்கை மரணங்களிலிருந்து மக்களை காப்பாற்ற வேண்டும். செயற்கை மரணங்களை அவர் வெற்றிகொள்ளவேண்டும். நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ வழி செய்ய வேண்டும்.

பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அரசு அறிவித்து ஆறு ஆண்டுகள் கடந்த நிலையிலும் கூட துப்பாக்கிச் சத்தங்களும் துணை ஆயுதக்குழுக்களின் அராஜகங்களும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. ஆட்கடத்தல், கப்பம் கோரல், பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகச் சம்பங்கள் என்று பல குற்றச் செயல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.


இதைவிட போதைப்பொருள் பாவனை அரசு கூறும் பயங்கரவாதத்தைவிட பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதேவேளை வடபகுதியில் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இப்பிரச்சினை பெரும் பிரச்சினையாக தலைவிரித்தாடுவதால் அரசின் மீதும் மக்கள் சந்தேகம் கொள்ள வேண்டிய நிலையேற்பட்டுள்ளதை தவிர்க்க முடியாதுள்ளது.

போரின்பின் இளம்தலைமுறையினர போதைக்கு அடிமையாகி ஒவ்வொரு நாளும் மரணத்தை எதிர்கொண்ட போது மாடமாளிகைகளை மக்களின் காணியில் அமைத்து மன்னர் ஆட்சி நடத்திய மகிந்த மீது மக்கள் சந்தேகம் கொண்டதை மைத்திரி அரசு நினைவில் நிறுத்தி அந்தச் சந்தேகத்தை தன் மீதும் மக்கள் வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியம்.

இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்றுவதனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று பூச்சாண்டி காட்டிக்கொண்டிருப்பதை விடுத்து இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்தக் காணிகளில் மீள்குடியேற அனுமதிப்பதோடு மீள்குடியேற்றத்திற்கு தேவையான உதவிகளையும் அரசு விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் இல்லை என்று அரசு உறுதியாக நம்புகின்றது என்றால் ஏன் தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி எங்கள் நிலங்களைக் கையகப்படுத்தி வைத்திருக்கிறது என்ற அகதி வாழ்க்கை வாழும் மக்களின் கேள்வி நியாயமானதே. ஆனால் அந்தக்கேள்விக்கு உரிய பதிலளிக்க தயக்கம் காட்டுவதும் அகதிவாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வராமையும் அநீதியாகும்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டி விட்டோம் என்று சர்வதேச நாடுகளுக்கு முன்னுதாரணமாக தம்மைக் காட்டிக்



கொள்ளும் அரச தரப்பினர் தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட முற்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதவொன்று.

ஆயுதம் ஏந்தி தம்மின விடுதலைக்காக போராடியவர்களை பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தும் அரச தரப்பினர் தன் நாட்டு மக்களை பயங்கரவாதிகளைவிட மோசமாக நடத்துவதை எவ்வாறு அடையாளப்படுத்தப் போகின்றது.

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி இராணுவம் நிலைகொண்டுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்துங்கள். வாக்களித்த தமிழ் மக்களுக்கு



வாழ்க்கையில் வசந்தத்தை ஏற்படுத்துங்கள். மாற்றத்தை விரும்பியே வாக்களித்தனர் என்று வலியுறுத் தினால், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஒன்றும் ஜனாதிபதியில்லையே இராணுவத்தை வெளியேற்றுமாறுகூற என்று இன வாதத்தை வெளிப்படுத்தும் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் ஸ்ரீபால டி.சில்வா போன்றவர்களை எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்.

மக்கள் நலன்சார்ந்த விடயங்களை வெளிப்படுத்த மக்கள் பிரதிநிதிகள் முன்வரும் போது அவர் ஜனாதிபதியாகத்தான் இருக்கவேண்டுமா? என்பதை எதிர்க்கட்சித்தலைவர் புரிந்து கொள்வில்லையா? அல்லது வடக்கில் இருப்பவர்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகப் பார்க்கும் மனநிலையை இன்னும் சிங்களவர்கள் மாற்றமுற்படவில்லையா? என்று எண்ணத்தோன்றுகின்றது.

வடக்கில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அரசு கூறினாலும் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவில்லை. பல வடிவங்களில் பயங்கரவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டேயுள்ளன. அது அரச தரப்பினராலும் முன்னெடுக்கப்படுகின்றது. இதை உணர்ந்து செயற்படுவதோடு பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க மைத்திரி அரசு நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும்.

பயங்கரவாதிகள் என்று அரசு அறிவித்ததால் மட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று எண்ணுவதும் தவறு. அரசு அறிவிக்காததால் பயங்கரவாதிகள் இல்லை என்று கருதுவதும் தவறு. எவ்வாறாயினும் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்பதில் நாட்டு மக்கள் ஒரே மனோ நிலையிலேயேயுள்ளனர்.

ஆனால் யார் பயங்கரவாதிகள் என்பதில் மாற்றமுள்ளது.

காண்டீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுகநகர் திட்டத்தை முன்னெடுக்க சீனா புதிய பிரச்சாரம்

கடந்த வாரம் கொழும்பில் போக்கு வரத்து நெரிசலில் சிக்குண்ட முச்சக்கர வண்டியொன்றின் பின்பகுதியில் "நாங்கள் கொழும்பு *போர்ட் சிட்டி* திட்டத்தை ஆதரிக்கின்றோம்" என ஒட்டப்பட்டிருந்ததை காணமுடிந்தது. *போர்ட் சிட்டி*யின் படத்தையும் காண முடிந்தது. குறிப்பிட்ட முச்சக்கர வண்டி சாரதியிடம் இது குறித்து வினவியபோது அவர் "எனது வண்டியில் அதனை ஒட்டுவதற்காக பணம் கொடுத்தார்கள" என்றார், நிச்சயமாக பெருமளவு பணம் வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

புதிய அரசாங்கம் *போர்ட் சிட்டி* திட்டத்தை இடைநிறுத்திய பின்னர் மக்களின் ஆதரவை பெறுவதற்காக சீனா அரசாங்கம் பெருமளவு பணத்தை செலவுசெய்கின்றது. இலங்கையின் முக்கிய விளம்பர நிறுவனம் இதற்கான பிரச்சாரங்களை முன்னெடுத்துள்ளது.

குறிப்பிட்ட பிரச்சாரத்திற்கு பலன் கிடைத்துள்ளது என தெரிவிக்கலாம், கடந்த வாரம் குறிப்பிட்ட திட்டத்தை தொடர அனுமதிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதா என ஆராய்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுவொன்றை அமைச்சரவை நியமித்தது.

சிங்கப்பூரில் இடம்பெற்ற ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, சீனாவின் இராணுவ அதிகாரியை சந்தித்தன் பின்னரே இந்த குழு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சந்திப்பு குறித்து இந்தியன் *எக்ஸ்பிரஸ்* இவ்வாறு தெரிவித்திருந்தது- "சீனாவுடனான பாதிக்கப்பட்ட உறவுகளை இலங்கையின் மைத் திரிபால சிறிசேன அரசாங்கம் மிக வேகமாக சீர்செய்து வருகின்றது. என இந்திய செய்தித் தாளொன்று தெரிவித்துள்ளது."

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

"1.4 பில்லியன் டொலர்கள் செலவில் முன்னெடுக்கப்பட்ட கொழும்பு *போர்ட் சிட்டி* திட்டத்திற்கு சில திருத்தங்களுடன் அனுமதி வழங்கப்படலாம் என சிறிசேன அரசாங்கம் தெரிவித்து வரும்· அதேவேளை சீனாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பையும் அது மீள ஆரம்பிக்கவுள்ளது.

சிங்கப்பூரில் வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஆசிய பாாதுகாப்பு உச்சி மாநாட்டின் போது இலங்கை பிரதி பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தனது முப்படை தளபதிகளுடன் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதிதளபதிகளில் ஒருவரான அட்மிரல் சன் ஜியாங் கோவை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில்- 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஒரு முக்கியமான பொறிமுறை என்பதை இரு தரப்பும் ஏற்றுக்கொண்டனர்.

பாதுகாப்பு விவகாரங்களில் சீனா இலங்கைக்கு தொடர்ந்தும் உதவும் என சீனா அதிகாரி தெரிவித்துள்ளார்.


இதேவேளை இவ்வருட இறுதியில் இலங்கையில் நடைபெறவுள்ள வருடாந்த சீனா இலங்கை பாதுகாப்பு பேச்சுவார்த்தைகளில் சீனாவின் பங்களிப்பை எதிர்பார்ப்பதாக இலங்கை அமைச்சர் தெரிவித்துள்ளார்.


மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தின் போது சீனா நீர்மூழ்கிகள் இலங்கை துறைமுகத்திற்கு வந்ததை தொடர்ந்து இரு நாடுகளிற்கு மத்தியிலான பாதுகாப்பு உறவுகள் குறித்து அமெரிக்கா, மற்றும் இந்தியாவிற்கு கடும் கரிசனைகள் உண்டானது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுகம் மற்றும் கொழும்பு *போர்ட் சிட்டி* திட்டங்கள் ஆகியவற்றை, சீனாவின் சர்ச்சைக்குரிய கடற்படை தள திட்டத்தின் ஒரு பகுதியாகவே மேற்குலகம கருதுகின்றது.

ஜனவரி 8 ம் திகதி பதவிக்கு வந்ததும் சிறிசேன இவற்றை இடைநிறுத்தினார்.

ஆனால், சீனா இவற்றை சாதரணமாக எடுத்துக் கொள்ளவில்லை என அது தெரிவித்திருந்தது.




விளம்பரங்கள் மூலம் பிரச்சாரம்

சீனா முன்னெடுத்துள்ள பிரச்சாரங்கள், சிங்கப்பூரச் சந்திப்பு, சீனா இந்தியா தலைவர்கள் சந்திப்பு ஆகியவற்றின் மத்தியிலேயே அரசாங்கம் *போர்ட் சிட்டி* திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப் பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய தொடங்கியுள்ளது.

மோடியின் சீனா விஜயத்தின் போது இரு தலைவர்களும் தென்னாசியா மற்றும் *போர்ட் சிட்டி* திட்டம் தொடர்பான இந்தியாவின் அழுத்தங்கள் குறித்து ஆராய்ந்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் காலத்தில் இலங்கை தமிழர்கள் விவகாரத்திற்கு அவரை தீர்வு காணுமாறு சீனா அழுத்தங்களை கொடுக்க வேண்டுமென இந்தியா கேட்டுக் கொண்டிருந்ததாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இன்று இந்த நிலை மாறி சீனா *போர்ட்சிட்டி* திட்டத்திற்கான ஆதரவை இந்தியாவிடம்கோரவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.



துறைமுகநகரின் கற்பனைச் சித்திரம்

சிறிசேன அரசாங்கம்போர்ட் சிட்டி திட்டத்தை இடைநிறுத்திய பின்னர் சீன அரசாங்கம் பதட்டமடைந்தது உண்மை. கொழும்பிலுள்ள அதன் தூதரகம் உடனடியாக இங்குள்ள ஊடகவியலாளர்களை இலக்குவைத்தது. பலர் சீனாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர், அவர்கள் அங்கு அதிகாரிகளை சந்தித்தவேளை *போர்ட் சிட்டி* திட்டம் இடைநிறுத்தப்பட்டது தொடரபாக அதிகாரிகள் கவலை வெளியிட்டிருந்தனர்.

இதன் பின்னரே குறிப்பிட்ட பிரச்சாரங்கள் ஆரம்பமாகின. மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கு முக்கிய காரணமான பிரச்சாரங்களை முன்னெடுத்த நிறுவனத்தையே சீனா தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது

போர்ட்சிட்டி திட்டத்தை முன்னெடுப்பதற்காக சீனா மேற்கொண்டுள்ள முயற்சிகளை மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் சாதாரணமாக எடுக்க முடியாது. இந்த நாட்டின் மக்களின் மனதை மாற்றுவதற்காக வெளிநாட்டு அரசாங்கங்கள் நிதியை பயன்படுத்துவது ஆபத்தான ஒரு போக்கு.

கொழும்பிலுள்ள சீனதாவின் தூதரகத்திற்கும் மகிந்தராஜபக்சவிற்கும் இடையில் நெருக்கமான உறவுகள் உள்ளது என்பது வெளிப்படையான விடயம்,

மகிந்தவின் மீள் வருகைக்கான சாத்தியக்கூறுகள் குறித்து சின்குவா செய்தி ஸ்தாபனம் மகிழ்ச்சியுடன் செய்தி வெளியிடுகின்றது.

கொழும்பு *போர்ட் சிட்டி* திட்டத்தை அரசாங்கம் நிரந்தரமாக நிறுத்தினால் அடுத்து என்ன நடவடிக்கையை எடுப்பது என தங்களுக்கு தெரியும் என கொழும்பிலுள்ள சீனா தூதரக அதிகாரிகள் மிரட்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

*உபுல் ஜோசப் பெர்ணாண்டோ-*
*தமிழில் குளோபல் தமிழ் செய்திகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி



# காக்கா முட்டை

# திரைவிமர்சனம்

கோழிமுட்டை வாங்கிச் சாப்பிடக் காசில்லாததால் வீட்டுக்கு அருகிலுள்ள மரத்தில் காக்கை இடும் முட்டைகளைத் திருடி உடைத்து, குடித்துவிடுகிறார்கள் இரண்டுசிறுவர்கள். சிறுவர்களாக நடித்திருக்கும் ரமேஷ், விக்னேஷ் ஆகிய இருவரும் பாத்திரமாகவே இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

காக்காமுட்டையைக் குடிப்பதால் இரண்டுசிறுவர்களின் இயற்பெயரே தெரியாத அளவு அவர்கள் இருவரையும் பெரிய காக்காமுட்ட, சின்ன காக்காமுட்ட என்று எல்லோரும் கூப்பிடுகிறார்கள். அவர்கள்தாம் இப்படத்தின் நாயகன், நாயகி, நகைச்சுவைநடிகர் ஆகிய எல்லாமே.

சென்னையின் மையத்திலிருக்கும், சைதாப்பேட்டை பாலத்தின் அருகிலுள்ள குடிசைப்பகுதியைக் கதைக்களமாகவும், அங்கு வசிக்கும் மிக எளியமக்களைக் கதை மாந்தர்களாகக்கொண்டும் எடுக்கப்பட்டிருக்கும் இந்தப்படம் உலகமயமாதலின் விளைவுகளைப் பற்றிப் பேசுகிறது.

குடிசைப்பகுதி சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் இடத்தில் திடீரென பீட்சா கடை வந்துவிடுகிறது. அதன்பின் அவர்கள் சாலையில் நின்று அந்தக்கடையை வேடிக்கை பார்க்கமட்டுமே முடிகிறது. கடையைத் திறந்து வைக்க சிம்பு வருகிறார். சிம்பு வந்து பீட்சா சாப்பிடுவதைப் பார்த்ததும் இவ்விரு சிறுவர்களுக்கும் பீட்சா சாப்பிடும் ஆசை வந்துவிடுகிறது.

அப்பா சிறைக்குப் போய்விட்டதால் இவர்களைப் படிக்கவைக்கமுடியாமல் வீட்டிலேயே விட்டுவிடுகிறார் அம்மா. அந்த வேடத்தில் நடித்திருக்கும் ஐஸ்வர்யாராஜேஷுக்கு இது வாழ்நாள்வேடம். அவ்வளவு பொருத்தமாக இருக்கிறார். நடிப்பு என்று தெரியாத அளவு மிகஇயல்பாக நடித்திருக்கிறார்.

ரயில் தண்டவாளங்களின் ஓரத்தில் சரக்குரயிலில் இருந்து சிதறிவிழுகிற நிலக்கரிகளைப் பொறுக்கி விற்று அந்தக்காசைச் சேமித்து பீட்சா சாப்பிடத்திட்டமிடுகிறார்கள். 299 ரூபாய் விலையுள்ள பீட்சாவை அவர்கள் சாப்பிட்டார்களா? இல்லையா? என்பதுதான் படம்.

இதை வைத்துக்கொண்டு குடிசைப்பகுதி மக்களின் வாழ்நிலையை மிக எதார்த்தமாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர் மணிகண்டன். ஐஸ்வர்யாராஜேஷ் மற்றும் அவருடைய மாமியாராக நடித்திருக்கும் வயதான பெண்மணியும், குடிசைவாழ்மக்களின் பிரநிதிகள் போல் இருக்கிறார்கள்.

அவர்களுக்கான உரையாடல்கள் சமூகத்துக்குச் சவுக்கடி. மாமியாராக நடித்திருக்கும் பெண்மணி, பேரப்பிள்ளைகளுக்கு ஆதரவாகவே எப்போதும் பேசுவதும் அவர்களின் விருப்பத்துக்கேற்ப வீட்டிலேயே பீட்சா தயாரிப்பதும் ஒரேநேரத்தில் சிரிக்கவும் வேதனைப்படவும் வைக்கின்றன. அந்த மக்களை அரசியல் வாதிகளும் இடைத்தரகர்களும் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதையும் மிக அளவான காட்சிகளில் அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

சிறுவர்கள், பீட்சாகடை மேலாளரிடம் அடிவாங்கும் காட்சி காணொளியில் பதிவானதும், அது யார் யாருக்கு எப்படியெல்லாம் பயன்படுகிறது? அதை ஒவ்வொருவரும் எவ்வாறு பயன்படுத்த முனைகிறார்கள்? ஆகிய காட்சிகளில் சமூகஅவலங்கள் ஒவ்வொன்றாக வெளிவருகின்றன.

பீட்சாகடையைத் திறந்து வைக்க சிம்பு வருவதும் அதன்பின் அந்தக்கடையால் சிக்கல் ஏற்பட்டதும் உங்களால்தான் சிக்கலா? என்ற கேள்விக்கு சிம்பு அளிக்கும் பதிலும் தற்காலத்துக்கு மிகப்பொருத்தமாக இருக்கிறது. ரயில்வே தொழிலாளியாக நடித்திருக்கும் ஜோமல்லூரியும் சிறப்பாக நடித்திருக்கிறார். சிம்பு பீட்சா தின்னானா? ஏன் அவன் ரசம்சோறு சாப்பிடமாட்டானா? என்று கேட்கிற இடத்தில் திரையரங்கம் அதிர்கிறது.

குடிசைப்பகுதிச் சிறுவர்களுக்கு பீட்சா மோகம் வருவதும், கடைக்குள் அனுமதிக்க மறுப்பதால், புத்தாடைகள் எடுக்க மயிலாப்பூர் வரை போவதும் திரைக்கதைக்குப் பொருத்தமாக இருக்கின்றன, ஆனால், மற்ற நேரங்களில் மிகவிபரமாகச் செயற்படுகிற சிறுவர்கள் இந்தவிடயத்தில் மட்டும் அவ்வளவு விபரம் தெரியாதவர்கள் போல் சித்திரிக்கப்பட்டிருப்பது கொஞ்சம் உறுத்தலாக இருந்தாலும் அந்தக் குறையே தெரியாதபடிக்கு சிறுவர்கள், தங்களுடைய நடிப்பால் கவர்ந்திழுத்துவிடுகிறார்கள்.

மாடிவீட்டுப்பையன் கொடுக்கும் பாதி பீட்சாவைத் தம்பி சாப்பிடப்போகும்போது கையைப் பிடித்துத் தடுத்துவிட்டு கம்பீரமாக நடந்துபோவதும் பிறகொரு நேரத்தில், எச்ச பீசாவ துன்னுவியா என்று கேட்கும் போதும் அண்ணன் ரமேஷ் அசரவைக்கிறான். ஜாடிக்கேத்த மூடி மாதிரி அண்ணன் காட்டிய வழியில் அலட்டிக் கொள்ளாமல் செல்லும் தம்பி விக்னேஷ் பார்ப்போர் மனதைக் கொள்ளையடிப்பான் என்பதில் சந்தேகமேயில்லை.

ஜி.வி.பிரகாஷ்குமாரின் இசையில் பாடல்களும் பின்னணி இசையும் படத்துக்குப் பலம் சேர்த்திருக்கின்றன, பீட்சாவவிட ஆயா சுட்ட தோச எவ்வளவோ மேல் என்கிற ஒற்றை வார்த்தையில் ஓராயிரம் அர்த்தங்கள் உள்ளன. அவற்றைக் காட்சிப்படுத்த முயன்ற இயக்குநர் பாராட்டுக்குரியவர்.



## ஆஃப் த ரெக்கார்டு!



நம்பர் வன் நடிகரின் புதிய படத்தை அறிவித்த அதே நேரத்தில் அவரது முந்தைய படத்தின் பிரச்சினையே இன்னமும் முடியாமல் இழுபறியில் இருப்பதால் இந்த பிரச்சினை எங்கே இப்போது உருவாக உள்ள படத்தை பாதித்து விடுமோ என படக்குழு சற்றே யோசித்து வருகிறார்களாம்!

திருமணமாகி செட்டிலாகி விடுவார் என பல நடிகைகள் எதிர்பார்த்த நம்பர் வன் நடிகை திடீரென கல்யாணத்தை வேண்டாம் என கூறி மீண்டும் களத்தில் இறங்கி பல படங்களை லபக்கிக் கொண்டுள்ளாராம்.

இதனால் நமக்கு இந்த வாய்ப்பு கிடைக்கும் என நினைத்த சில நடிகைகள் கொஞ்சம் பல்லை நரநரக்கத் தொடங்கியுள்ளனர்.

விரல் நடிகரின் நாளொரு தள்ளிவைப்பால் கோலிவுட்டில் சலசலப்பு அதிகமாகி உள்ளது. மேலும் இப்போது நடக்கவிருந்த செய்தியாளர் சந்திப்பும் தள்ளிவைக்கப்பட நடிகர் தரப்பிலிருந்து மீண்டும் ஒரு தள்ளிவைப்பு என மீடியாக்கள் செய்திகளை வெளியிட அப்செட்டில் இருக்கிறாராம் விரலு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

**சென்றவாரம் வெளிவந்த குடியின் மறுபக்கம் கதையை மையமாகக் கொண்டு பேராசிரியர் தயாசோமசுந்தரம் அவர்கள் இவ்வாரம் நாம் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கின்றார். தொடர்ந்து அவருடைய நேர்காணல் வெளிவரும்.**

**1)குடிப்பதால் மனதிற்கு நிம்மதி ஏற்படுகின்றது என்று பலரும் சொல்கின்றார்கள். இதனைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

ஆரம்ப காலத்திலிருந்து எங்களுடைய சமூக, கலாசார பண்பாட்டியல் அம்சங்களோடும் சரித்திரப் பின்னணியோடும் ஒன்றிணைந்த ஓர் விடுபடமுடியாத அம்சமாக குடிகாணப்படுகின்றது. அதாவது சமூகமயமாக்கலின் கூறுகளில் குடிப்பது ஒருவிடயமாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பொதுவாக கொண் டாட்டங்கள், வைபவங்கள் ,பிரியா விடை நிகழ்வுகள், இறந்தவீடு என்று பல நிகழ்வுகளிலும் மதுபானத்தை பலரும் அருந்துகின்றனர். ஏன் மேற்கத்தைய சமூகங்களில் அவ்வாறு மது அருந்தாதுஒதுங்கி இருப்பவர்கள் மீது ஒரு எதிர்மாதிரியான பார்வையும் விழுகின்றது. மேற்கத்தேய நாடுகளில் ஏதாவது ஒருகொண்டாட்டம் நடந்தாலும் அங்கு மதுபானம் அருந்துவது ஒருமுக்கிய இடத்தை பிடிக்கின்றது. மற்றவர்களோடும் சமூகத்தோடும் ஒரு உறவை ஏற்படுத்துவதற்கு குடியை பாவிக்கின்றார்கள். எங்களுடைய பிரதேசங்களில் நாள் முழுவதும் கடினப் பட்டு வேலைசெய்து வீட்டிற்குவரும் ஆண்கள் தங்களுடைய உடல் களைப்பைபோக்க கள்ளு அருந்துவது வழக்கமாக இருக்கிறது. சில ஊர்களில் குடிக்காதவர்களை கண்டுபிடிப்பதே கடினமாக இருக்கும். மேற்கத்தேய நாடுகளில் பெணகளும் ஆண்களைப்போலவே குடிப்பழக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். ஆனாலும் மேற்கத்தேய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எங்களுடைய பிரதேசங்களில் பெண்கள் இவ்வாறான குடிப் பழக் கத்திற்கு ஆளாவதில்லை. சில பெண்கள் கசிப்பு உற்பத்தி செய் வது, விற்பனை செய்வது போன்ற விடயங்களில் ஈடுபடுகின்றனர். அப் பெண்கள் குடிப்பழக்கத்துக்கு ஆளாகின்றனர்.


குடித்துவிட்டுமற்றவர்களைத் துன்புறுத்துவது,வீட்டில் மனைவி பிள்ளைகளை அடிப்பது, கட்டுக் கடங்காதவன் ஆளுமைச் செயற்பாடுகளை வெளிப்படுத்துவது என்றில்லாமல் அளவாக சிறியளவிலே மது அருந்திவிட்டு வீட்டில் அமைதியாக இருப்பது ஓரளவு ஏற்கப்படலாம். சிலர் தங்களுடைய பொருளாதார நிலை, குடும்ப நிலை, சமூகத்தில் அவர்களுக்கிருக்கும் மரியாதை இவற்றைமறந்து அதிகமாக குடித்து தங்கள் உடலையும் உள்ளத்தையும் பாதிப்படைய செய்கின்றார்கள். அவர்களைப் போன்றவர்களுக்கு கட்டாயம் குடிக் கெதிரான சிகிச்சை செய்யப்பட வேண்டும். சிறிதளவு குடித்துவிட்டு தங்கள் உடல்நலத்திலும் குடும்ப நலத்திலும் அக்கறை செலுத்தி வருபவர்களால் பெரிதளவில் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. இருந்த போதும் சிறிதளவு குடிப் பழக்கத்திற்கு ஆளானவர்கள் படிப்படியாககுடிக்குஅடிமையாகாமல் இருக்க வேண்டும்.குடிக்கு அடிமையாகி ஒவ்வொருநாளும் குடிப்பதும் அவ்வாறு குடியை விட்ட நாட்களில் உடலில் மாற்றங்கள் ஏற்படுதல், கை நடுக்கம்,நா உலர்தல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுமாயின அது குடிக்கு அடிமையான நிலையைக் காட்டும். காலையில் எழும்பியவுடன்குடிக்க வேண்டும், வேலைமுடித்தவுடன் குடிக்க வேண்டும்,குடித்தவுடன் வீட்டில் வன்முறையில் ஈடுபடுதல்,வீட்டில் பொருட்களை உடைத்தல்போன்ற செயற்பாடுகளும் குடிக்கு அடிமையான நிலையைகாட்டும்.

இதைவிட ,குடிப்பிரச்சினையானது தனிநபர் குடும்ப சமுதாய மட்டத்தில் பல்வேறு தளங்களில் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றது. அதாவது சமூகத்தில் நடைபெறுகின்ற சிறுவர் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள், வன்முறைகள்,கொலை, கொள்ளை, தற்கொலை,குடும்பவன்முறை, அடிதடி,குழுச் சண்டைபோன்ற பல பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாகின்றது.

குறிப்பாக விபத்துக்கள் பலவற்றிற்கும் குடி முக்கிய காரணமாகின்றது. குடித்து விட்டு வாகனங்களை ஓட் டுவது, மிகப்பெரிய விபத்துக்களை ஏற்படுத்துவது என்று பிரச்சினைகள் நீண்டு கொண்டு செல்கின்றன. ஆனாலும் சிலர் சிலவகையான நோய்களுக்கு சிறிதளவு மது அருந்துவது நல்லது எனக் கூறுவார்கள். இருதயநோய் போன்ற நோய்கள் குறிப்பிடத்தக்கவை.

குடியின் பாதிப்புக்களில் இருந்து மக்களை முற்றுமுழுதாக மீட்க வேண்டும், குடியைமுற்று முழுதாக நிறுத்த வேண்டும் என்று சொல்ல முடியாது.நடைமுறையிலும் சாத்தியமில்லை! ஏனென்றால் சமூகத்தோடு குடிஒன்றித்த விடயமாகிவிட்டது. ஆனாலும் அளவுக்கு மீறிகுடித்து பிரச்சினை பண்ணுவதென்பது சமூகத்தில் பல்வேறுமட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதிலும் யுத்தத்திற்குபின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உளசமூகப் பணி புரியும் வேளையில் குடியை ஒரு முக்கிய பிரச்சினையாக எம்மால் அவதானிக்கமுடிந்தது. வடக்கில் வருடாவருடம் குடிப்பவர்களின் எண்ணிக்கையும் உள்ளெடுக்கப் படும் மதுவின் அளவும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. (கீழே காட்டப்பட்டுள்ள தரவுகளில் பார்க்கலாம்)

உரு. 2, மது பாவனை
(யாழ் மாவட்டத்தில் ஒருவருடத்தில் பாவிக்கப்பட்ட லீற்றர் அளவு)




2013ற்கான தரவுகள் எதிர்வுகூறலுக்குரியது, ஆடி மாதம் வரை
கசிப்பின் விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை
மூலம்; மதுவரித் திணைக்களம், யாழ். மாவட்டம்.

பதகளிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு குடிசில வேளைகளில் உதவலாம். மற்றவர்களுக்கு முன்னால் நின்று பேசுவதற்கு வேண்டிய தைரியத்தை உருவாக்கவும், மற்றவர்களோடு பேசுவதற்கு, முன்னுக்கு வருவதற்கு இருக்கின்ற பயத்தை போக்குவதற்கும், பதற்றத்தை குறைக்கவும் சிலர் குடிக்கின்றனர். பயத்தை ஏற்படுத்தும் செயலை செய் வதற்கு குடிப்பதன் மூலம் தைரியத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். சென்றவாரம் வெளி வந்தகதையில் காணப்படுகின்ற நிலை சற்று வித்தியாசமானது. அதாவது யுத்தத்தின் போது தன்னுடைய மனைவியை கண்ணுக்கு முன்னாலே பறிகொடுத்தது அவர் மனதில் மாறாத வடுவாக இருக்கின்றது. அதுவும் கொடூரமான முறையில் நடந்து முடிந்த மனைவியின் இறப்பும் அவ டைய உடலை அடக்கம் செய்ய முடியாமல் தடுமாறியதும், தொடர்ந்து பயங்கர சூழலில் இருந்து பிள்ளைகளுடன் தப்பி வந்ததும் அவருடைய மனதில் மனவடுவாக பதிந்துவிட்டது. மனைவியின் இழப்பு அவருடைய ஆழ்மனதுக்குள் சென்று வடுவாகப் பதியப்பட்டு, காலப் போக்கில் அதனுடைய தன்மை படிப்படியாக வெளிப்படுகின்றது. அந்தச்சம்பவம் நினைவுக்கு வரும் போது, அல்லது அது போன்ற சம்பவங்களைக் கேட்கும் போது, மீண்டும் அந்தச் சம்பவம் நடப்பது போலஅவர் உணரக்கூடும். அத்துடன் தன்னுடைய மனைவியைச் சரியான முறையில் அடக்கம் செய்ய முடியாமற் போனதால் மனதில் ஏற்படும் குற்றவுணர்வு, இழவிரக்கம் போன்ற மனக் குழப்பமான நிலையிலிருக்கின்றார். தன்னுடைய மனக் குழப்பத்தைக் குறைப்பதற்கும், அந்த நினைவுகளிலிருந்து விடுபடுவதற்கும், தன்னை அமைதிப்படுத்துவதற்குமாக அவர் மதுவை அருந்துகின்றார். மதுவுக்கு அந்த தன்மை இருக் கின்றது.

அவருடைய உடல் உளமாற்றங்களைக் கட்டுப்படுத்தி அவற்றை மறக்கவைக்கும் தன்மை இருக்கின்றது. ஆனாலும் அதனை அதிகளவில் உள்ளெடுத்தால் ஏற்கனவே இருக்கின்ற பிரச்சினைகளோடு மது அடிமை நிலையும், வேறுநோய்களும் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. கதையில் வருகின்ற நபர் குடித்தாலும் தன்னுடையவீட்டு (மனைவியின்) வேலைகளையும், பொறுப்புக்களையும் உரியநேரத்தில் செய்து முடிப்பதுடன்,அன்றாடம் செய்ய வேண்டிய பிள்ளைகளின் கடமைகளையும் சரியாகச் செய்துமுடிக்கின்றார். பிள்ளைகளையும் அடித்து துன்புறுத்தாது, தன்னுடைய செயற்பாடுகளிலும் பொறுப்புக்களிலும் தவறாமல் இருக்கின்றார்.

நடந்து முடிந்த போருக்குப் பின்னர், பலதாக்கங்களை எதிர் கொண்ட மக்கள் மனவடு, மனச் சோர்வு, பதகளிப்பு, இழவிரக்கம் போன்ற உளவியற் பிரச்சினைகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதுவரையிலும் இப்பிரச்சினைகள் சரியானமுறையில் அடையாளங் காணப்பட்டுத் தீர்த்து வைக்கப்படவில்லை. அவர்களுக்கு வேண்டிய உளசமூக உதவிகள், சிகிச்சைகள் போதுமான வகையில் வழங்கப்படவில்லை என்பது மனவருத்தத்துக்குரிய விடயமாகும். ஆனாலும் அங்குள்ள மக்கள் இவ்வாறான மனவடுக்களுடன் வாழப்பழகி விட்டார்கள். அவர்கள் சாதாரணமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட அவர்களுடைய வாழ்க்கை சீரானமுறையில் செல்கின்றது என்று கூறமுடியாது. கதையில் வருபவரும் குடும்பத்தைப் பார்க்கின்றார்,பொறுப்புடன் பிள்ளைகளைக் கவனிக்கின்றார். இருந்த போதும் அவரால் குடியை விட முடியவில்லை. அவருக்கு வேண்டிய உளவியற் சிகிச்சைகளை வழங்கினால் அவருடைய மனதிலிருக்கின்ற ஆறாதவடுவை சிறிதளவு மறக்கவைக்கலாம். முற்று முழுதாக விடுபடவைக்க முடியா விட்டாலும், ஓரளவு அவருடைய வாழ்க்கையை பயனுள்ள முறையில் கொண்டுசெல்வதற்கு முயற்சிக்கலாம். போருக்குப் பின்னர் ஏற்பட்டதுயரங்கள், கஷ்டங்களை மறப்பதற்காக அவர் குடிக்கின்றார். இவரைப் போன்ற பலர் வன்னியில் இருக்கின்றனர். உலக அளவில் செய்யப்பட்ட பல ஆய்வுகளில், "மிகப் பெரிய அனர்த்தங்கள் ஏற்பட்ட பிரதேசங்களில், அனர்த்தத்துக்குப் பின்னர் மதுபாவனையின் தாக்கம் பெரிதளவில் முக்கியம் பெறுகின்றது" என்று குறிப்பிடப்படுகின்றது. மேற்கூறப்பட்ட கதை ஒரு சிறிய உதாரணம். அவர் தன்னுடைய கவலையை மறக்கவும், அதிலிருந்து விடுபடவும் மதுபானம் அருந்துகின்றார். மதுபானம் சிலவேளைகளில் இவ்வாறான வேலைகளையும் செய்கின்றது. நாம் பரந்தநோக்கில் பார்த்தோமாயின் சில இடங்களில் அதன் நன்மைகள் தெரிய வருகின்றது. குடி போதையில் வீட்டுக்கு வந்து வன்முறைகளை வெளிப்படுத்துபவர்களுக்கு மத்தியில் குறித்த நபர் சற்று வித்தியாசமாக இருக்கின்றார். இவரைப் போலவே வேறுசிலரும் இருக்கலாம். ஆகை யால் குடியை முற்று முழுதாக நிறுத்தவேண்டும், சட்ட விரோதமாக்கப்படவேண்டும் என்று நாம் முயற்சி செய்ய முடியாது.

(தொடரும்)


வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:
Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயல் தென்றலானது!



## சிறுகதை

சுகுமார் முற்றத்தில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்தவாறு எதைக் கருவாகக் கொண்டு சிறுகதை எழுதலாம் என்று கருவைத் தேடி தனது கற்பனைப் பறவையை பறக்கவிட்டார். அவர் ஒரு அரசாங்க உத்தியோகத்தர். பத்திரிகைக்கு சிறுகதைகள் எழுதுவதில் அவருக்கு பிரியம். சமுதாயத்தில் தனக்கும் அந்தஸ்து இருப்பதாக ஒரு ஆத்ம திருப்தி. கதைகள் யதார்த்தமாக இருக்க வேண்டும் என்பதில் அவர் எப்போதும் கவனமாக இருப்பார்.

வழமைபோல் உரத்த சத்தமும், உடைந்து போகின்ற சத்தமும், அழுகுரலும் சேர்ந்து அவருடைய கற்பனையை தடுத்து நிறுத்தின. அந்த ஆரவாரம் அவருடைய வீட்டுக்கு அயலில் இருந்துதான் கேட்டது. அந்த வீட்டில் வசிப்பவர், சிவராசா. அவர், ஒரு புடவைக் கடையில் வேலை செய்கிறார். அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் விமலன். அடுத்த இரண்டும் பெண் பிள்ளைகள். அவர்கள் சிறிய பிள்ளைகள். விமலன் கா.பொ.த உயர்தரம் இரண்டு தடவைகள் பரீட்சை எடுத்தவன். பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கு புள்ளி போதாது. இப்போது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, நண்பர்களுடன் ஊர் சுத்தித் திரிகிறான். அவனுக்கு இரவு, பகல் என்ற வித்தியாசம் இல்லை. ஏதாவது காரணம் கண்டுபிடித்து வீட்டிலே ஒரு அமர்க்களத்தை ஏற்படுத்துவது அவனுக்கு வாடிக்கையாகிவிட்டது.

சுகுமாருக்கு அந்தக் குடும்பத்தினரை நினைக்க கவலையாக இருந்தது. ஒருவனாலே அந்தக் குடும்பத்தின் நிம்மதியே கெட்டுப்போகிறது. சமைத்த உணவைக் கூட நிம்மதியாக உண்ண அவர்களால் முடியவில்லை.

சாய்மனைக் கதிரையை விட்டு எழுந்துவந்து நேரத்தைப் பார்த்தார். இரவு பத்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. கதவை பூட்டிவிட்டு படுக்கையில் சாய்ந்தார்.

அந்தக் குடும்பத்தில் ஒரு அமைதியை ஏற்படுத்த முடியாதா? ... அது அவர்களின் விதியா? ...

மனிதனால் முயற்சித்து முடியாமல் போனால் அதுதான் விதி என்பது. அவருடைய நிலைப்பாடு. எதற்கும் முயற்சித்துப் பார்ப்போமே! நீண்ட சிந்தனை அவருடைய மனதை சோர்வடையச் செய்ய, கண்களை மூடிக் கொண்டார்.

அடுத்தநாள் மாலை ஐந்து மணியளவில் பத்திரிகைகள் வாசிப்பதற்காக வாசிகசாலையை நோக்கி சுகுமார் துவிச்க்கர வண்டியில் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு விளையாட்டு மைதானம். விமலன் தனிமையில் துவிச்சக்கர வண்டியில் சாய்ந்தபடி அங்கே நடைபெறும் துடுப்பாட்டத்தை பார்த்துக்கொண்டிருப்பதை கவனித்தார். ஏதோ ஒரு உந்துதலில் அவன் நிற்கும் இடத்தை நோக்கி, தன்னுடைய துவிச்சக்கர வண்டியை திருப்பினார். "தம்பி ஒருக்கால் அந்த வாசிகசாலையடிக்கு என்னோடு வரமுடியுமா?" விமலன் பதில் கூறாமல் துவிச்சக்கர வண்டியை எடுத்தான். இருவருடைய துவிச்சக்கர வண்டிகளும் அந்த வாசிகசாலையில் ஒதுக்குப்புறமாக இருந்த வேப்பமரத்தடியில் நின்றன.

"கொஞ்ச நேரம் நான் உம்மோடு கதைக்க விரும்புகிறேன். நீர் என்னிடம் மரியாதை வைத்திக்கிறீர் என்ற நம்பிக்கையிலேதான் நான் இப்படிக் கேட்கிறன். உமக்கு ஆட்சேபனை இல்லையா?"

"இல்லை அங்கிள்."

"சரி இதில உக்காருவோம்." இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். சுகுமார், பேச்சைக் கொடுத்தார். "நான் முதல்ல கதைக்கிறன்பிறகு உம்முடைய கருத்தைச் சொல்லும். நான் உம்மை என்னுடைய பிள்ளையாத்தான் பார்க்கிறன். உங்களுடைய வீட்டுப்(குடும்பப்) பிரச்சினைதான். அதில நான் தலையிடுறதா நினைக்காதையும். நான் உங்கடை குடும்ப நன்மையை மனதில வைச்சுத்தான் கதைக்கிறன்.

நாங்கள் எல்லாரும் உணர்ச்சியுள்ள மனிதர்கள். எப்படி வாழ்ந்தாலும் என்றோ ஒரு நாள் இந்த மண்ணைவிட்டுப் போகவேண்டியவர்கள்தான். நிரந்தரமில்லாத வாழ்க்கையை துன்பத்தில் ஏன் கழிக்க வேணும்? கொஞ்சம் யோசித்துப் பாரும். விமலன் தலையைக் குனிந்த வண்ணம் இருந்தான். சுகுமார் தன்னுடைய பேச்சைத் தொடர்ந்தார்.

நீர் இரவு, பகல் என்று பாராமல் அடிக்கடி சண்டை போடுறீர். அதற்கு காரணம் இல்லையென்று நான் சொல்ல வரேல்ல. ஆனாலும் உம்முடைய பெற்றோர், சகோதரர்களின் மன நிலையை ஒருதரம் எண்ணிப்பாரும். நீர் படித்தனீர். உம்மால் சிந்திக்க முடியும்.

நீர் சின்னப்பிள்ளையாக இருந்தபோது, உம்முடைய மழலை வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்த உமது பெற்றோர், உம்முடைய எதிர்காலத்தைப் பற்றியும், தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றியும் எவ்வளவு கனவுகளோட இருக்கினம். நீர் அவர்களைப் புரிந்துகொள்ளாமல் இப்படி தினமும் சண்டை செய்கிறபோது அவர்களுடைய மனநிலை எப்படியிருக்கும். நீர் அவர்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவேணும். உம்முடைய சகோதரர்களை ஒரு முறை நினைத்துப் பாரும். சின்ன வயது அவர்களுக்கு! பயத்தில கத்துகிறார்கள். அவர்களுடைய மனநிலை எப்படிப் பாதிப்படையும் என்று கொஞ்சம் யோசித்துப் பாரும். அவர்களுக்காகவாவது நீ கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போக வேணும் என்று நான் கருதுகிறன். ஏனென்றால் நீர் ஏ.எல் வரை படித்தவன் உனக்கு பல பிரச்சினைகளைப் பற்றியும் புரிந்துகொள்ள முடியும். நீர் நினைத்தால் ஒரு முன்மாதிரியான ஆளாக நடந்துகாட்ட முடியும். சரி, இனி உம்முடைய கருத்தைச் சொல்லும்." சுகுமார் பேச்சை நிறுத்திக்கொண்டு அவன் கூறப்போவதைக் கேட்கும் ஆவலில் விமலனுடைய முகத்தைப் பார்த்தார். அவனும் கீழே குனிந்திருந்த தலையை நிமிர்த்தாமல் பேசத் தொடங்கினான்.

"நான் படிப்பை நிறுத்திப் போட்டன். என்னுடைய படிப்பை வைச்சுக்கொண்டு ஒரு வேலை பெறமுடியாது! அதுதான் என்னை வெளியாலை அனுப்பச்சொல்லி கேட்கிறன். அதை செய்துவிட்டால், ஒரு பிரச்சினையும் வராது அங்கிள்."

சுகுமார் கேட்கிறார். "உங்களிட்டை அதுக்கு வசதி இருக்கா?"

"தோட்டக்காணியை விற்றுத் தரலாம்."

"தம்பி உம்முடைய அப்பாவின்ரை கடைச் சம்பளம் சீவியத்துக்கு காணுமோ! இந்த தோட்டவருமானமும் சேர்ந்துதானே மற்றவர்களிடம் மன்றாடாமல் உங்களை கௌரவமாக வாழச் செய்யுது! அதுமட்டுமல்ல பணத்தை கொடுத்தாலும் கொடுத்தாலும் வெளிநாடு போகலாம் என்பது நிச்சயமில்லை. பத்திரிகை வாசிக்கிற உமக்கு நடுக்கடலல்ல நடக்கிற விடயங்கள் தெரிந்திருக்கும்... அவுஸ்திரேலியாவுக்கு என்று போனவையள் இன்னமும் ஆளில்லா தீவுகளில அகதி முகாம்களில அடைச்சு வைக்கப்பட்டிருக்கினம்.

வெளியில அனுப்புறம் என்று சொல்லிக் காசை வாங்கின கொம்பனிகள் எத்தினைபேரை ஏமாற்றியிருக்கினம். இதால எவ்வளவுபேர் கடன் சுமையால அவதிப்படுகினம். முந்தியொருகாலம் இது கொஞ்சம் இலகுவாக நடந்தது. ஆனால், இப்போ ஆளுமில்லை பணமும் இல்லை என்கிற நிலைமைதான் அதிகமாக இருக்கு இல்லையா."

"முன்னுக்கு வரவேணும் என்டால், கஸ்டப்பட வேணும் தானே அங்கிள்."

"ஏன்தம்பி! இந்த தோட்டத்தை வைத்து உம்மால முன்னுக்கு வரமுடியாதா...? என்னுடைய அப்பா, ஒரு கமக்காரர். தோட்டம் செய்துதான் என்னுடைய அக்காமார் இருவருக்கு நல்ல இடத்தில திருமணம் செய்து வைத்திருக்கிறார். என்னையும் படிப்பிச்சு ஒரு உத்தியோகத்தராக ஆக்கியிருக்கிறார். கடைசியாக ஒன்றைக் கூறுகிறேன்; தம்பி! காலமெல்லாம் வேதனையுடன் வாழ்ந்து கடைசியில் கண்களை மூடுவதுதான் வாழ்க்கையல்ல. நீர் நினைத்தால் இன்றிலிருந்தே உங்களுடைய குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும். இல்லையா!" விமல் எதையோ சிந்தித்தவாறு ஒன்றும் பேசாது அமர்ந்திருந்தான். சுகுமார் போவதற்காக எழுந்தபோது அவனும் எழுந்தான்.

சுகுமார் சொன்னர். "சரி போயிட்டுவரும் தம்பி. நான் பேப்பர் படிக்கப்போறன் ... உம்மட்டையிருந்து நல்ல செய்தியை எதிர்பார்க்கிறன்...

விமலன் ஒரு மெல்லிய சிரிப்புடன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

அன்றிலிருந்து சில மாதங்களாக சுகுமார் விமலனைச் சந்திக்கவில்லை. ஒரு நாள் இரவுவேளை விமலன் சுகுமார் வீட்டுக்கு வந்திருந்தான். அப்பொழுது சுகுமார். முற்றத்தில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்தவாறு அன்றைய பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தார். தனக்கு முன்னால் ஒருவர் நிற்பதை தற்செயலாகப் பார்த்தார்.

"என்ன விமல் கண்டு கன காலம்!" அவன் கையில் வைத்திருந்த ஒரு பொதியை அவரிடம் நீட்டினான்.

"என்ன இது?" சுகுமார் கேட்டார்.

"புளுக்கொடியல்" விலைக்கு வாங்கிக் கொண்டுவாறியோ?

"இல்லை அங்கிள் நான் வடமராட்சியில மாமா வீட்டுக்குப் போயிருந்தன். விதை வெங்காயம் பார்க்கத்தான். நீங்கள் சொன்னமாதிரி நான் விவசாயத்திலதான் இறங்கியிருக்கிறன்."

சுகுமார் ஆச்சரியத்துடன் விமலனை ஏறிட்டுப் பாத்தார்.

"விமல்! எவ்வளவு ஆச்சரியமாக இருக்கப்பா நீ சொல்லுறதைக் கேட்க. எவ்வளவு சந்தோசமாக இருக்கு! எனக்கு இந்த சந்தோசம் என்டால், உமது பெற்றோருக்கு எப்படியிருக்கும்! இப்போ உன்னுடைய முகத்தில எவ்வளவு செந்தளிப்பு தென்படுகிறது! கடவுளின்ர அனுக்கிரகம் உனக்கு இருக்கிறதாலதான் இப்படியொரு மாற்றம் நிகழ்ந்திருக்கு."

அவர்கள் கதைத்துக்கொண்டிருந்தபோது சுகுமாரின் மனைவி இரண்டு பேருக்கும் தேநீர் கொண்டுவந்து கொடுத்தார். நன்றி கூறிவிட்டு விமலன் அதை வாங்கிக்கொண்டான். தேனீரைக் குடித்து முடித்ததும் விமலன் வீடு செல்வதாக எழுந்தான்.

தன்னுடைய சிறுகதைகளில் ஒன்று உயிர்பெற்றுச் செல்வதைக் காணும் பிரமையில்- சுகுமார், விமலன் செல்வதைப் பார்த்தவண்ணம் இருந்தார்.

**க. தர்மலிங்கம்,**
**கோண்டாவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோடி நம்பர் 01

டென்னிஸ் உலகின் இரட்டையர் பிரிவில், இப்போது நம்பர் 1 ஜோடி சானியா மிர்ஸா - மார்ட்டினா ஹிங்கிஸ். இந்தியப் பெண் ஒருவர், உலக டென்னிஸ் தரவரிசையில் முதல் இடம் பெறுவது இதுவே முதல்முறை. 10 ஆண்டுகளுக்கும் மேலான சானியாவின் டென்னிஸ் வாழ்வில் இது மைல்கல் சாதனை. மார்ட்டினா ஹிங்கிஸ்'க்கோ மறுஜென்மம்.

இந்த ஆண்டு மார்ச் மாதம்தான் மார்ட்டினா ஹிங்கிஸ்'டன் இணைந்து விளையாட ஆரம்பித்தார் சானியா. இரண்டே மாதங்களில் மூன்று சம்பியன்ஷிப் பட்டங்கள் தட்டி, உலகின் நம்பர் 1 ஜோடி' என்ற உச்சத்தைத் தொட்டுவிட்டார்கள்.

நான் ஒரு டென்னிஸ் வீராங்கனை என்பதைத் தாண்டி என் உடை, மேக் - அப், பெர்சனல் வாழ்க்கை... என எல்லாமே வேறுவிதமாகப் பார்க்கப்பட்டது. பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவரை நான் மணந்ததால் சானியா, இந்தியர் இல்லை' என்றுகூடச் சொன்னார்கள். டென்னிஸைவிட்டே போய்விடும் அளவுக்கு, காயங்களால் அவதிப்பட்டேன். அவற்றை எல்லாம் கடந்து, தற்போது நம்பர் 1 இடத்தைப் பிடித்திருக்கிறேன். என்னால் அழுகையை அடக்க முடியவில்லை என மகிழ்ந்து நெகிழ்கிறார் சானியா.

வேகமாக வரும் பந்தை, வந்த வேகத்திலேயே திருப்பி அடிப்பதில் சானியா செம கில்லி. வேகமாக சர்வ் செய்வது என் பலம். எங்கள் இருவருடைய பலம் எந்த அளவுக்கு நன்றாகத் தெரியுமோ, அதேபோல எங்கள் பலவீனமும் எங்களுக்குத் தெரியும். டென்னிஸ் பார்ட்னர்ஸ் என்பதைத் தாண்டி, நாங்கள் நல்ல நண்பர்கள் ஆகிவிட்டோம். அதனால்தான் இணைந்த இரண்டே மாதங்களில் நம்பர் 1 இடத்தைத் தொட முடிந்தது பார்த்துக் கொள்ள வேண்டும்.

2010ஆம் ஆண்டில் என் மணிக்கட்டில் காயம் ஏற்பட்டபோது, இனிமேல் டென்னிஸ் விளையாட முடியாது என்ற நிலை உருவானது. என் தலைமுடியைக்கூட என்னால் வார முடியவில்லை. என் டென்னிஸ் வாழ்க்கை அவ்வளவுதான்' என நினைத்தேன். அப்போதுதான் ஷோயிப் மாலிக்கைத் திருமணம் செய்தேன். திருமணம்தான் என்னை மன வலியில் இருந்து மீட்டுக் கொண்டு வந்தது. ஆறு மாதங்கள் கழித்துத்தான் டென்னிஸ் ராக்கெட்டைத் தொட்டேன்.

ஒற்றையர் பிரிவில் இனி விளையாட வேண்டாம் என



என உற்சாகமாகப் பேசுகி றார் மார்ட்டினா ஹிங்கிஸ். சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த மார்ட்டினா, 14 வயதில் டென் னிஸ் விளையாட வந்தவர்.

16 வயதிலேயே அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் சம்பியன் பட்டத்தை வென்று, உலகில் மிக இளம் வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என சாதனை படைத்தவர். மிக இளம் வயதில் உலகின் நம்பர் 1 வீராங்கனை என்ற சாதனையும் இப்போது வரை மார்ட்டினா ஹிங்கிஸ் வசம்.


காயம் காரணமாக தன் 22ஆவது வயதில் டென்னி ஸைவிட்டு வெளியே போக வேண்டி வந்தது மார்ட்டி னாவுக்கு. நான்கு ஆண்டு கள் டென்னிஸ் பக்கமே தலைகாட்டவில்லை. ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இரண்டு முறை ஓய்வில் இருந்து மீண்டு வந்து விளையாடிய மார்ட்டினா வால், பெரிய வெற்றிகளை ஈட்ட முடியவில்லை. இந்தச் சூழலில்தான், கடந்த ஆண்டு டில்லியில் நடைபெற்ற சம்பியன்ஸ் டென்னிஸ் லீக் போட்டியில் விளையாட வந்தார். டில்லியில் சானியா - மார்ட்டினா நட்பு மலர, இப்போது உலகின் நம்பர் ஒன் என்ற உச்சம் தொட்டு விட்டனர்.

டென்னிஸ் ப்ளேயராக இருப்பதை எப்படி உணர் கிறீர்கள்? என என்னிடம் கேட்பார்கள். மிக வலி நிறைந்ததாக உணர்கிறேன் என்பதுதான் என்பதில். வருடத்தில் 11 மாதங்கள் தொடர்ந்து டென்னிஸ் விளை யாட வேண்டியிருக்கும்.

100 சதவிகிதம் ஃபிட்டாக இருந்தால் மட்டுமே டென் னிஸ் விளையாட முடியும். தவிரவும் ஈஸியாக காயம் அடையக்கூடிய விளை யாட்டும் இதுதான். காயம் அடையாமலும், சர்ச்சை களில் சிக்காமலும் முடிவெடுத்து இரட்டையர் பிரிவில் மட்டும் கவனம் செலுத்தினேன். நான்கு ஆண்டுகள் தொடர்ந்து எடுத்துக்கொண்ட கடுமை யான பயிற்சிதான் இந்த வெற்றிக்குக் காரணம். நிறையப் பேருடன் இரட் டையர் பிரிவில் இணைந்து விளையாடியிருக்கிறேன். ஆனால், மார்ட்டினா செம ஸ்பெஷல்.

மிக இளம் வயதிலேயே சம்பியன்ஷிப் பட்டத்தையும், உலகின் நம்பர் 1 வீராங்கனை பட்டத்தையும் வென்றவர் மார்ட்டினா.

அதனால் நம் சாதனைகள் ஒன்றும் அவ்வளவு பெரியது அல்ல' என என்னை எப் போதும் தரையில் வைத்தி ருக்க உதவுகிறார் எனச் சொல்லிப் பூரிக்கும் சானியா. என்னால் எவ்வளவு காலம் முடியுமோ, அவ்வளவு காலம் விளையாடுவேன். டென்னிஸில் இருந்து ஓய்வுபெற்றவுடன் குழந்தை பெற்றுக்கொள்வேன். அப்போதுதான் குழந் தையை முழு நேரமும் கவனித்துக் கொள்ள முடியும். அதுவரை விளையாட்டில் மட்டுமே என் கவனம் என் கிறார். இன்னும் உயரம் தொட வாழ்த்துகள் சானியா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org